Sankara Rajendra Cholan Ula

சங்கர ராசேந்திர சோழன் உலா

மூலமும் குறிப்புரையும்

Published with the financial assistance from the Govt. of India,
Department of Culture

by

MAHAMAHOPADHYAYA

Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

TIRUVANMIYUR, MADRAS-600 041

1977

சங்கர ராசேந்திர
சோழன் உலா

வாகீச கலாநிதி

கி. வா. ஜகந்நாதன்

எழுதிய

குறிப்புரையுடன்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,

திருவான்மியூர், சென்னை-41

1977

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு எண்—54.

முதற் பதிப்பு - 1977 — 1000 பிரதிகள்.

விலை ரூ. 5/-

Printed at :-
Kalakshetra Publications Press, Tiruvanmiyur, Madras-600 041.

PUBLISHER'S NOTE

The "Sankara Rajendra Cholan Ula" is a poetical work of historical significance about a Prince of the Chola dynasty. The original of this work was acquired by Dr. U. V. Swaminatha Aiyar in the last century and a paper mss, was kindly made available to the Library by his grandson from the Doctor's rare collections, together with the notes jotted down by him.

Vageesa Kalanidhi Sri K. V. Jagannathan, a devoted student of the revered Doctor and who is the Director of Research of the Library, has, in his exhaustive preface, thrown considerable light on the historical importance of this work and has also supplied notes wherever necessary. The Library is grateful to him for it. It is hoped that scholars and students of History and Tamil Literature will be greatly benefited by this publication which is timed to coincide with the 123rd birthday of Dr. Iyer and the 33rd Annual Day of the Library.

This publication would not have been possible in this form but for the grant so kindly made by the Government of India, of half the cost of the publication.

T. V. Viswanatha Aiyar

Thiruvanmiyur,
Madras-600041
21-2-1977

Chairman, Executive Committee
Dr. U. V. Swaminatha Iyer Library

முகவுரை

இலக்கிய வரலாற்றிலிருந்து, பெரிய நூல்களாகிய காப்பியங்களும், சிறிய நூல்களாகிய பிரபந்தங்களும் மிகப் பழங்கால முதற்கொண்டே புலவர் பெருமக்களால் பாடப் பெற்று வந்திருப்பதை உணரலாம். புலவர்கள் இளமைக்காலத்தே கவிபாடப் புகும்போது தனிப்பாடல்களையும் சிறிய நூல்களையும் பாடுவது இயல்பு. பெரிய நூல்களைப் பாடாமல் பிரபந்தங்களைமட்டும் பாடிய புலவர்களும் இருக்கிறார்கள். பெரிய நூல்களைப் பாடிய புலவர் சிலர் இயற்றிய சிறு பனுவல்கள் இப்போது கிடைக்காமல் இருக்கலாம். அதனால் அவர்கள் சிறிய நூல்களைப் பாடவில்லை என்று சொல்ல இயலாது; அவர்கள் இயற்றிய நூல்கள் மறைந்து போயிருக்கும்.

பிரபந்தங்கள்

சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்களிற் பலர் பாடிய பாடல்கள் கிடைக்கின்றனவே யன்றி, அவர்கள் பாடிய பெரும்பனுவல்கள் கிடைக்கவில்லை. புலவர்கள் பாடிய தனிப்பாடல்கள் அளவிறந்தனவாக இருத்தல்வேண்டும். அடுத்தபடியாக அவர்கள் பாடிய சிறிய நூல்கள், இப்போது பிரபந்தங்கள் என்று சொல்லும் வகையான நூல்களாக இருக்கலாம். தொடர்நிலைச் செய்யுட்கள் அல்லது காப்பியங்கள் அவற்றினும் குறைவாகவே இருக்கும். இது பொது இயல்பு. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த திரிசிரபுர மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பல புராணங்களாகிய காப்பியங்களையும் பல பிரபந்தங்களையும் இயற்றியுள்ளார்கள். அவருக்கு முன் வாழ்ந்த சிவப்பிரகாசர், சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் முதலியவர்களும் அவ்வாறே புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றியிருக்கிறார்கள். குமரகுருபரரும், பிள்ளைப் பெருமாளையங்காரும் புராணங்கள் இயற்றவில்லை; பிரபந்தங்களை இயற்றினர்.

மன்னர்களையும், வள்ளல்களையும், ஆசிரியர்களையும், கடவுளரையும் புகழ்ந்து பாடிய பிரபந்தங்கள் தமிழில் நூற்றுக்கணக்கில் உள்ளன. பிரபந்தங்கள் இத்தனை என்ற வரையறை முன்பு இருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்ற கணக்குச் சில இடங்களில் காணப்படுகிறது.

''தொண்ணூற்ருறு கோல ப்ரபந்தங்கள்'' என்று சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில் வருகிறது. பிரபந்த மரபியல் என்னும் நூலில், ''பிள்ளைக்கவி முதல் புராணம் ஈருத், தொண்ணூற் ருறெனும் தொகையதாம்'' என்று வருகிறது. பிரபந்தத்திரட்டு என்ற இலக்கண நூலில், ''தொண்ணூற்ரு ருன தொகைசேர் பிரபந்தம்'' என்று வருகிறது. ஆனுல் அவற்றில் சொல்லப் பெற்றுள்ள 96 வகைப் பிரபந்தங்கள் இப்போது இல்லை; குறைவாக உள்ளன. அவ்வளவும் இருந்தனவா என்பதே ஆராய்ச்சிக்குரியது.

பிரபந்த இலக்கணங்களைக் கூறும் இலக்கணத்தைப் பாட்டியல் என்று சொல்லுவது மரபு. இப்போது கிடைக்கும் பாட்டியல் நூல்களில் பழமையானது பன்னிருபாட்டியல். காலத்தால் பிற்பட்டது இலக்கண விளக்கப் பாட்டியல். இவ்வாறு உள்ள பாட்டியல் நூல்களில் 96 பிரபந்தங்கள் என்ற வரையறை இல்லை. அந்தத் தொகையினும் குறைவாக உள்ளவற்றின் இலக்கணத்தையே அந்த நூல்கள் சொல்கின்றன.

தெளிவாக இலக்கணம் வரையறுக்கப்பட்ட பிரபந்தங்களில் மிகப் பழங்காலந் தொட்டு வழங்கி வருபவை சில. ஆற்றுப்படை என்பது அத்தகையது. தொல்காப்பியத்தில் அதற்குரிய இலக்கணம் இருக்கிறது. பத்துப்பாட்டில் உள்ளவற்றில் ஐந்து ஆற்றுப்படைகள். கோவையும் ஆற்றுப்படைக்கு அடுத்தபடி பழமையுடையது என்று சொல்லலாம். மாணிக்கவாசகர் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையாரும், இறையனுரகப் பொருளுரையில் மேற்கோளாகக் காட்டப் பெறும் பாண்டிக் கோவையும் பழமையானவை.

உலா

உலா என்னும் பிரபந்தம் ஒன்பதாம் நூற்ருண்டில் முதல் முதலாக எழுந்தது என்று தோன்றுகிறது. அந்நூற்ருண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனுர் பாடியருளிய திருக்கைலாய ஞான உலாவுக்கு ஆதியுலா என்றும் ஒரு பெயர் உண்டு. அந்தப் பெயரைக் கொண்டு உலாப் பிரபந்தங்களுக்கு அதுவே வழிகாட்டி என்று சொல்லலாம்.

தொல்காப்பியத்தில் பாடாண் திணையைப் பற்றிய இலக்கணம் கூறும் பகுதியில் வரும்,

> ''ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
> வழக்கொடு சிவணிய வகைமை யான'' (புறத். 30)

என்னும் சூத்திரத்தின் உரையில் நச்சினுர்க்கினியர், 'பக்கு நின்ற காமம் ஊரிற் பொது மகளிரோடு கூடி வந்த விளக்கமும் பாடாண்

திணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர்; அது பின் உள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்யும் உலாச் செய்யுளாம்' என்று எழுதியுள்ளார். தொல்காப்பியத்தில் வரும் இலக்கணம், ஓர் ஆடவன் உலா வருவதைச் சிறப்பித்துப் பாடும் வழக்கு இருந்ததைப் புலப்படுத்தும். காப்பியங்களில், காப்பியத்தலைவன் உலாவருவதும், அப்போது மகளிர் அவனைக் கண்டு காமுறுவதுமான காட்சிகளைக் காணலாம். பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய காப்பியங்களில் இத்தகைய நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதிகள் உள்ளன.

பிற்காலத்தில், உலாப் போவதும் மகளிர் காமுறுவதுமாகிய வற்றை விரித்துப் பாடுவதற்காகவே உலா என்ற பிரபந்தம் எழுந்தது. உலாப்புறம், உலாமாலை என்று அதைக் கூறுவதும் உண்டு. கோவை, கலம்பகம், பரணி முதலிய பிரபந்தங்கள் பல பாடல்களைக் கொண்டவை. ஆற்றுப்படை, உலா முதலியவை ஒரே நெடும்பாட்டாக அமைந்தவை. தூது, உலா, மடல் என்பவை கலிவெண்பாவால் பாடப் பெற்றவை. கடவுளைப்பற்றியும் மன்னர்களைப்பற்றியும் வள்ளல்களைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் புலவர்கள் பாடிய உலாக்கள் பல.

உலாவில் தலைவனுடைய சிறப்பும், அவன் தன்னை அலங்கரித்துக் கொண்டு பவனி புறப்படுவதும், மகளிர் குழாம் அவனுடைய உலாவைக் கண்டு காமுறுவதும் முதலில் சொல்லப்பெறும். பிறகு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் எழுவகைப் பருவப் பெண்களும் தலைவனைக் கண்டு காதலடைவதாகச் சொல்வது மரபு.

தலைவன் உலாப் புறப்படும் வரையில் உள்ளவற்றை ஒரு பகுதியாகவும், பொது வகையில் மகளிர் குழாம் காமுறுவதை ஒரு பகுதியாகவும், அப்பால் ஏழு பருவப் பெண்கள் காமுறுவதை ஒரு பகுதியாகவும் கொள்ளலாம்; முன் இரண்டையும் ஒரு நிலையாகவும், ஏழு பருவ மகளிரோடு தொடர்புடையவற்றை ஏழு நிலையாகவும் கொள்வர் பன்னிருபாட்டியலார்.

உலாவைக் கண்டு களித்து மால் கொள்ளும் பெண்களின் பருவங்களுக்குரிய ஆண்டுக்கணக்கு வருமாறு :. 5 முதல் 8 வரையில் பேதைப் பருவம்; 9 முதல் 10 வரையில் பெதும்பைப் பருவம்; 11 முதல் 14 வரை மங்கை; 15 முதல் 18 வரை மடந்தை; 19 முதல் 24 வரை அரிவை; 25 முதல் 29 வரை தெரிவை; 30 முதல் 36 வரையில் பேரிளம் பெண். சில பாட்டியல்களில் இந்தக் கணக்கில் வேறுபாடு காணப்படும்.

36 ஆண்டு வரையில் ஆடவரைக் கண்டு காமுறும் இளமைத் தன்மை இருக்கும் போலும்! அதனால்தான் ஏழாவது பருவப் பெண்ணைப் பேரிளம் பெண் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு மேற்பட்டவர்கள் இளமை நீங்கியவர்கள் போலும்!

தலைவனைக் கண்டு காமுறும் மகளிர் பரத்தையர் என்று தெரிய வருகிறது. ''ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'' என்ற தொல்காப்பியச் சூத்திர உரையில், 'ஊரிற் பொதுமகளிரோடு கூடி வந்த விளக்கம்' என்று குறிப்பதனால் இதனை உணரலாம். அன்றியும், பெருங்கதையில் உதயணன் உலாவந்த நிகழ்ச்சியைச் சொல்லும் 'நகர்வலம் கொண்டது' என்ற பகுதியில்,

''ஞாலம் திரியா நன்னிறைத் திண்கோள்
உத்தம மகளிர் ஒழிய மற்றைக்
கன்னியர் எல்லாம் காமன் துரந்த
கணைஉளம் கழியக் கவினழி வெய்தி''

என்று அதன் ஆசிரியர் பாடுகிறார். சீவகசிந்தாமணியில் சீவகன் உலா வந்தபோது பல பெண்கள், 'அன்னமும் மயிலும் போல அணிநகர் வீதி கொண்டார்'களாம். அங்கே நச்சினார்க்கினியர், 'இது கற்புடை மகளிர் ஒழிந்தோரைக் கூறிற்று' என்று எழுதியுள்ளார்.

ஏழு பருவ மகளிரை வருணிக்கும்போது அவரவர்களின் பருவத்துக்கேற்ற இயல்புகளையும் செயல்களையும் எடுத்துரைப்பது புலவர்களின் வழக்கம்; தத்தமக்குரிய ஆடல்களில் ஈடுபட்டதாகப் பாடுவார்கள்.

''சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறும் ஊசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
நன்மது நுகர்தல் இன்ன பிறவும்
அவரவர்க் குரிய ஆகும் என்ப'' (137)

என்று பன்னிருபாட்டியல் மகளிரின் ஆடல்களைச் சொல்கிறது. இவற்றில் இன்ன பருவத்தினருக்கு இன்ன விளையாடல் என்ற வரையறை இல்லை. சிற்றில் என்பதுமட்டும் பேதைக்குரியது. மற்றவை எல்லாப் பருவப் பெண்களுக்கும் உரியனவாக வரும். இந்தச் சூத்திரத்தில் காணப் பெறாத வேறு வகை ஆடல்களும் சில உலாக்களில் வந்துள்ளன. பாட்டுடைத் தலைவனுடைய தசாங்கம் உலாவில் வரவேண்டும் என்று பிரபந்தத் திரட்டு என்ற இலக்கண நூல் வகுக்கின்றது.

''பேதைமுதல் ஏழ்பருவப் பெண்கள் மயக்கமுற
ஓதுமறு குற்றுன்ஒள் வேலோன்என்—றேதம்
அறக்கலி வெண்பாவின் ஆக்கல் உலாவாம்;
புறத்தசாங் கம்தாங்கிப் போற்று''

என்பது அது.

தலைவன் களிற்றின்மேல் உலா வருவதாகச் சொல்வதும், பிற ஊர்தியின் மேலும் தேர் மேலும் வருவதாகப் பாடுவதும் உண்டு. ஒட்டக்கூத்தர் பாடிய மூவர் உலாவிலும் இந்த உலாவிலும் களிற்றின் மேல் உலா வருவதாக இருக்கிறது, ஆதியுலா இறைவன் விடையின் மேல் உலா வந்ததாகச் சொல்கிறது. இறைவன் எழுந்தருளிய தலங்களைப்பற்றிய உலாக்களில் தேர் மேல் எழுந்தருளியதாகப் பாடியிருக்கிறார்கள் புலவர்கள்.

பிற்காலத்தில் தல சம்பந்தமான பிரபந்தங்கள் மிகுதியாக எழுந்தன; பல தல மூர்த்திகளைச் சிறப்பித்துப் பல புலவர்கள் உலாப் பாடியிருக்கின்றனர். தில்லை உலா, மதுரைச் சொக்கநாதர் உலா, ஏகாம்பர நாதர் உலா, திருவானைக்கா உலா, திருக்காளத்தி நாதர் உலா, திருவாரூர் உலா முதலியவை தல சம்பந்தமான உலாக்களாகும். அவற்றில் எல்லாம் இறைவன் திருத்தேரில் உலா வந்ததாகவே பாடியிருப்பதைக் காணலாம்.

ஞானசிரியரைப் பாடியதற்குத் தத்துவராயர் பாடிய ஞான விநோதன் உலா ஓர் எடுத்துக்காட்டு. மன்னர்களைப் பாடியதற்கு மூவருலாவும் இவ்வுலாவும் உதாரணங்கள். பிற வள்ளல்களைப் பாடியதற்குச் சிவந்தெழுந்த பல்லவராயன் உலா உதாரணம்.

வரலாறு

சங்கர ராசேந்திர சோழன் உலா என்பது சோழர் குலத்தில் தோன்றிய மூன்றும் குலோத்துங்கனுடைய தம்பியாகிய சங்கரசோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றது. இதன் ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. இதைச் சங்கர சோழன் உலா என்றும் சொல்வதுண்டு. இந்தச் சோழ அரசனை இந்நூல், சங்கர சோழன் (காப்பு, 272) என்றும், சங்கர ராசன் (38, 115) என்றும், சங்கர வேந்தன் (114) என்றும், சங்கரன் (235, 337, 338) என்றும் கூறும். இவனுடைய தந்தை சங்கமன் என்றும், இவனுடைய தமையன்மார்கள் நல்லமன் (32), குமார மகீதரன் (37) என்றும் இவ்வுலாவினால் புலனாகிறது. மூன்றும் குலோத்துங்கனே குமார மகீதரன் என்று தெரியவருகிறது. அவன் கி. பி. 1178 முதல் 1218

வரையில் ஆட்சி புரிந்தவன். ஆகவே இந்நூல் 12-ஆம் நூற்றுண்டின் இறுதியிலோ 13-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலோ பாடப் பெற்றிருக்கவேண்டும்.

மூன்றும் குலோத்துங்கன் மீது பாடப் பெற்ற கோவை ஒன்று உண்டு. அதில் அவன் சங்கமனுடைய புதல்வன் என்ற செய்தி சில இடங்களில் வருகிறது.

''சங்கம ராச குலோத்துங்கன்''
''சங்கம ராச வரோதயன்''

என்பன அவை. குமார குலோத்துங்கன் சங்கர சோழனுடைய சகோதரன் என்பதை,

''தேனூர் கடலும் திரைப்பாற் கடலும் திரைபுரண்டொன்
றுனல்எத் தன்மையத் தன்மையன் றேஅகி லாண்டமெல்லாம்
கோனுகும் சங்கரன் முன்னேன் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மானும் யானும் மணந்தஇப் பேரின்ப மாகடலே''

என்று குலோத்துங்க சோழன் கோவையும் சொல்கிறது.

முதலாம் இராசராசன் தொடங்கி வரும் சோழமன்னர் மரபில் இரண்டாம் இராசராசன் வரையில் உள்ள மன்னர்களைப் பற்றிய வரலாறுகளை ஓரளவு தெளிவாகத் தெரிந்து கொள்ள நூல்களும் கல்வெட்டுக்களும் உதவுகின்றன. இரண்டாம் இராசராச சோழனுக்குப் பின் இரண்டாம் இராசாதிராசன் என்ற அரசன் ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பின் மூன்றும் குலோத்துங்கன் அரியணை ஏறினன். இரண்டாம் இராசராச சோழனுக்கும், இரண்டாம் இராசாதி ராசனுக்கும் உள்ள உறவு முறையைப் பற்றித் தெளிவான செய்தி ஒன்றும் தெரியவில்லை.*

---

*அண்மையில் வந்துள்ள 'அருளுடைச் சோழமண்டலம்' என்னும் நூலில் அதன் ஆசிரியர் திரு என். சேதுராமன் அவர்கள் புஜண்டர் நாடியை ஆதாரமாகக் கொண்டு இரண்டாம் இராச ராசனுடைய சகோதரியாகிய நெறியுடை நாயகியின் மகனே இரண்டாம் இராசாதி ராசன் என்று கூறுகிருர். (அருளுடைச் சோழமண்டலம், 1976, ப. 24.)

இரண்டாம் இராசாதி ராசனுக்குப் பிறகு அரசு கட்டிலேறிய மூன்றும் குலோத்துங்கன் இரண்டாம் இராச ராசனுடைய புதல்வன் என்பர் ஒரு சாரார். மூன்றும் குலோத்துங்க சோழன் வரலாற்றை எழுதிய அமரர் வி. ரா. இராமசந்திர தீட்சிதர் அவனைப்பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்: 'இராஜாதி ராஜனுக்குப் பின் குலோத்துங்கன் மகுடம் சூடினான், இவன் முடி சூடிய காலம் கி. பி. 1178 ஜூலை மாதம் 6-ஆம் தேதி முதல் 8-ஆம் தேதிக்குள் எனக்கணிக்கப்பட்டுள்ளது. இக்குலோத்துங்கன் தன் முன்னோனுக்கு என்ன முறையினன் என்பதைச் சாஸனங்கள் மூலம் அறிய இடம் இல்லை. ஆனால், இலக்கிய வழியால் ஆராயும்போது இராஜாதி ராஜனுக்கு இளைய சகோதரன் இவன் என்றும், இராஜராஜ சோழன் தன் கடைசிக் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து தருவித்துத் தன் அரசுக்கு உரியவர்களாகத் தெரிந்தெடுத்த இரண்டு பிள்ளைகளுள் ஒரு வயதுடைய குழந்தையாயிருந்தவன் இவனே என்றும் தெரிய வருகின்றது. அஃதாவது விக்கிரம சோழனுடைய பெண்வழிக் கொட்பேரனும் நெறியுடைப் பெருமாள் என்ற சங்கம ராஜனுடைய இளையமகனுமாவான் என்பதாகும்'*

இந்த உலாவில் வரும் சங்கமன், குமார மகீத்ரன், சங்கர சோழன் என்பவர்கள் கொங்கு நாட்டில் உள்ள கொங்குச் சோழர் என்று அமரர் சதாசிவ பண்டாரத்தார் எழுதியிருக்கிறார்.†

குலமுறை

இந்த உலாவில் சங்கர சோழனுடைய முன்னோர்களின் வரலாறு முதலில் வருகிறது. கலிங்கத்துப்பரணியிலும், ஒட்டக்கூத்தர் பாடிய மூவர் உலாக்களிலும் இந்தக் குல முறையைக் காணலாம். ஆதலால் சங்கர சோழன் சோழ நாட்டை ஆண்ட மன்னர் வழியில் வந்தவன் என்றே கொள்ளவேண்டும். இந்த உலாவில் வரும் பரம்பரையை இரு பகுதியாகப் பிரிக்கலாம். முதல் வரிசை பழைய நூல்களால் தெரியவரும் மன்னர்கள். இரண்டாம் வரிசை தக்க ஆதாரங்களுடன் வரலாறு தெரிய வரும் மன்னர்கள்.

மனுவரம்பு கண்ட ஆதி மனு, சூரியன், தன் மகன் மேல் தேரை ஓட்டிய மனுச்சோழன், மானும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்தச்

---

*மூன்றும் குலோத்துங்க சோழன், 1941, ப. 34.

†பிற்காலச் சோழர் வரலாறு - II, ப. 144.

செய்த மாந்தாதா, இந்திர விமானம் உகைத்த சோழன், இந்திரனை விடையாகக்கொண்டு ஊர்ந்த ககுத்தன், யமனுக்கு எதிர் நின்று வழக்குரைத்த பெருநற் கிள்ளி, முது மக்கட்சாடி வகுத்த சுரகுரு, தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், மேல் கடலைக் கீழ்கடல் வாய் விடுத்த சமுத்திர ஜித், நாகர் கன்னிகையை மணந்த கிள்ளி வளவன், பாட்டுக்கு நூறுயிரம் பொன் வழங்கியவன், பட்டினப் பாலைக்காகப் பதினுறுகோடி பொன் வழங்கிய கரிகாலன், புறவுக்குத் தன் உடலை அரிந்து கொடுத்த சிபி, குடகு மலையைக் குடைந்து காவிரிக்கு வழி கண்ட காவிரிச் சோழன், காவிரிக்குக் கரைகட்டிய இரண்டாம் கரிகாலன், களவழிப்பாடல் கேட்டுச் சேரனை விடுதலை செய்த கோச்செங்கட் சோழன் இவர்கள் முதலில் கூறப்படுகின்றனர்.

இம் மன்னர்கள் இலக்கியங்களால் உணரப்படும் மன்னர்கள். இவர்களில் 'பாயிரம் பெற்றதொரு பாட்டுக்குப் பன்னொரு நூறுயிரம் பொன் பணித்த அண்ணலும்' என்று குறிப்பிடப்பெற்ற மன்னன் யாரென்று தெரியவில்லை. மற்றவர்களை ஒட்டக் கூத்தர் பாடிய உலாக்களில் இனம் கண்டுகொள்ளலாம்.

இனி அடுத்தபடி கல்வெட்டு முதலிய வரலாற்றுச் சான்றுகளால் அறியப்படும் மன்னர்களின் வரிசை தொடர்கிறது. அவர்கள்: தன் திருமேனியில் தொண்ணூற்றுறு புண் கொண்ட விசயாலயன், தில்லையில் உள்ள ஞானத் திருமன்றத்தைப் பொன்னுல் வேய்ந்த முதற் பராந்தகன், சேரனுெடு பொருது வென்ற முதலாம் இராசராசன், கடாரமும் கங்கையும் கொண்ட இராசேந்திரசோழன், கலியாணம் அட்ட முதல் இராசாதிராசன், கொப்பத்தில் வென்ற இரண்டாம் இராசேந்திரன், திருவரங்கப் பெருமாளுக்கு மாணிக்கப் பாப்பணை செய்தளித்த இராசமகேந்திரன், கூடல சங்கமத்தில் வென்ற வீர ராசேந்திரன், கலிங்கத்துப் பரணிகொண்ட முதற் குலோத்துங்கன், 'கூடிய சீர்தந்த' என்று தொடங்கும் கூத்தன் உலாவைக் கொண்ட விக்கிரமசோழன், உலா பிள்ளைத் தமிழ் இரண்டும் பெற்ற இரண்டாம் குலோத்துங்கன், தன்னைப்பற்றிப் பாடிய உலாவுக்கு ஆயிரம் பொன் சொரிந்த இரண்டாம் இராசராசன்.

இப்படி மன்னர்களின் வரிசையைச் சொல்லிவிட்டு, "என்னும் இவர், மாசக்ரம் மேரு வலம் செல் மகரசல, பூ சக்ரம் ஏழும் புரந்ததற்பின்" என்று சொல்லிச் சங்கரசோழனுடைய தந்தை, தமையன்மார் ஆகியவர்களைச் சொல்கிறுர் ஆசிரியர்.

சங்கரசோழன் தந்தை சங்கமன். இவன் விக்கிரம சோழனுடைய பெண்வயிற்றுப் பேரனுகிய நெறியுடைப் பெருமாளாக இருக்கலாம் என்பர் *திரு மு. அருணுசலம் அவர்கள். சங்கமனை இவ் வுலாவாசிரியர்.

> "பணியும் மனுகுலப் பாற்கடல் ஈன்ற
> மணியும் அமுதமும் மானக் — குணபால்"

---

*தமிழ் இலக்கிய வரலாறு, பதின்மூன்றும் நூற்றுண்டு, 1970—ப. 414.

உவந்த வளவர் குலஅசலத்து உச்சி
நிவந்த பருதி நிகர்ப்ப—அவந்திமன்
வங்கமன் கங்கமன் ஆதியவர் வந்தித்த
சங்கமன்''

என்று பாராட்டுகிருர். இவன் வளவர் குலத்திலே தோன்றினவன் என்றும், அவந்தி யரசன், வங்க அரசன், கங்க அரசன் முதலிய அரசர்களால் போற்றப் பெற்றவன் என்றும் இக்கண்ணிகளால் விளங்குகிறது.

இதற்குப்பின் சங்கர சோழனுடைய தமையன்மாருள் மூத்தவனுகிய நல்லமன் புகழ் வருகிறது. இவனேயே இரண்டாம் இராசாதிராசனென்று கருதுகின்றனர், ஆராச்சியாளர். இவன் புகழை இவ்வுலா ஆசிரியர் கூறுவதைப் பார்ப்போம்.

''எழும்திகிரி வெற்பை எனத்திகிரி யும்தன்
செழுந்திகிரி யின்திமிரம் தீர்ப்ப—மொழிஅனைத்தும்
வல்லமன் ஆதி மனுவினும் மேதக்க
நல்லமன்.''

இதனுல் இவன் ஆட்சி புரிந்து ஆணை செலுத்தியவன் என்பதும், பன்மொழிகளை அறிந்தவன் என்பதும், நீதிமுறை வழாதவன் என்பதும் தெரிகின்றன.

பிறகு மற்ருெரு தமையனுகிய குமார மகீதரனைப்பற்றிய செய்திகள் வருகின்றன. இவனே மூன்ருங்குலோத்துங்கன் என்பதை முன்பு பார்த்தோம்.

''மலைக்கும் கடற்கும்நடு மண்முழுதும் காத்துச்
சிலைக்கும்பா தாளத்தைச் சீறித்—தொலைத்துப்
பருந்து நிழற்பந்தர்ப் பல்லா யிரம்பேய்
விருந்து களிப்ப விடுத்துக்—கருந்தலையின்
குன்று குவித்துக் குவித்த பிணக்குவடு
சென்று குருதித் திரைமிதப்ப—வென்றதற்பின்
பூசற் குடகடற்கே போர்வாட் கறைகழுவித்
தேசத் தொழியாத் திறைகொண்டு—காசினிக்கே
பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரன்''

என்று இவனை மிகச் சிறப்பித்துப் பாடுகிறார் ஆசிரியர். இங்குள்ள பாராட் டெல்லாம் இவனுடைய வீரச் சிறப்பும் வென்றிச் சிறப்புமாகவே உள்ளன.

சங்கர சோழன்

இவ்வாறு தந்தையையும் தமையன்மார்களையும் சொன்ன பிறகு சங்கரசோழன் புகழைச் சொல்லுகிறார் புலவர்:

''மெய்த்துணையாய்த், தோற்றிய சங்கர ராசன் சுரராசன்
போற்றிய கங்கா புரராசன்;—சீற்றத்து
உறைப்படு வேலால் ஒழித்துஒழி யாது
சிறைப்படு வேந்தர் திறையாய்—நிறைத்த
அரும்பொற் குவாலும் அடித்தளை விட்ட
கரும்பொற் குவாலும் கலுலப்—பரம்பும்
கடைத்தலை மும்முரசம் கண்இரட்ட ஒற்றைக்
குடைத்தலை அண்டமெலாம் கோலத்-தொடைத்தேன்
பலகளிக்கும் திண்டோட் பருப்பதத்து ஏந்தி
உலகுஅளிக்கும் நாளில்''

இவ்வாறு கூறி மேலே உலாப் போவதற்கு முன் நிகழ்ந்தனவற்றைச் சொல்கிறார். இங்கே உள்ளவற்றால் சங்கர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்தவன் என்றும், பகைவரை வென்றவன் என்றும், ஆட்சிபுரிந்தவன் என்றும் தெரிகிறது. தசாங்கம் சொல்லுமிடத்தில் இவன் நகரம் புகார் என்று கூறுகிறார் ஆசிரியர். காவிரித்தீர்த்தத்தில் ஆடினன் என்று இருப்பதால் அதையே கொள்ள வேண்டும். குலோத் துங்க சோழன் கோவையில் இவன் மூன்றாங்குலோத்துங்கனுடைய தம்பி என்ற செய்தி ஒருபாட்டில் வருகிறதையன்றி வேறு நூல்களாலோ, கல் வெட்டுக்களாலோ இவனைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை. இவன் சோழ நாட்டை ஆண்டிருந்தால் அக்காலக் கல்வெட்டுக்கள் இருந்திருக் கும்; ஆதலால் இவன் தன்னுடைய தமையனுக்கு உதவியாகச் சோழ நாட்டின் ஒரு பகுதியை ஆண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஆசிரியர்

சங்கர சோழனுடைய பண்பையும் தமிழார்வத்தையும் அறிந்த புலவர் இவனைப் பாட விரும்பி இந்த உலாவை இயற்றியிருக்க வேண்டும். குலோத்துங்கனை இந்த உலாவில் ஓரளவு பாராட்டியவர் அவனைப்பற்றி ஒரு நூல் இயற்றாமல் அவன் தம்பியைப்பற்றித் தனியே

ஒரு நூல் இயற்றுவாரா என்று தோன்றலாம். ஒருகால் குலோத்துங்க சோழன் கோவையைத் தமையன்மேல் பாடிய புலவரே சங்கர சோழனை இந்த உலாவினுல் பாடியிருத்தல் கூடும்.*

கோவையிலும் இந்த உலாவிலும் வரும் சில கருத்துக்களின் ஒற்றுமை இந்த எண்ணத்துக்கு இடம் தருகிறது. அஞ்சி ஓடினவர்களை ஒறுக்காமல் விடுபவன் குலோத்துங்கன் என்பதை, ''உடைந்தோடினரைக் காயாத சிங்கம்'' (59), ''அஞ்சியோடினர்பின் கூளுத விற்கை அபயன் குலோத்துங்கன்'' (298) என்று கோவை கூறுகிறது. இந்த உலா இந்த இயல்பைச் சங்கர சோழனுடைய யானையின் இயல்பாக வைத்து, ''செருப்போய்ப், பயந்தவரை எல்லாம் பருவருகை தீர்க்கும்'' (75) என்று சொல்கிறது. பகைமன்னர் திறை அளந்தால் அவர்களைச் சிறை விடுப்பவன் குலோத்துங்கன் என்று கோவை சொல்கிறது; ''வழுதியர்கோன் திறைதர வன்சிறை விடுத்து.....அழுதுயர் மாற்றும் குலோத்துங்க சோழன்'' (466); இவ்வுலாவும், 'சிறையில் அகப்பட்ட மன்னர்கள் திறையாகப் பொற்குவையை அளக்க, அந்தக் குவையும் உடனே அவர்களுடைய விலங்கைத் தறிக்க அந்தக் குவையும் நிரம்ப' என்ற பொருள்பட,

''சிறைப்படு வேந்தர் திறையாய்—நிறைத்த
அரும்பொற் குவாலும் அடித்தளை விட்ட
கரும்பொற் குவாலும் கனல''

என்று கூறுகிறது. குலோத்துங்கனுடைய தமிழன்பைச் சொல்லுகையில், அவனுடைய காதில் கலையும் தமிழும் அணிபோல இருக்கும் என்று கோவையில் காண்கிறோம். ''மதுரித்த தொன்னூல் காதே மணப்பவன்'' (332), ''மெய்த்தமிழைக் காதே புனைபவன்'' (120) என்பவற்றைக் காண்க. இதே கருத்தை உலா ஆசிரியர் வேறு வகையில் சொல்கிறார். 'தான் கேட்ட தமிழ் நூல்கள் ஒழுகுவதைப் போலக் காதில் மகரக் குழையைத் தொங்கவிட்டான்' என்கிறார்.

''புரிகாதில், சால வினவுதமிழ்ச் செப்பொழுகும் தன்மையில்
கோல மகரக் குழைதூக்கி'' (54-5)

இவற்றைப் போன்ற பகுதிகள் கோவைக்கும் இந்த உலாவுக்கும் ஆசிரியர் ஒருவரே என்று நினைக்கச் செய்கின்றன.

இந்நூலாசிரியர் ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலாவை நன்கு ஆராய்ந்தவர். இந்த உலாவில் வரும் அரசர்குல முறை அவர்

---

*இவ்வாறு திரு. மு. அருணசலமும் கருதுகிறார்; தமிழ் இலக்கிய வரலாறு, 13-ஆம் நூற்றாண்டு, 1970. ப. 417.

கூறியதோடு ஒத்து நிற்றலும் அவர் பாடிய உலாக்களிலும் இந்த உலாவிலும் பல கருத்துக்கள் ஒத்திருத்தலும் இதைப் புலப்படுத்தும்.

ஒட்டக்கூத்தர் பாடிய விக்கிரம சோழனுலாவைக் குறிப்பிடும்போது அதன் தொடக்கத்தையே சுட்டிக் காட்டுகிறார்; ''கூடிய சீர்தந்த என்றெடுத்த கூத்தன்உலா'' (24); குலோத்துங்கன் மீது அப்புலவர் பெருமான் பாடிய உலாவையும் பிள்ளைத் தமிழையும் குறிப்பிடுகிறார் (25); நூலின் இறுதியில், ''கூத்தன் நிகழ்த்த ஒருமூன், றுலாக் கொண்டான்'' (389) என்று மூவருலாவை நினைவு கூர்கிறார்.

விக்கிரம சோழனுலாவில், தெரிவை பாணனைத் தசாங்கங்களைப் பாடும்படி சொல்லுகிறாள். இரண்டு கண்ணிக்குள் அவள் அவற்றைத் தொகுத்துச் சொல்கிறாள்.

''நேரியும், கோழியும் வேங்கையும் முப்பணையும் கோரமும்
பாழி அயிரா பதப்பகடும்—ஆழியான்
சூடிய ஆரமும் ஆணையும் சோணாடும்
காடு திரைத்தெறியும் காவிரியும்—பாடுகென''
(272-73)

இந்த உலாவில் மடந்தை தசாங்கங்களைப் பாடுகிறாள். இங்கும் இரண்டே கண்ணிகளில் அவற்றை அடக்கிச் சொல்கிறார் ஆசிரியர்.

''நேரியும் காவிரியும் காவிரி நீர்நாடும்
ஆரியன் கோரமும் ஆரமும்—பேரியம்
மூன்றும் கொடுவாயும் மூரிஅயி ராபதமும்
ஆன்ற புகாரும்பே ராணையும்—தேன்துளிக்கப்
பாடினாள்'' (242-4)

உலாக்களில் காமுற்ற மகளிர் தலைவன் முன் தம் குறைகளைக் கூறி முறையிடுவதாகவே புலவர்கள் பாடியிருக்கிறார்கள். இந்தக் காதல் ஒருதலைக் காமம் என்றே கொள்ளும்படி அமைந்திருக்கும். ஆனால் ஒட்டக்கூத்தர் பாடிய உலாக்களில் தலைவனும் தன்னைக் கண்ட மகளிரைப் போலவே வேட்கை மீதூர்ந்தா னென்றும், அவர்களுக்கு மாலை அளித்தானென்றும், பலவகைப் பரிசுகளை அளித்தானென்றும் பாடுகிறார். ஏனைய உலாக்களில் இப்படி இரு வழியும் அன்பு எழுவதைக் காண முடியாது. இந்த உலா ஆசிரியரும் ஒட்டக்கூத்தரைப் பின் பற்றி இருவரும் அன்பு கொள்வது முதலியவற்றைச் சொல்கிறார்.

இந்த உலாவில், அரிவையும் சோழனும் ஒருவரை ஒருவர் பார்த்து மனமுருகி நெகிழ்கிறார்கள்.

''நோக்கால், உருகி இருவரும் ஒள்அழகின் வெள்ளம்
பருகி நெகிழ்ந்த பதத்தே.'' (298-9)

குலோத்துங்க சோழன் உலாவில் தெரிவையும் சோழனும் பார்வையால் வேட்கை கொள்கிறார்கள்;

''இருவரும் தம்மில் எதிர்எதிர் நோக்கா
ஒருவ ரெனவேட்கை ஒத்தார்'' (கு.உலா, 331)

இராச ராச சோழனுலாவில் பெதும்பையும் சோழனும் அவ்வாறாகின்றனர்!

''ஒருவ ரொருவர்க் குருகி உருகி
இருவரும் ஈடழிய நோக்கி'' (171)

இந்த உலாவில், தெரிவையைவிடச் சோழமன்னன் பத்துமடங்கு வேட்கை உடையவனாகிறான்.

''மதில்மடங்க மட்டித்த கோமானும் மானிற்
பதின்மடங்கு வேட்கை பணித்தான்'' (335)

குலோத்துங்க சோழன் மங்கையைவிட நூறு மடங்கு வேட்கை உடையவனாகிறான்.

''தடுத்த கொடிக்குச் சதமடங்கு வேட்கை
அடுத்த திருநோக் கருளா'' (கு. உலா, 222)

சங்கரசோழன் அரிவைக்கும் பேரிளம் பெண்ணுக்கும் மாலையை வழங்கியதாக இவ்வாசிரியர் பாடுகிறார்.

''ஆர்மாலை நிச்சம் அடும்ஆலை போய்ஒடுங்கக்
கார்மாலை ஓதிக்குக் கைதந்தான்.'' [300)
''செல்விக்குச், சூட்டினான் ஆரத் தொடலை.'' (385-6)

இந்தக் கருத்தை இராசராச சோழனுலாவில் அரிவைப் பருவத்தில் ஒட்டக்கூத்தர் அமைத்திருக்கிறார்.

''ஆர்மாலை கோமான் அருளினான்; அம்மாலை
கார்மாலை உட்கொண்டு கைக்கொண்டாள்'' (308)

இராச ராச சோழன் மடந்தைக்குப் பலவகைப் பரிசுகள் தருவ தாகக் கூத்தர் பாடினுர்.

''முடியும்சிங் காதனமும் முத்தக் குடையும்
படியும் அரசும் பணித்தான்'' (273)

இங்கே, சங்கர சோழனும் தெரிவைக்குப் பரிசுகள் வழங்குகிறுன்.

''தாரும் கலனும் அனந்த சனபதமும்
ஊரும் தமனிய ஓங்கலும்—ஆரும்
தெரிசங் கரன்பாத சேகரன் வீரம்
புரிசங் கரன்ஈந்து போந்தான்'' (336-7)

உலாப்புறப்படல்

சங்கரசோழன் உலா வரும் காட்சியை அழகாக வருணிக்கிறுர் புலவர். பாற்கடல் போலப் பரந்துகிடந்த பாயலில் தன் தேவியுடன் துயின்றவன் துயில் எழுகிறுன். அவனுடைய தேவி பெண்பாற்கு அரசு; அருந்ததி வந்து புகழும் தன்மையுடையவள்; மறுவற்ற பொற்பாவை போன்றவள்; உலகம் அனைத்திற்கும் ஒருதாய்; உலகத் துக்குத் திலகம் போன்ற குலத்தில் உதித்தவள்.

மன்னன் காவிரியிலிருந்து யானையின் மேல் பொற்குடத்தில் ஏந்தி வந்த நீரில் ஆடுகிறுன்; காலையில் செய்யவேண்டிய செயல்களை வேத நெறிப்படி செய்கிறுன்; அந்தணருக்குப் பொன்னை நீரோடு வழங்கு கிறுன். பிறகு கோலம் செய்து கொள்கிறுன். வெள்ளையான ஆடையை அணிந்து அதன் மேல் கச்சைக்கட்டி அதில் வாளைச் செருகிக் கொள் கிறுன்; முடியை அணிந்து கொள்கிறுன்; காதில் மகரக் குழையை அணிந்து, கையில் முத்துத் தொடியைப் பூட்டிக்கொண்டு, மாணிக்கப் பதக்கத்தை மார்பிலும் மரகதத் தோள்வளையைத் தோள்களிலும் புனைந்து, உதரபந்தனத்தை அணிந்து, காலில் கழலைக் கட்டிக்கொள் கிறுன். தோளில் அகில் குழம்பையும், சந்தனக் குழம்பையும் பூசித் திரிபுண்டரம் அணிந்து கொள்கிறுன். பிறகு நிலைக் கண்ணுடி முன் நின்று பார்த்துக் கொள்கிறுன்.

அப்பால் சிவபெருமானை வணங்குகிறுன். இதைச் சொல்லும் போது உலா ஆசிரியர் சிவபெருமானைப் பல சொற்களால் சொல்லித் தம்முடைய சிவபக்தியைப் புலப்படுத்துகிறுர்.

''மேலைமதி, ஒன்று தவழ்பவழக் குன்றை உலகனைத்தும்
சென்று கவிந்ததொரு செவ்வானைத்—தொன்று
தொட்டு
ஓதிச் சுருதி உததிதரும் எப்பொருட்கும்
ஆதிப் பொருளை அடிவணங்கி'' (62-4)

சங்கர சோழன் சிவபக்தன் என்பதைப் பின்பும்,

''ஆரும், தெரிசங் கரன்பாத சேகரன்'' (336-7)

என்று சொல்லுவார் இவ்வாசிரியர்.

சிவபெருமானை வணங்கிய சோழ மன்னன் அரண்மனையின் வாயிலுக்கு வந்து பட்டத்து யானையின் மேல் ஏறி வீதியில் உலா வருகிருன்.

இங்கே இருபது கண்ணிகளால் அந்த யானையை வருணிக்கிருர் ஆசிரியர். அதை வெங்கைமா, போர் உவா, இபக்கோ, கொல்யானை, அயிராபதம் என்று பாராட்டுகிருர்; கூற்றமாகவும் தீயாகவும் ஆலாலமாகவும் மதவாரியாகவும் காற்ருகவும் பொதியிலாகவும் கயிலையாகவும் மேருவாகவும் உருவகம் செய்கிருர்.

அது தன் துதிக்கையை நீட்டும்பொழுதெல்லாம் தன் கையிலுள்ள வில்லாகிய கரும்பைப் பறித்துத் தின்றுவிடுமோ என்று அஞ்சிக் காமன் அந்த வில்லை மறைத்துக் கொள்கிருனும்; அந்த யானை போர்க்களத்தில் எதிர்த்த எல்லா யானைகளின் வலிமையையும் அழித்து விடுகிறது; எட்டுத்திக்கயங்களும் தோல்வியுறும்படி சீறுகிறது; திசை யானைகளில் இரண்டுக்குக் குமுதம், புண்டரிகம் என்ற பெயருண்டு. எங்கேனும் குளத்தில் குமுதம் (ஒரு பூ), புண்டரிகம் (தாமரை) உள்ளன என்று சொன்னுல் அந்தத் திக்கயங்கள் அங்குள்ளனவோ என்று எண்ணி அந்தக் குளத்தைப் போய்க் கலக்குமாம்.

பாண்டியன் வேப்ப மாலையையும் சேரன் பனை மாலையையும் சூடுபவன். அவ்விருவரையும் சோழன் இந்த யானையின் வலிமை கொண்டு வென்று விடுகிருன். அம்மன்னர்கள் தங்கள் மாலைகளைச் சூட முடியாதபடி தோல்வியுறுகிருர்கள். ஒருகால் அவர்கள் அவற்றை அணிய எண்ணினுலும் அவர்களுக்கு வேம்பும் பனையும் கிடைக்காமல் அவை வளரும் பொழில்களை அந்த யானை அழித்து விடுகிறதாம். மரங்களை ஒடித்து அழிக்கவில்லை. இறந்த மன்னர்களுக்குக் கல் நட்டு வழிபடுவார்கள். அதற்கு வேப்பிலையை அணிவார்கள்; பல மன்னர்

களைப் போர்க்களத்தில் அந்த யானை அழித்துவிட, அழிந்த வீரர்களுக்குக் கல் நட்டு வேப்பிலையை அணிகிறார்கள். அளவற்ற கற்களை நட்டு வழிபடுவதனால் எல்லா வேப்ப மரங்களையும் தறித்துவிடுகிறார்கள். போரில் வெற்றி பெற்றால் அதைச் சிறப்பித்துப் பரணி என்னும் பிரபந்தம் பாடுவார்கள் புலவர்கள். அந்த யானை பல போர்களில் வெற்றி பெற்றதனால் பல புலவர்கள் பலவகைப் பரணிகளைப் பாடுகிறார்கள். அவற்றையெல்லாம் பனை ஓலையில் எழுதுகிறார்கள். இதற்காக எல்லாப் பனை மரங்களையும் வெட்டி விடுகிறார்கள். இவ்வாறு, பாண்டியனுக்கு மாலை தரும் வேப்ப மரங்களையும். சேரனுக்கு மாலை தரும் பனை மரங்களையும் அழிக்கும்படியாக அந்த யானை தன் வீரத்தால் செய்து விடுகிறதாம். இப்படி ஓர் அழகிய கற்பனையைப் புலவர் அமைத்திருக்கிறார்.

அத்தகைய பட்டத்து யானையின் மேல் ஏறிச் சங்கர சோழன் வீதியில் உலா வருகிறான். சந்திரனைப் போன்ற குடையைக் கவிக்கிறார்கள். கவரிகள் சுழல்கின்றன. புலிக்கொடி ஓங்கி நின்று அசைகிறது. சோழருக்குரிய கோரம் என்னும் குதிரை முன்னே செல்கிறது. அயலரசர்களும் யானைக் கூட்டமும் பலவகை ஆயுதங்களை ஏந்திய வீரர்களும் முன்னே செல்கிறார்கள். பலவகை இசைக் கருவிகள் முழங்குகின்றன. அந்தணாளரும் புலவரும் பொருநர்களும் வாழ்த்துகிறார்கள்.

சோழ மன்னன் பெண்கள் வாழும் மாட வீதிக்குப் போகிறான். அங்கே பல பெண்கள் ஒன்றாகக் கூடி அவனுடைய திருவுலாவைக் காண வருகிறார்கள். தங்கள் தங்கள் ஆடையும் ஆபரணமும் நழுவ அவர்கள் நிற்கிறார்கள். அவர்கள் உறுப்புக்கள் சோழ மன்னனை வரவேற்பதற்காக வைத்த பூரணகும்பம், கமுகு, கரும்பு, வாழை என்பவற்றைப் போல விளங்குகின்றன. மன்னனைப் பார்த்துப் பலபடியாகப் பாராட்டுகிறார்கள். அவன்பால் காதல் கொண்டு உருகி, பேச முடியாமல் தடுமாறி, மேனி நிறம் முதலியவற்றை இழக்கிறார்கள்.

பேதை

அவர்களுக்குள்ளே ஒரு பேதைப் பருவப் பெண். அவள் சிற்றில் கட்டி விளையாடுகிறாள். சோழ மன்னன் வருவதைக் காண்கிறாள். எல்லாரும் தொழுவதைக் கண்டு தொழுகிறாள். ஆனால் பேதையாதலின் அவளுக்குக் காம உணர்ச்சி எழவில்லை. அரசன் மார்பில் அணிந்த கவுத்துவ மணியைக் கண்டு, ''இதை என் மரப்பாச்சிக்கு அணிய வேண்டும்; வாங்கித் தாருங்கள்'' என்று தாய்மார் மடியைப் பிடித்து இழுத்துச் சொல்கிறாள். அவர்கள், ''அதைப் பெற முடியாது''

என்று சொல்லிச் சமாதானப்படுத்துகிறுர்கள். சோழமன்னன் அந்தத் தெருவைக் கடந்து செல்கிறுன்.

இந்தப் பேதை, அன்னம், மயில், கிளி ஆகியவற்றை வளர்க்கிறுள். கூட்டி முடியாத கூந்தலையுடையவள். அவள் பற்களிற் சில விழுந்திருக்கின்றன. அவளிடம் காமன் ஜபம் பலிக்கவில்லை. அவன் தன் அம்பை எய்யாமல் போய்விடுகிறுன். ஏழு பருவப் பெண்களில் மற்ற ஆறு பருவத்தினரும் சோழ மன்னனுடைய கோலத்தைக் கண்டு காமுற்றுத் தோற்கிறுர்களாம். இவள் ஒருத்தியே 'ஏழு பங்கில் ஒரு பங்கு வென்றவர் உண்டு' என்று சொல்லும்படி எதையும் இழக்காமல் தன் இல்லத்துக்கு மீள்கிறுளாம்.

"கோனை, எழுபங்கின் ஓர்பங்கு வென்றேருண்டென்னத்
தொழுபங் கயக்கைத் தொடியும்—பழவடிவும்
சிற்றிடையும் கொண்டு திருமீண்டாள்'' (156-7)

என்று புலவர் பாடுகிறுர்.

பெதும்பை

அடுத்த பெண் பெதும்பை. இந்தப் பருவத்தைப் பாடுவது எளிதன்று என்று சொல்வார்கள். ''பேசும் உலாவில் பெதும்பை புலி'' என்பது பழம் பாடல்,

பெதும்பை சகோட யாழ் எடுத்துப் பாடுகிறுள். மற்றப் பெண்களின் கூட்டத்தோடு கூடாமல் ஒதுங்கி யிருக்கிறுள். அவளுடைய பார்வையில் பேதைப் பருவத்துக்குரிய தன்மையும் மங்கைப் பருவத் தன்மையும் இணைந்திருக்கின்றன. குழலை முடித்திருக்கிறுள். பருவம் வந்த மங்கைமார் காதல் வயப்பட்டுக் கொள்ளும் மெய்ப்பாடுகளையும் செய்யும் செயல்களையும் கண்டு, 'எனக்கும் இப்படியான பக்குவம் வருமோ!' என்று மனத்துக்குள் ஆசைப்படுகிறுள். அவள் தன் தோழியருடன் சோலைக்கு விளையாட எண்ணிப் போகும்போது சோழன் வருகிறுன். அவனைக் காண்கிறுள். அவள் ஓரளவு அவன்பால் விருப்பம் கொண்டாலும் அது காமமாகப் பரிணமிக்கவில்லை. தன்னுடைய தாய்மாரோடு சேர்ந்து அவனை வணங்கிவிட்டு அவன் மாலையைப் பார்க்கிறுள்; ஆனுல் காமுருமல் அதைப் பார்ப்பதோடு நின்று விடுகிறுள். அவனுடைய கண், முகம், செவ்வாய், தாள், கரம் ஆகிய தாமரைகளில் அவள் இதயமாகிய தாமரை சார்கிறது; உடனே அதை மீட்டுக் கொள்கிறுள். உறவினர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு விடுப்பது போல இருக்கிறது இது. காமன் அம்பை எய்யாமல் மடக்கிக்கொண்டு போகிறுன். அவள் மன்னனைப் பார்த்து வேறு

படாதது கண்டு தாய்மார்களுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. அவர்கள் அவளை அழைத்துக்கொண்டு செல்கிறார்கள்.

பேதை தன் பருவத்துக் கேற்ற விளையாட்டுப்புத்தியினால் மன்னனுடைய அழகையோ அங்கங்களையோ பாராமல் அவன் மார்பில் உள்ள கவுத்துவமணி வேண்டுமென்று அலைத்தாள். பெதும்பையோ தன் உறுப்புக்கள் பருவவளம் பெறாவிட்டாலும் உள்ளத்தில் ஆசை கொள்கிறாள். மன்னனுடைய அங்க எழிலைப் பார்க்கிறாள், அப்படிப்பார்க்கும் அளவுக்கு அவள் வளர்ச்சி பெற்றிருக்கிறாளேயன்றி, அவற்றில் ஆழ்ந்து காமம் அடைய வில்லை. பெதும்பை பேதைக்கும் மங்கைக்கும் இடைநிலையில் இருப்பவள். அரும்புக்கும் மலருக்கும் இடைப்பட்ட போதாக இருப்பவள்.

''பேதை அரும்பிப் பெதும்பை ஒரு போதாகி
மாது மலர்ந்த வனப்பினாள்''

என்று கடம்பர் கோயில் உலாவில் வரும் கண்ணி இங்கே நினைவுக்கு வருகிறது.

மங்கை

மங்கைப்பருவத்துப் பெண்ணை அடுத்தபடி காட்டுகிறார் புலவர். பருவ அழகு நிரம்பிய அவள் பல மகளிரோடு வெண்ணிலா முற்றத்தில் இருக்கிறாள். அப்போது ஒருத்தி வந்து, ''சோழ மன்னன் உலாவருகிறான். அவனைக்கண்டு இவள் வளை முதலியவற்றை இழப்பதற்குமுன் அவற்றை இறுக்குங்கள்'' என்று எச்சரிக்கிறாள். மங்கை முன்பு அந்த அநுபவத்தை அறியாதவளாகையால் இருந்தபடியே வீதியிற்சென்று மன்னனைக் கண்டு வணங்குகிறாள். அவன் அழகுவெள்ளத்தை மொண்டு உண்டு யானையைப் பார்த்து, ''இங்கே நிற்பாயாக,'' என்று தொழுகிறாள். முன்னாலே ஒருத்தி சொன்னபடி வளை முதலிய வற்றை இழக்கிறாள். அரசன் அப்பால் செல்கிறான்.

உடன் இருந்த பெண்கள் சோழனைத்திருமாலாக வைத்து விளித்து முறையிடுகிறார்கள். கண்ணனாகவும் இராமனாகவும் அவதரித்தபோது செய்த ஆடல்களை நினைப்பூட்டி, ''இவளுக்குத் துன்பம்தரும் இவற்றை நீ மாற்றக்கூடாதோ?'' என்று நைந்து புலம்புகிறார்கள். ''இவளுக்கு விடையின் கழுத்தில் கட்டிய மணி ஓசை துன்பந்தருகிறது. நீ நப்பின்னைக்காக ஏழு விடை களை அடர்த்தாயே, இந்த விடையை அடர்க்கக் கூடாதோ?''

என்று கேட்கிறார்கள். புல்லாங்குழல் ஓசை காமுற்றாருக்குத் துன்பத்தை மிகுதியாக்கும். ''புல்லாங்குழல் துளையை மூடவும் திறக்கவும் பழகினாயே; இந்தப்புல்லாங்குழலிலிருந்து வரும் இசையாகிய நஞ்சை மூடக்கூடாதோ'' என்று வினவுகிறார்கள். இப்படிப்பலபல வினாக்களை விடுக்கிறார்கள். தாங்கள் எல்லோரும் கூடி மங்கையைப் பாதுகாக்கப் புகுந்தாலும் அவளுடைய விரகதாபம் அந்தக்காவலுக்குள் அடங்காது என்பதைப் பல உவமைகளைச் சொல்லிப் புலப்படுத்துகிறார்கள். ''யுகாந்த காலத்துக் கதிரவனுடைய வெயிலுக்குப் பரிகாரமாக வெண்ணெயால் குடைபண்ணி எடுக்க முடியுமா? மழையைத் தடுப்பதற்கு உப்புமலை பாதுகாப்பு ஆகுமோ? ஊழிக்காலத்துச் சமுத்திரத்தைச் சிறுவர் விளையாட்டில் கட்டும் அணையா தடுக்கும்? நெற்பயிரை உண்ண யானை வந்தால் அதற்குக் கரும்பால் வேலியிட்டுக் காப்பாற்ற முடியுமா? சோழமன்னன் அளித்த மையல் நோய்க்கு எங்கள் காவல் தடையாகுமா'' என்று அவர்கள் கேட்பதில் உள்ள நயம் அறிந்து மகிழத்தக்கது.

மடந்தை

அடுத்தவளாகிய மடந்தைப்பருவப் பெண்ணை, எழுபருவத்திலும் நடுநாயகமாக விளங்கும்படி வடிவமுள்ள மடந்தை என்று வருணிக்கிறார் ஆசிரியர். மேருவின் நடுவிலுள்ள மாற்றுச்சிறந்த பொன்னை உருக்கியும், ஆதிசேடனுடைய ஆயிரம் தலையிலுமுள்ள மாணிக்கங்களின் சோதி முழுவதையும் வாரியும் அமுதகலசத்து நடுவிலுள்ள அமுதத்தை மொண்டு கொண்டும் மதுக்கடல் தேன்கடல் என்னும் இரண்டின் நடுவில் சுவையான இடத்தில் அவற்றை வாரிக் கொண்டும் வந்து எல்லாவற்றையும் ஒன்றாகக் குழைத்து மன்மதன் அள்ளி அள்ளிக்கொடுக்க, பிரமதேவன் நன்றாக ஆராய்ந்து ஆராய்ந்து அழகாக உறுப்புக்களைச் சமைத்து அந்த மடந்தையின் வடிவத்தை வகுத்தானாம். அவள் முன் நின்று மாரன் பணி கேட்கிறானாம்.

சோழன் பவனி வரும் மட்டும் சோலையில் சென்று விளையாடலாம் என்று அங்கே சென்று அங்கே நவமணிகளில் ஒவ்வொரு மணியினாலும் ஒவ்வோருடலைக் கட்டியிருப்பதைக் காண்கிறாள். அவற்றுள் சோழனுடைய நிறத்தை உடையதென்று கருதி நீலமணியூசலில் ஏறுகிறாள். சோழனுடைய தசாங்கங்களைப் பாடி ஆடுகிறாள். அப்போது கூத்தர், பாணர், விறலியர், பாங்கியர் அவளைப் பாராட்டுகிறார்கள். அந்தச் சமயத்தில் சோழன் வீதியில் உலாவரவே அவள் ஊசலினின்று இழிந்து சென்று அவனைப்பார்க்கிறாள்; பணிகிறாள். மிக்கக் காமம் உள்ளே தோன்றி வழிய மடம், நாண் இரண்டையும் இழக்கிறாள். வளையும் மேகலையும் அவளை விட்டு அகல்கின்றன. சோழன் சென்றுவிடுகிறான்.

மறுபடியும் அவளைப் பூம்பொழிலுக்கு மகளிர் அழைத்து வருகிறார்கள். அங்கே இருந்த மான், வண்டு, மயில், அன்றில், அன்னம், புறு, கிளி ஆகியவற்றைப் பார்த்துத் தன் மயல் தோன்றப் பேசுகிறாள். பிறகு தன்னுடைய இல்லம் சென்று படுக்கிறாள்.

அரிவை

அடுத்த பருவத்துப் பெண் அரிவை. அவளுடைய பாங்கிமாரும் தோழிமாரும் சோழனுடைய பெருமையைச் சொல்லச் சொல்லக் கேட்டு மெய்பூரிக்கிறாள். அப்போது விறலி ஒருத்தி வருகிறாள். அவள் அரிவையின் உறுப்பு நலன்களைப் புகழ்ந்து பேசுகிறாள். அதற்கு மாறாக அரிவை கேள்வி தொடுக்கிறாள். ''உன் இடை பாம்போ?'' என்று விறலி கேட்கிறாள். அரிவை, ''பாம்பானால் மணியைவிடாதே! மன்னன் உலா வரும்போது தொழுதால் இந்தப் பாம்பு தான் அணிந்த மணி வடத்தை நழுவ விடாதோ?'' என்று எதிரே ஒரு கேள்வி கேட்கிறாள். அவனைக்கண்டால் மேகலை நழுவுமே என்ற கவலையை உள்ளடக்கியது அந்தக் கேள்வி. இப்படியே, ''உன்னுடைய நகில் பொதிகைமலையோ?'' என்று விறலி கேட்க, ''தென்றல் வீசினாலும் வெம்மையடையாமல் பூசிய சந்தனம் உலராமல் தாங்குமோ?'' என்று வினவுகிறாள். இப்படியே இருவரிடையும் மாறி மாறி வினாக்கள் எழுகின்றன.

அப்போது வீதியில் சோழன் வரவே அரிவை அவனைக் கண்டு தொழுகிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து அன்பு பொங்க உருகி நெகிழ்கிறார்கள். அவன் அவளுக்குத் தன் ஆத்தி மாலையை கொடுக்கிறான்.

இது ஒட்டக்கூத்தர் உலாவிலும் இந்த உலாவிலும் காணும் புதுமை. அரிவை உளமகிழ்ந்து தன்னோடு உரையாடிய விறலிக்குப் பொன்னை மிகுதியாக வழங்குகிறாள். அரசனுடைய நெஞ்சு அரிவையை நோக்கிப் பின்னேவர, அவள் மனம் அவனை நோக்கி முன்னே செல்ல' அரசன் அவ்விடத்தைவிட்டு அகல்கிறான்.

விறலிக்கும் அரிவைக்கும் இடையே நிகழும் உரையாடல் மிகவும் சுவைபயப்பதாக அமைந்திருக்கிறது.

தெரிவை

அப்பால் வருகிறாள் தெரிவை. பருவத்துக்கேற்ற உறுப்பு நலன்களை உடையவள் அவள். அவள் துயிலுணர்கிறாள். கனவில் சோழ மன்னனோடு இன்புற்றதாகக் கண்டவள் இப்போது விழித்தவுடன் இரையை இழந்த அன்னத்தைப்போலவும்

மடுவிலுள்ள அலையைப்போலவும் மறுகுகிறாள். கனவிலே உண்டான அறிகுறிகளை இப்போது காணாமல் வாடுகிறாள். அரசன் உலாவருவதை அறிந்து வீதியில் சென்று அவனுடைய வடிவழகைக்கண்டு நிற்கிறாள். ''என்னுடைய நாயகனே, எனக்குச் சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, கற்பகம், காமதேனு, மேரு மலை ஆகியவற்றை நீ வழங்கினாலும் நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். உன்னோடு இன்புறும் கனவை மீண்டும் காணும்படி யான் இழந்த துயிலைத் தா'' என்கிறாள். சோழன் அவளினும் பதின்மடங்கு வேட்கையைக் கொள்கிறான். அவளுக்கு மாலையும் அணிகலனும் நாடும் ஊரும் பொற்குவையும் வழங்கிவிட்டுப் போகிறான்.

உலாவரும் தலைவன் வேட்கை கொள்ளுதலும் பரிசு தருவதும் ஒட்டக்கூத்தர் உலாவிலும் இந்நூலிலும் வரும் புதிய செய்திகள்.

பேரிளம்பெண்

இறுதியில் வருபவள் பேரிளம்பெண். அவள்தன் கூந்தலில் பிறை, சீதேவி என்னும் அணிகலன்களையும் பூவையும் புனைவதைத் துறந்தவள். கண்ணுக்கு மை தீட்டவில்லை. இதற்கு தற்குறிப்பேற்றமாகக் காரணங்களைச் சொல்கிறார் ஆசிரியர். சோழனுடைய பகைவனாகிய பாண்டியனுடைய குலத்தின் முதல்வன் சந்திரன்; ஆகையால் அவள் பிறை என்னும் அணிகலனை அணியவில்லை. சோழமன்னனுடைய மார்பில் இருக்கும் திருமகளும் தோளில் உள்ள பூமகளும் அவளுக்குச் சக்களத்திகள். ஆகையால் அவர்களின் பெயரைச் சுமந்த சீதேவி என்ற அணிகலனையும் பூவையும் அணியவில்லையாம். சோழனுடைய கரிய நிறமாகிய அஞ்சனத்தை அணிவதே போதுமென்று கண்ணுக்கு அஞ்சனம் தீட்டவில்லையாம்.

''சோழமன்னன் நாளைக்கு உலா வருவான்'' என்று விறலியர் கூறக்கேட்ட அவள், காமுற்றவர்கள் வெறுக்கும் மாலை, கடல், சந்திரன், ஆவின் மணி, படுக்கை, சோழி ஆகியவற்றை விரும்பி வரவேற்கிறாள். அவையாவும் சோழனோடு தொடர்புடையனவாகக் காண்கிறவளாதலின் அவற்றை அவள் வெறுக்கவில்லை. சோழனுடைய குல முதல்வனாகிய கதிரவன் புகும்படி செய்தமையால் மாலைக்காலத்தை வரவேற்கிறாள். சோழனுடைய முன்னோர்களாகிய சகரர் தோண்டியமையின் கடல் அவளுக்கு நல்லதாகிறது. சோழனே திருமாலாதலின் அத்திருமால் பாற்கடலைக் கடைய எழுந்த சந்திரனும், சோழ

மன்னன் ஒருவன் இந்திரனை விடையாக்கி ஏறி ஊர்ந்தமையால் ஏற்றின் மணியும், சோழனைக் கனவில்கண்டு இன்புறவைத்ததனால் பாயலும், வேந்தன் பவனி வரும் காலைநேரத்தைக் காட்டக் கூவுதலால் கோழியும் அவளுக்கு விரும்புதற்கு உரியவை ஆகின்றன.

விடிகின்றது. தான் கனவிலே கண்டபடி சோழனைக்கிழியில் தீட்டலாம் என்று எண்ணிக் கிழியையும் வண்ணத்தையும் தோழிமார் தர வாங்குகிறாள். அவன் திருமாலின் அவதாரம் என்று எண்ணும் அவள் அப்பெருமான் வடிவத்தை எழுத இயலாதே என்று ஏங்குகிறாள். அப்போது ஒரு பெண், "முன்னை அவதாரங்களை எழுத நம்மால் இயலுமோ? இப்போது சோழமன்னனாக அவதரித்து விளங்குவதை எழுதுக" என்று சொல்ல, அவள் தெளிவு பெறுகிறாள். அப்போது மன்னன் வீதியிலே பவனி வரவே சென்று சேவிக்கிறாள். அவனைப் புகழ்ந்து பாராட்டுகிறாள். விரகதாபத்தால் மன்மதன் முதலியவர்கள் செய்யும் இன்னல்களை விலக்க வேண்டுமென்று முறையிடுகிறாள். இங்கே அவனை இராமனாகவும் கண்ணனாகவும் எண்ணி அவள் கூறுவன மிகவும் சுவையாக உள்ளன.

"கண்ணனாக வந்த போது வண்ணமகளின் கூனை நிமிர்த்திய நீ இந்தக் காமன் கரும்பு வில்லை நிமிர்த்தக்கூடாதோ? மாரீச மானைக் கொன்றநீ சந்திரனிலுள்ள கலைமானை எய்யக்கூடாதோ? காகத்தைச் செற்ற உன் அம்பு அதனால் வளர்க்கப்பெற்ற குயிலைச் செறலாகாதோ? மராமரம் ஏழைத் துளைத்த நீ என்னை வருத்தும் அன்றிற்கு இடமாகிய பனை மரத்தை அழித்தல் தவறோ? முன்பு சஞ்சீவி மலையைக் கொண்டு வந்த மாதிரி இப்போதும் கொண்டு வருவது அரிதோ? மலைகளை அணையிற் போட்டுக் கட்டின போது தமிழ்மலை என்று தென்றலை உண்டாக்கி என்னை வருத்தும் பொதிய மலையை விட்டுவிட்டாயோ?" என்று அவள் கேட்கிறாள்.

சோழன் அவளுக்கு ஆத்தி மாலையைச் சூட்டிக் கருணைக் கடலில் ஆட்டுகிறான். இதுவும் புதிய செய்தி.

இப்படிப் 'பருவத்து ஏழு வகைமைப்பாவையர் எல்லோரும் தெருவத்து இளையதிளைப்ப' உலாவருகிறான் சங்கர சோழன்.

சோழன் இயல்புகள்

சோழனுடைய இயல்புகள் பலவற்றை இவ்வாசிரியர் கூறுகிறார். அவன் சிவபக்திச் செல்வமுடையவன் என்பதை முன்பு பார்த்தோம். அவன் தமிழில் அன்புடையவன் என்பதை,

''தமிழ்ச்சங்கர சோழன்'' (காப்பு) என்பதனுலும், அவன் காதில் உள்ள குழையை, ''சால வினவுதமிழ்ச் செப்பொழுகும் தன்மை'' போல இருப்பதாகச் சொல்வதனுலும் (55), ''தமிழ் சிவந்து முற்றும் கனிவாய்'' (325) என்று வாயைச் சிறப்பிப்ப தாலும், ''நூலோர், உருகிய செந்தமிழ்ச் செஞ்சாலி ஓங்கப் பெருகிய பொன்னிப் பெருக்கே'' (375-6) என்று உருவகித்த லாலும் உணரலாகும். அவனுடைய வீரத்தைப் பலபடியாகப் புகழ்கிருர். அவனுடைய முன்ஞேர்களின் செயல்களை அவனுடைய செயல்களாக ஏற்றிச்சொல்கிருர். இது புலவர்களின் வழக்கம்.

பண் நிறைந்த நாகர் மகள்மணத்துப் பாரித்த
எண் இறந்த மாணிக்க ராகியோ (150)

என்று அவனுடைய முன்ஞேரில் ஒருவன் நாக கன்னி கையை மணந்த செயலையும்,

கூற்றுக் கெதிரினும் கோத்துரந்த இந்திர
ஏற்றுக் கனமணிஎன் றேமுற்ருன்

என்று இந்திரனை விடையாக ஊர்ந்த முன்னைச் சோழன் ஒருவன் செயலையும் சங்கர சோழன் செயலாகச் சொல்கிருர். இப்படியே,

பரணி
கவியாற் செயங்கொண்டான் கட்டுரைப்பக் கொண்டான் (388)

என்று குலோத்துங்கன் பெற்றதையும்,

கூத்தன் நிகழ்த்த ஒருமூன்று
உலாக்கொண்டான் (389)

என்று விக்கிரம சோழன் முதலிய மூவர் பெற்றவற்றையும் இவன் பெற்றதாகச் சொல்கிருர்.

திருமாலின் செயல்களைச் சங்கர சோழனுக்கு ஏற்றியும் அவ்வாறே இராமன், கண்ணன் ஆகியோர் செயல்களை ஏற்றியும் கூறுவதும் அச்செயல்களில் பலவற்றைப் பொருத்தமான வகையில் இணைத்துக்கற்பனை நயம்பெற அமைப்பதும் இந்நூலில் பல இடங்களில் காணலாம்.

பார் அளந்த பாதத்து எறிகடற்
காந்திய நீலக் கழல்வீக்கி (59)

இது திரிவிக்கிரமாவதாரத்தை நினைந்தது.

மாற்றவள் என்ப துணராது மன்இருதோள்
ஏற்றவள் பால்ஏற்றும் எல்லைக்கண் (141)

என்பது நிலமகள் நாயகனென்பது கருதிச் சொன்னது. இப்படி வரும் இடங்கள் பலப்பல.

இவ்வாசிரியர் தம் கூற்றாகவும் மகளிர் கூற்றாகவும் சங்கர சோழனைப் புகழ்ந்து கூறும் சொற்களும் சொற்றொடர்களும் அவனுடைய இயல்புகளையும் சோழமன்னர்களின் பெயர்களையும், நினைப்பூட்டுவன. அவை வருமாறு: அகளங்கன், அடலோன், அண்ணல், அபங்கன், அபயர்பெருமான், அபயன், அரசர் குலாந்தகன், அரசன், அரசு, அவனிபர் சிங்கம், அவினவன், அனகன், அனந்த கலாகரன், அனபாயன், அனுபமன், ஆரப் பிரசன், ஆரியன், இரவிகுலன், உத்துங்கதுங்கன், உபயகுலோத் தமன், உறந்தை வேந்தன், எந்தை, எம்கோன், கங்காபுர ராசன், காத்தரசு கொண்டான், கவிகைநிலாக்கொண்டான், காவலன், காளமேகம், குடையோன், கையம்பின் மையம்பை எய்தவன், கைதவன், கொடைவேந்து, கோ, கோமகன், கோமான், கோரன், கோழிவேந்தன், கோன், சக்ரபரிபாலன், சங்கம சங்கர சோழன், சங்கரராச தயாநிதி, சங்கர ராசன், சங்கரவேந்தன், சங்கரன், சங்கரன் பாதசேகரன், சயதரன், சனுதிபன், சாயசத்தைவிடும்சரன்; சீலன், செங்கமலை காந்தன், சென்னி, செம்பியன், சேவகன், சோணாட்டிறையவன், சோ ணாடர் பார்த்திபன், சோழன், சோளேசன், சோளேந்திரன், தகையோன், தரணி மன்னன், தவனகுலமன், தாமரர் கருவைத் துடைத்தோன், திகந்தம் இரு நான்கும் தொழும்தாளோன், திகிரிப்பகலோன், தினகரன், துங்கமன், தோன்றல், நவநீதச் சளவன், நாயகன், நிருபன், நிருபாபிடேகன், நிலம் ஏழுக்கு ஒருவன், நேரலர் காலன், நேரியன், பரணிகொண்டான், பரராசசேகரன், பருதி மரபாபரணன், பாடற்கொளை சூடிய ஆரன், பிரான், புத்தேள்வளத்தொன்னுடன், புவி வனிதை காந்தன், பூலோக சூரியன், பெரு வளவன், பொன்னிநதி ராசன், போதகலாமாதுமணக்கும் மணவாளன், மன், மன்னன், மனு குலக்கோன், மனுதுங்கன், மனுவேந்தன், மாற்றலர் காலன், மானுகரன், முறைதுறவாதான், மூன்றுலாக் கொண்டான், ராச சிகாமணி, ராச திவாகரன், வளவர்குலவிளக்கு, வளவன், வானவன், வீரக்கவசன், வீரதனுகரன், வீரோதயன், வேந்தன், வேந்து, வேங்கைத்துவசன்.

சோழனுடைய தசாங்கங்கள் ஒருங்கே ஓரிடத்தில் வரு கின்றன. (242) அவை: (1) மலை - நேரி, (2) ஆறு - காவிரி,

(3) நாடு - சோழநாடு (நீர் நாடு), (4) குதிரை - கோரம், (5) மாலை - ஆத்தி, (6) முரசு - மும்முரசு, (7) கொடி - வேங்கை, (8) யானை - அயிராபதம், (9) நகர் - காவிரிப்பூம்பட்டினம், (10) ஆணை - பேராணை. இவற்றில் சிலவற்றைத் தனித்தனியே சில இடங்களில் சொல்லுகிறார், ''நேரியனை'' (123), ''நேரியன்'' (169) என்னும் இடங்களில் நேரிமலையைக் குறிக்கிறார். காவிரியைப்பற்றிய செய்திகள் பல இடங்களில் வருகின்றன. காவிரியைக்குடகினூடே வழி கண்டு ஒரு சோழன் பாயச் செய்கிறான் (12); அவ்வாற்றுக்குக் கரிகாலன் கரை அமைக்கிறான் (13); சங்கர சோழன் காவிரித்தீர்த்தத்தால் திருமஞ்சனம் செய்து கொள்கிறான் (48); பொன்னிநதி ராசன் என்று அவனைப் புகழ்கிறார் ஆசிரியர் (113-4); செந்தமிழ்ப்பயிரை வளர்க்கும் பொன்னிப்பெருக்காக விளங்குகிறான் அவன் (376).

சோணாட்டிறையவன், சோணாடர் பார்த்திபன் (289,142) என்பவற்றில் சோழ நாட்டை இணைத்துள்ளார். சோழன் குதிரையாகிய கோரத்தை, ''கோரக் கதி செல்ல'' (90) என்பதிலும், ''ஐங்கதிக் கோரன்'' (371) என்பதிலும் காட்டுகிறார். சோழனுடைய மாலையாகிய ஆத்தியை ஆர், ஆரம், தாதகி என்று பரியாய நாமங்களால் சொல்கிறார். (124, 169, 179, 252, 386). ''கடைத்தலை மும்முரசம் கண்இரட்ட'' (41) என்று மும்முரசம் முழங்குவதைக் கூறுவார். கொடியாகிய வேங்கையைப்புலி என்றும் கொடுவாய் என்றும் சித்திரகாயம் என்றும் கூறுகிறார். புலி அடையாளத்தைப் பலவேந்தர்கள் அணிகிறார்கள் (37); மேருமலையில் புலி இலச்சினையைச் சோழர் பொறித்தனர் (50, 307, 332), புலிக்கொடி சூரிய மண்டலம் வரைக்கும் உயர்ந்து தோன்றுகிறது (88), பாண்டியனுடைய மீன்கொடியை ஓட்டிவிடுகிறது (129); வேங்கைத் துவசன் (356) என்பது சோழன் பெயர்.

பட்டத்துயானையைச் சொல்லும் போதெல்லாம் அயிராபதம் என்றே சொல்வார். அதன் சிறப்பைப் பல கண்ணிகளால் சிறப்பித்ததை முன்பு பார்த்தோம். புகார் நகரைத் தாமப் புகார் (250) என்பர்; தாமம்-ஒளி.

தெய்வங்கள்

பல தெய்வங்களைப்பற்றிய செய்திகள் அங்கங்கே வருகின்றன. காப்பில் சிவப்பு நிறமுள்ள விநாயகரையும், தேவயானை மணவாளனாகிய முருகப்பெருமானையும் சொல்கிறார். சிவபெருமான் புகழ் பலபடியாகப் பேசப் படுகிறது. அவன்

பவழக்குன்று போலவும் செவ்வான் போலவும் விளங்குகிறான் (63); வேதத்தில் உள்ள எல்லாப் பொருளுக்கும் ஆதிப்பொருள் (64); அவன் மறையவன் (96); அவன் தன் கையில் துடியை உடையவன் (63); பூரணன், ஆலப்பேருண்டியான், கால காலன் என்னும் திருநாமங்களை உடையவன் (309-10).

திருமால் வெண்பாற்கடலில் துயில்கிறவர் (43, 189, 295); வலம்புரியை ஏந்தியவர் (94); பூமிதேவியின் நாயகர் (97), திகிரியை ஏந்துபவர் (121), குயில் போன்ற கரியநிற முடையவர் (198); தம் திருமார்பில் திருமகளை உடையவர் (240). சோழனைத் திருமாலாகச் சொல்லும் இடங்களில் அப் பெருமானைப்பற்றிய பல செய்திகளைக் காணலாம்.

திருமகள், காளி, பூமிதேவி, பிரமன், இந்திரன், ஆதி சேடன், காமன், யமன், புதன் ஆகியவர்களை இடையிடையே காணுகிறோம்.

வீரச்செயல்கள்

அரசர் செய்யும் வீரச்செயல்கள் பலவற்றைச் சொல்கிறார் ஆசிரியர். போர்க்களத்தில் ஊனை உண்பதற்காகப் பருந்துகள் கூட்டமாகப் பறந்து பந்தர் போட்டாற்போல் இருக்கும் என் பதையும், பேய் பிணங்களை உண்டு களிக்கும் என்பதையும்,

> பருந்து நிழற்பந்தர்ப் பல்லா யிரம்பேய்
> விருந்து களிப்ப விடுத்தும் (34)

என்ற கண்ணியில் காணலாம். பகையரசர்கள் வென்ற வேந் தனின் இலச்சினையை அணிதல் மரபு (37); மேருமலையின் மேல் அதைப் பொறித்தல் சோழர் வழக்கம் (50, 307, 332); பகைவேந்தர் காலில் விலங்கிடுதலும், அவர்கள் திறையிட்டால் அதைத் தறித்து விடுதலும் அரசருக்கு இயல்பு (40); இறந்து போன வீரர்களுக்குக் கல் நட்டு அதன்மேல் வேப்பிலையை அணி வார்கள் (82); பலயானைகளை அட்ட வீரனைப் புகழ்ந்து புல வர்கள் பரணி பாடுவார்கள் (83)

வழக்கங்கள்

குறத்தி குறி சொல்ல அவளுக்குப் பொன் அளிப்பதும் (167), விறலிக்குப் பரிசு வழங்குதலும் (302), கிளி, குயில், மயில் ஆகியவற்றைத் தூதுவிடுவதும் (168), பறவைகளையும் மானையும் வளர்த்தலும் மகளிர் வழக்கம்.

அரசர் உலாவரும் போது பூரணகும்பம் வைத்துக் கமுகு, கரும்பு, வாழை முதலியவற்றை நாட்டுதலும் (106-7), பொன்னைத் தெருவிற் சிதறுதலும் (111), ஒற்றைச்சங்கு ஊதலும் (368), உறவினர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்ளுதலும் (181), தந்தையர் தம் புதல்வர் உச்சியை மோத்தலும் (54), நீரோடு பொன்னைத் தானம் வழங்குதலும் (49), மகளிருக்குத் திருமணப் பரிசாகத் தலைவன் தருவதை முலை விலை என்றலும் (140), ஆகிய வழக்கங்களை அங்கங்கே எடுத்துச் சொல்கிறார் இவ்வாசிரியர்.

அணிகள்

இந்நூலில் ஆசிரியர் பல வகையான உவமைகளையும் உருவகங்களையும் ஆளுகிறார். சிலேடையணியும் சில இடங்களில் அமைந்திருக்கிறது. ''இசைத்தேன் பசைத்தேனை மாந்தி'' (257) என்பதிலும் ''ஆர்மாலை நித்தம் அடு மாலை போ யோடுங்கக், கார்மாலை ஓதிக்குக் கைதந்தான் கூர் மாலை'' (300) என்பதிலும் சொற்பின் வருநிலை உள்ளது. ''அரக்கிளவி நாயகனும் ஆணையாம் தேனு, கரக்கிளவி நாயகனும் காப்பு'' என்பதில் திரிபு அமைந்திருக்கிறது. இப்படியே பிற சொல்லணிகள் பொருளணிகள் அங்கங்கே விரவியுள்ளன.

சொல் வழக்கு

தூதுவனைச் சந்தன் என்பார் (17); யானையைக் கரிணி (66) என்பார். பூசக்ரம் , மாசக்ரம், சக்ரபரிபாலன், என்று வடமொழி வடிவத்தில் தொடர்களை ஆளுவார். சோளேந்திரன், சோளேசன் என்பவற்றில் வடமொழி மரபை மேற்கொள்வர்.

ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாவைப் போலச் சொன்னடையும் பொருளமைதியும் கற்பனை நயமும் அமைந்தது இந்த உலா என்பதை அவற்றைப் படித்து அறிபவர்கள் நன்கு உணரலாம்.

பதிப்பு

இந்த உலாவின் கையெழுத்துப் பிரதி ஒன்று மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் தொகுத்து வைத்திருந்த நூற்கருவூலத்தில் இருந்தது. அது 29-1-1905 அன்று படியெடுத்து நிறைவேறியதாகத் தெரிகிறது. அப்பிரதியில் தெரிவைப்பருவத்தில் 323-ஆம் கண்ணியின் முன்பாதிக்குமேல் சில கண்ணிகள் விடுபட்டுள்ளன. ஓலைச்சுவடியில் ஓர் ஏடு

காணாமற்போயிருக்கக்கூடுமென்றும் அந்த ஏட்டின் இருபக்கங்களிலுமுள்ள சில கண்ணிகளே விடுபட்டுள்ளன வென்றும் தோன்றுகிறது. தெரிவையைப் பிறமகளிர் வாவிக்கரைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அப்பாலுள்ள பகுதியே காணப்படவில்லை. நீராட்டயர்ந்தபோது சோழன் உலாவரவே, அவனைச் சென்று தெரிவை காணும் வரையிலுள்ள செய்திகள் அப்பகுதியில் இருக்க வேண்டும். விடுபட்ட பகுதி போக எஞ்சிய கண்ணிகள் 389.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாகிய செந்தமிழ்ப் பத்திரிகையில் 7-ஆம் தொகுதி 12-ஆம் பகுதியிலும், 8-ஆம் தொகுதி 1, 3, 5, 7-ஆம் பகுதிகளிலும் இந்த உலாவின் மூலம் வெளியாகியிருக்கிறது. 309 கண்ணிகள் வரையிலுமே வெளிவந்து நூல் குறையாகவே நிற்கிறது.

கையெழுத்துப் பிரதியையும் செந்தமிழில் வெளியானதையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்து சிறந்தபாடங்களைத் தேர்ந்தெடுத்து இந்தப் பதிப்பை சித்தப் படுத்தினேன். பிறகு குறிப்புரையை எழுதி முடித்தேன். சோழ மன்னர்களின் பெருமையைச் சொல்லும் மூவருலாவோடு ஒப்ப வைத்து எண்ணத்தகும் இந்த உலா ஆராய்ச்சியாளருக்கு மிகவும் பயன்படும் என்று எண்ணுகிறேன்.

இந்த நூலை ஆராயும் போதும் குறிப்புரை எழுதும் போதும் உடனிருந்து உதவிய திரு. மு. கோ. இராமனுக்கும் சென்னை முத்தியாலு பேட்டை, உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. புலவர் S. சீனிவாசனுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசினரும் தமிழ்மக்களும் போதிய ஆதரவு தந்தால், ஐயரவர்கள் தொகுத்துவைத்துள்ள இது போன்ற பல அரிய நூல்கள் வெளிவரும் வாய்ப்பு உண்டாகும்.

காந்தமலை
சென்னை—28

கி. வா. ஜகந்நாதன்.
3-12-76

சங்கர ராசேந்திர சோழன் உலா

(காப்பு)

சங்கமன் தந்த தமிழ்ச்சங் கரசோழ
துங்கமன் மீதுலாச் சூட்டவே—அங்கேழ்
அரக்கிளவி நாயகனும் ஆனையாம் தேன்ஆ
கரக்கிளவி நாயகனும் காப்பு.

(நூல்)

சோழர் குல முறை

1. நீர்பூத்த வண்ணத்து நேமி திருமகன்கை
ஏர்பூத்த வையகம் ஈரேழும்—தார்பூத்த

2. தண்டு கவரத் தனதுகுடைக் கீழ்அடையக்
கண்டு மனுவரம்பு கண்டோனும்—மண்டலமும்

காப்பு: சங்கர சோழனாகிய துங்கமன்; துங்கமன் - தூய மன்னன். அம் கேழ் அரக்கு இள விநாயகனும் - அழகிய நிறம் அரக்குப்போன்ற இளமையையுடைய விநாயகப்பெருமானும். ஆனையாம் தேன் ஆகரக் கிளவி நாயகனும் - தெய்வயானை அம்மையாராகிய தேனைப்போன்ற சுவைக்கு இடமாகிய மொழியையுடைய தேவிக்கு மணவாளனாகிய முருகப்பெருமானும்; தேன் ஆகரக்கிளவி : அன்மொழித்தொகை. விநாயகன், முருகப்பெருமான் ஆகிய இருவருக்கும் காப்புக் கூறினார்.

1. நீர்பூத்த வண்ணம் - கடல்நீரைப் போன்ற நீல நிறம். நேமி- திருமால். திருமகன் - அவனுடைய புதல்வனாகிய பிரமன். கை ஏர் பூத்த - அவனுடைய கைவண்ணத்தால் தோன்றிய. தார் - அணி வகுப்பு.

2. தண்டு - படை. மனுவரம்பு கண்டோன் - மனுநீதியின் எல்லையைக் கண்டவன்; மனு என்னும் அரசன்.

1—2. வையகம் ஈரேழும் தனது குடைக்கீழ் அடையக் கண்டோன்.

3. வெம்மலைக் கோடு வலனோடும் வெய்யோனும்
செம்மலைப் பண்டூர்ந்த தேரோனும்—எம்மறிக்கும்

4. இம்பர் அடுபுலிக்கும் ஒக்கநீர் ஈந்தோனும்
உம்பர் விமானம் உகைத்தோனும்—வெம்போகம்

5. மிக்க புரந்தரன்ஊர் வேந்தனும் அக்கூற்றுக்
கொக்க வழக்கன் றுரைத்தோனும்—திக்கனைத்தும்

6. தாங்கி முதுமக்கட் சாடி யமன்படையின்
வாங்கி ஒளிப்ப வகுத்தோனும்—தூங்கிய

---

3. வெம்மலைக் கோடு - மேருசிகரம். வலன் ஓடும் - வலமாகச் சுற்றிவரும். வெய்யோனும் - கதிரவனும். ''உலகு உவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு'' (முருகு. 1-2). செம்மலை - தன் மகனாகிய அரசனை. தேரோன் - மனுச்சோழன் (விக்கிரமசோழன்.4; குலோத் துங்க.2; இராசராச.3.) மறி-மான்.

4. இம்பர் - இவ்வுலகத்தில்.

3—4. மானும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்தச் செய்த அரசன் மாந்தாதா (விக்கிரம சோழன்.5; குலோத்துங்கன்.7. இராச ராச.5. கலிங்கத். இராசபாரம்.12; கம்பர். குலமுறை.5.)

உம்பர் விமானம் - இந்திர விமானம். ஒரு சோழன் இந்திரவிமா னத்தை ஊர்ந்தானென்று சோழ ராசாக்கள் சரிதம் என்னும் பழைய நூலில் காணப்படுகிறது (விக்கிரம.6).

5. புரந்தரன் ஊர் வேந்தன் - இந்திரனை விடையாகக் கொண்டு ஊர்ந்தவன்; ககுத்தன். அக்கூற்றுக்கு - அந்த யமனுக்கு; அ : உலகறி சுட்டு. ஒக்க - சமானமாக. யமனுக்கு எதிர்நின்று வழக்குரைத்த சோழன் பெருநற்கிள்ளி என்று குலோத்துங்க சோழனுலாவின் பழைய உரை கூறுகின்றது (விக்கிரம.7; குலோத்.6; கலிங்க.இராச.15).

6. தாங்கி - பாதுகாத்து. முதுமக்கள் சாடி - ஆண்டு முதிர்ந்து மிகத் தளர்ச்சி அடைந்தவர்களை உள்வைத்து உணவு முதலியன வழங்கும் பானை. வகுத்தோன் - சுரகுரு; இவனை நாபாகன் என்பர் குலோத். உலா, பழைய உரையாசிரியர் (விக்கிரம.8; குலோத்.12; குலோத். பிள்ளைத். 39; திருவெண்காட்டுப் புராணம், சத்தியநல் விரதச்.9.) தூங்கிய - வானத்தில் தொங்கிய.

7. தாழ்கடகம் அன்றெறிந்த தக்கோனும் மேல்கடலைக்
கீழ்கடல் வாய்விடுத்த கிள்ளியும்—ஏழ்கடல்

8. மண்ணைப் புணர்ந்த முடியுடை மாநாகர்
பெண்ணைப் புணர்ந்த பெருங்கோவும்—பண்ணிய

9. பாயிரம் பெற்றதொரு பாட்டுக்குப் பன்னொருநூ
றாயிரம் பொன்பணித்த அண்ணலும்—சேயதொரு

10. பாடிய பாக்கொண்டு பண்டு பதினாறு
கோடி பசும்பொன் கொடுத்தோனும்—ஓடித்

11. திருநிறை தன்அடைந்த செந்தாட் புறவப்
பெருநிறை புக்க பிரானும்—பொருபொன்னிப்

---

7. கடகம் - படை. தக்கோன் - தூங்கெயில் எறிந்த சோழன் (புறநா.39; பழமொழி.155; சிலப்.3.29; மணி.1:3; விக்கிரம. 9; குலோத்.13); இவனைத் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்பர். கிள்ளி - சோழன்; இவனைச் சமுத்திரசித் என்றும் சம்ஹார்ஷண சக்கரவர்த்தி என்றும் கூறுவர் (விக்கிரம.9; குலோத். 14; இராசராச.14; கலிங்க.இராச.14).

8. மண்ணைப் புணர்ந்த முடியுடை மாநாகர் - பூமியைத் தாங்கிய தலையையுடைய பெரிய நாகர்; ஆதிசேடனை நினைத்துச் சொன்னது. மாநாகர் பெண்ணை - நாகலோகத்துக் கன்னிகையை. செவ்வந்திப் புராணத்தில், சூரவாதித்த சோழனென்பவன் நாகருலகம் சென்று நாக கன்னிகையாகிய காந்திமதியை மணந்து அங்கிருந்து வெற்றிலைக் கொடியைக் கொண்டுவந்து சோழநாட்டில் பயிரிட்டான் என்றொரு செய்தி வருகிறது (விக்கிரம. 10; குலோத்.19; இராசராச.16; கலிங்க.இராச.18); இவனைக் கிள்ளிவளவன் என்பர்.

9. பாயிரம்-வரலாறு. இந்தச் சோழன் யாரென்று தெரியவில்லை.

10. பாடிய பா-பட்டினப்பாலை. கொடுத்தோன்-கரிகால்வளவன். கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலையைக் கேட்டுக் கரிகால் வளவன் பதினாறு லட்சம் பொன் கொடுத்தான் என்றும் பதினாறு கோடி கொடுத்தான் என்றும் கூறுவர்; கலிங்க.இராச.21, ''பத்தொடாறுநூ றாயிரம்பெற'' என்று கூறும்; ''பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினாறு, கோடிபொன் கொண்டதுநின் கொற்றமே'' (193) என்பது தமிழ்விடுதூது.

11. திரு நிறை - செல்வம் நிறைந்த. தன் அடைந்த - தன்னைப் புகலாகப் புக்க. புறவப் பெருநிறை - புறாவுக்கு ஒப்பான பெரிய நிறை.

12. பேரா றருகு பெருகக் குடகூடற்
றோரா று கண்ட உரவோனும்—ஈரருகும்

13. எண்கரை செய்யா தெறிதிரைக் காவிரிக்குத்
தண்கரை செய்த தராபதியும்—திண்கனக

14. வெங்கைக் களவழிப் பாடலுக்கு வில்லவனைக்
கொங்கைத் தளைகளைந்த கோமானும்—செங்குருதி

15. புண்ஊறு தன்திரு மேனியில் பூணுகத்
தொண்ணூறும் ஆறும் சுமந்தோனும்—கண்ணு
தலோன்

பிரான் - சிபிச்சக்கரவர்த்தி. இவன் சோழர்களுக்கு முதல்வன் (புறநா. 37, 39, 43, 46; சிலப்.20-52; 23-58; 27-166-8; கம்ப.குல முறை. 7; விக்கிரம. 11; குலோத். 17; இராசராச. 6; கலிங்கத். இராச. 13.)

11—2. பொன்னிப் பேராறு - காவிரியாகிய பெரிய ஆறு. குடகு ஊடு அற்று ஓர்ஆறு கண்ட - குடகுமலையின் ஊடே அறுத்து ஒரு வழியை உண்டாக்கிய. குடகுமலையைக் குடைந்து காவிரியை அதன் வழியே பாயச்செய்தான் ஒரு சோழன் என்று ஒரு வரலாறு வழங்கு கின்றது. இவனைச் சிவுகன் என்பர். கவேரராசன், காந்தமன், காவிரிச் சோழன், சித்திரரதன் என்று பலவாறாகக் கூறுவதுமுண்டு (கலிங்க. இராச. 15; விக்கிரம. 12; குலோத். 12; இராசராச. 12.) உரவோன் - வலிமையுடையவன். ஈரருகும் - இரண்டு பக்கமும்.

13. கரைசெய்யாது - கரைந்துபோகச் செய்யாமல். தராபதி - அரசன். காவிரிக்குக் கரை கட்டியவன் கரிகாலன் (விக்கிரம. 13; குலோத். 18.)

13—4. திண்கனக வெங்கை - திண்ணிய பொன்னைச் சொரியும் வெவ்விய கையால். களவழிப் பாடலுக்கு - பொய்கையார் என்னும் புலவர் பாடிய களவழி நாற்பது என்னும் நூலுக்கு. வில்லவனை - சேரமான் கணைக்கால் இரும்பொறையை. கொங்கை - கொங்கு நாட் டில்; உருபுமயக்கம். தளை களைந்த - விலங்கை நீக்கிய. கோமான் - கோச்செங்கட்சோழன். இச்சோழனும் சேரமானும் கொங்குநாட்டி லுள்ள திருப்போர் என்னும் இடத்தில் போர் புரிந்தார்கள் என்றும், அப்பொழுது சேரனைச் சோழன் வென்று தளையிட்டுச் சிறைப்படுத்தி ஞன் என்றும் வரலாறுண்டு.

14—5. செம் குருதி புண் ஊறு - செம்மையான இரத்தம் புண்ணில் ஊறுகின்ற. பூணுக - அணிகலனைப் போல. விசயாலயச் சோழன் பல

16. நாடகத்தால் ஆனதிரு ஞானத் திருமன்றம்
ஆடகத்தால் வேய்ந்த அபயனும்—ஊடிய

17. சிந்தனைக் கேரள நாடொரு நாள்சிந்திச்
சந்தனைப் பார்த்த தகவோனும்—சிந்துரத்தைக்

18. காந்தரிக் கொப்பக் கடாரமும் கங்கையுங்கொண்
டேந்தரிப் பீடத் திருந்தோனும்—போந்தெரியிற்

19. கொல்யானைத் தானை கொடுமும் மடங்குபோய்க்
கல்யாணம் அட்டதனிக் காவலனும்—நல்யானை

20. ஒன்று யதுபிணிப்பக் கொப்பத் தொருதடக்கைக்
குன்று யிரம்பண்டு கொண்டோனும்—மன்றலம்

போர்களில் பகைவரை எதிர்த்துப் பல விழுப்புண்களைக் கொண்டவன். அவனையே தொண்ணூற்றுறு புண் கொண்டவன் என்பர் (விக்கிரம. 15; குலோத். 21; இராசராச. 19.)

16. நாடகம் - நடனம். ஞானத் திருமன்றம் - திருச்சிற்றம்பல மாகிய சிற்சபை; ''நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகனே'' (தாயுமானவர்.) ஆடகம் - பொன். அபயன் - சோழன்; இவன் முதற் பராந்தகன் (விக்கிரம. 16).

16—7. ஊடிய - மாறுபட்ட. சிந்தனைக் கேரள நாடு - கவலையை யுடைய சேர நாடு. சந்தனை - தூதுவனை; சந்து - தூது. தகவோன் - முதலாம் இராசராசன். தன்னுடைய தூதுவனைச் சேரமான் அவமதித் தான் என்பதை உணர்ந்து முதலாம் இராசராசன் சேரநாட்டுக்குச் சென்று மன்னனொடு பொருது வென்றான் என்பது வரலாறு (விக்கிரம. 17; குலோத். 24; இராசராச. 21.)

17—8. சிந்துரத்தைக் காந்து அரிக்கு ஒப்ப - யானையை எதிர்த்து வெல்லும் சிங்கத்தைப் போல. அரிப்பீடத்து - சிங்காதனத்தில். கங்கையும் கடாரமும் கொண்டவன், இராசேந்திர சோழன். இவனைக் கங்கைகொண்ட சோழன் எனவும் கூறுவர் (விக்கிரம. 18; குலோத். 25.) எரியின் - நெருப்பைப் போல.

19. மும்மடங்கு - மூன்று முறை. கல்யாணம் - சாளுக்கியரின் தலைநகரான கல்யாணபுரம். காவலன்-இராசாதிராசன் (விக்கிரம,19)·

19—20. நல்யானை ஒன்றுயது - நல்ல பட்டத்து யானை ஒன்றாக உள்ளது. பிணிப்ப-அடிப்படுத்த. கொப்பம் - ஓரூர்; இப்போது கித்ராபூர் என்று வழங்கும் ஊர் என்று கூறுவர். ஒரு தடக்கைக் குன்று - யானை· கொண்டோன் - இரண்டாம் இராசேந்திரன் (விக்கிரம. 20; இராச ராச. 24.)

21. காப்பணைக் கோயிற் கருமுகிற்கு மாணிக்கப்
பாப்பணை செய்தளித்த பார்த்திபனும்—காப்பரணக்

22. கூடல சங்கமத்துக் குஞ்சரம் பல்கோடி
ஆடலம் பொற்பரணிக் கட்டோனும்—கூடலார்

23. உம்பர் அணிகொள்ளக் கொல்வித் தொருகலிங்க
வெம்பரணி கொண்ட விறலோனும்—செம்பதத்துக்

24. கூடிய சீர்தந்த என்றெடுத்த கூத்தன்உலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய

25. வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டும்அவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்—தெள்ளியதன்

20—21. மன்றல் அம் கா பணை கோயில் - மணம் பொருந்திய அழகிய பொழில்களும் வயல்களும் கூடிய திருவரங்கம். கருமுகிற்கு - மேகம் போன்ற நீல நிறம் பொருந்திய அரங்கநாதருக்கு. பாம்பு அணை- சேஷசயனம். பார்த்திபன் - இராசமகேந்திரன் (விக்கிரம. 21).

21—2. காப்பு அரணம் - காப்பாகிய மதில்களையுடைய. கூடல சங்கமம் - துங்கபத்திரையும் கிருஷ்ணநதியும் கூடுமிடத்துள்ள ஓரூர். இங்கே நடந்த போரில் வெற்றி பெற்றவன் வீரராசேந்திர சோழன் (விக்கிரம. 22; இராசராச. 25.) இக்கண்ணியால் கூடலசங்கமப்பரணி என்று ஒரு நூல் இருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஆடல் - வெற்றி. பரணிக்கு - பரணி நூல் பெறும்பொருட்டு. அட்டோன் - அழித்தவன். கூடலார் - பகைவர்.

23. உம்பர் அணிகொள்ள - தேவருலகத்துள்ள படையொடு சேர்ந்து கொள்ள. கலிங்கத்துப்பரணி கொண்டவன் முதற் குலோத் துங்கன். செம்பதத்து - பொருளால் செம்மையையுடைய சொற்களால்.

24. ஒட்டக்கூத்தர் பாடிய விக்கிரம சோழனுலா, ''சீர்தந்த தாமரையாள் கேள்வன்'' என்று தொடங்குகிறது. கூத்தன் - ஒட்டக் கூத்தர்.

25. வெள்ளைக் கலி உலா மாலை - கலிவெண்பாவால் ஆகிய உலா என்னும் பாமாலை. பிள்ளைத் தமிழ் மாலை - குலோத்துங்கன் பிள்ளைத் தமிழாகிய பாமாலை. பெற்றோன் - இரண்டாம் குலோத்துங்கன். ஒட்டக்கூத்தர் இரண்டாம் குலோத்துங்கன் மீது உலாவும் பிள்ளைத் தமிழும் பாடியுள்ளார்.

26. முன்நாய கரின்அவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்ஆ யிரம்சொரிந்த பூபதியும்—என்னும்இவர்

சகோதரர்கள்

27. மாசக்ரம் மேரு வலம்செல் மகரசல
பூசக்ரம் ஏழும் புரந்ததற்பின்—தேசம்

28. பணியும் மனுகுலப் பாற்கடல் ஈன்ற
மணியும் அமுதமும் மானக்—குணபால்

29. உவந்த வளவர் குலவசலத் துச்சி
நிவந்த பருதி நிகர்ப்ப—அவந்திமன்

30. வங்கமன் கங்கமன் ஆதியவர் வந்தித்த
சங்கமன் தொல்லைத் தவம்போலப்—பங்கா

---

26. முன் நாயகரின் - முன்னிருந்த சோழ மன்னர்களைப் போல; அந்த மன்னர்கள் புலவர்களுக்குப் பொன் அளித்ததை நினைந்தது. மூதுலா - பழைய உலா; இந்நூல் பாடியதற்கு முற்பட்டதாதலின் இவ்வாறு கூறினார். இரண்டாம் இராசராச சோழனுலாவைக் குறித்தது இது. பூபதி - இரண்டாம் இராசராசன். "கூடல், நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக், கொராயிரம்பொன் ஈந்த உலாவும்" (தமிழ்விடு தூது.)

27. மாசக்ரம் மேரு வலம் செல் - பெரிய வட்டமான சூரியன் மேருவை வலமாகச் செல்வதற்குரிய இடமாகிய; மாசக்ரம் : ஆகுபெயர். மகரசல பூசக்ரம் ஏழும் - கடல் சூழ்ந்த நிலவட்டம் ஏழையும்; மகர சலம் - மகரமீன் உள்ள கடல்.

28. மனுகுலமாகிய பாற்கடல். மணி - சிந்தாமணி. குணபால் - கீழ்த்திசையில்.

29. வளவர் குலமாகிய மலையின் உச்சியில் எழுந்து தோன்றிய கதிரவனைப் போல. குலவசலம் : தமிழ் முடிபு. அவந்தி மன் - அவந்தி நாட்டு அரசன்.

30. வங்க மன் - வங்கநாட்டு அரசன். கங்கமன் - கங்கநாட்டு அரசன். வந்தித்த - வணங்கிய. சங்கமன் - சங்கரராச சோழனுடைய தந்தை.

31. எழும்திகிரி வெற்பை எனத்திகிரி யும்தன்
செழுந்திகிரி யின்திமிரம் தீர்ப்ப—மொழிஅனைத்தும்

32. வல்லமன் ஆதி மனுவினும் மேதக்க
நல்லமன் என்கின்ற நாயகற்கும்—தொல்லை

33. மலைக்கும் கடற்கும்நடு மண்முழுதும் காத்துச்
சிலைக்கும்பா தாளத்தைச் சீறித்—தொலைத்துப்

34. பருந்து நிழற்பந்தர்ப் பல்லா யிரம்பேய்
விருந்து களிப்ப விடுத்துக்—கருந்தலையின்

35. குன்று குவித்துக் குவித்த பிணக்குவடு
சென்று குருதித் திரைமிதப்ப—வென்றதற்பின்

36. பூசற் குடகடற்கே போர்வாட் கறைகழுவித்
தேசத் தொழியாத் திறைகொண்டு—காசினிக்கே

---

31. திகிரி வெற்பையென-சக்கரவாளகிரியில் இருளைப் போக்கியது போல. திகிரியும் - தன்னுடைய ஆக்ஞாசக்கரமும். செழுந்திகிரியின் - வளப்பத்தையுடைய வட்டமான உலகத்தின். திமிரம் - இருளை; என்றது வறுமை முதலியவற்றை. தன்னுடைய ஆக்ஞாசக்கரத்தால் சக்கரவாளகிரி அளவும் ஆணை செலுத்தித் துன்பத்தைத் தீர்த்தது போலத் தன்னுடைய நாட்டிலும் துன்பத்தைத் தீர்த்தான் என்றபடி. அவன் ஆணைக்குரிய புற எல்லையையும் அக எல்லையையும் கூறியபடி. ''கடலாழி வரையாழி தரையாழி கதிராழி களிகூர்வதோர், அடலாழி தனியேவு குலதீப ந்ருபதீப னருள்கூரவே'' (தக்க. 6) என்பது காண்க.)

31—2. மொழி அனைத்தும் வல்ல மன் ஆதி மனு - எல்லாம் மொழியும் வல்ல அரசனாகிய ஆதி மனு. பின்னர் மனுச்சோழன் என ஒருவன் இருத்தலின் ஆதி மனு என்றார். நல்லமன் - சங்கரராசனுடைய சகோதரன்.

32—3. தொல்லை மலை - சக்கரவாள கிரி. இதுமுதல் 37-ஆம் கண்ணிவரை மூன்றாம் குலோத்துங்கன் பெருமை கூறப்படும். சிலைக்கும்- ஆரவாரம் செய்யும்.

36. பூசல் - சண்டையிட்ட. மேற்குத் திசையிலுள்ள நாடுகளை வென்று வாளின் இரத்தக் கறையை மேல் கடலில் கழுவினான். ஒழியா - இடையில் அறாத. திறை - கப்பம். காசினிக்கே - உலகம் முழுதும்.

37. பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரற்கும்—மெய்த்துணையாய்த்

சங்கர சோழன்

38. தோற்றிய சங்கர ராசன் சுரராசன்
போற்றிய கங்கா புரராசன்—சீற்றத்

39. துறைப்படு வேலால் ஒழித்தொழி யாது
சிறைப்படு வேந்தர் திறையாய்—நிறைத்த

40. அரும்பொற் குவாலும் அடித்தளை விட்ட
கரும்பொற் குவாலும் கனலப்—பரம்பும்

41. கடைத்தலை மும்முரசம் கண்இரட்ட ஒற்றைக் [தேன்
குடைத்தலை அண்டமெலாம் கோலத்—தொடைத்

42. பலகளிக்கும் திண்டோட் பருப்பதத் தேந்தி
உலகளிக்கும் நாளில் ஒருநாள்—நிலவெறிக்கும்

---

37. பைத்த - இளமையான. பொரு புலியை - போர் செய்யும் புலியாகிய இலச்சினையை. தோல்வியுற்ற மன்னர்கள் பகைவர்களுடைய இலச்சினையை அணிந்து கொள்ளுதல் மரபு. குமார மகீதரன் - மூன்றும் குலோத்துங்கன்; இவனுக்குக் குமார குலோத்துங்கன் என்பது ஒரு பெயர். மகீதரன் - உலகைத் தாங்கும் அரசன். துணை - சகோதரன்.

38. சுரராசன் போற்றிய - இந்திரன் புகழ்ந்த. கங்காபுரம் - கங்கை கொண்ட சோழபுரம். சீற்றத்து - சினத்தினால்.

39. உறைப்படு வேலால் - உறையில் அமைக்கப்பட்ட வேலாயுதத்தால். ஒழித்து - இறந்துபடச் செய்து. திறை - காணிக்கை.

40. அரும்பொன் குவால்-அரிய பொன்குவியல். அடித்தளை விட்ட கரும்பொன்குவாலும் - அடியில் பூட்டிய விலங்குகளைத் தறித்துவிட்டதனால் அமைந்த இரும்புக் குவியலும்; கரும்பொன் - இரும்பு. கனல-நெருங்க. பரம்பும் - பரவும்.

41. கடைத்தலை - திருவாசலில். மும்முரசம் - கொடை, வெற்றி, மணம் ஆகியவற்றுக்குரிய மூன்று முரசங்கள். கண் - முரசில் அடிக்கும் பக்கம். இரட்ட - மாறி மாறி ஒலிக்க. ஒற்றைக் குடைத்தலை - ஒரு குடையின்கீழ். கோலம் - அழகு. தொடைத்தேன் - மாலையில் உள்ள வண்டுகள்.

41—2. தோளாகிய பருப்பதம். அண்டமெலாம் ஏந்தி.

பள்ளி எழுந்து அணிகலன் அணிதல்

43. வெண்பாற் கடல்கிடந்த மின்னும் புயலும்எனப்
பண்பாற் கடிஅனங்கப் பாயல்வாய்ப்—பெண்பாற்

44. கரசு பெருங்கற் பருந்ததி வந்து
பரசும் மறுஅறுபொற் பாவை—வரிசை

45. உலகம்அனைத் திற்கும் ஒருதாய் உலக
திலகம் அனையகுலச் செய்யாள்—பலவும்

46. நிறைந்த தனதுரிமைத் தேவியுடன் நீங்கா
துறைந்ததிருப் பள்ளி உணர்ந்து—கறங்கிக்

47. குதிக்கும் அருவிக் குருநீல நாகத்
துதிக்கும் ஒருபருதி ஒப்ப—மதக்குன்

48. றெருத்தப் பசும்பொற் றசும்பெடுத்த பொன்னித்
திருத்தத் தபிடேகம் செய்து—குருத்த

49. கதிரோன் உதயக் கடன்கடவ யாவும்
அதிர்ஓதை வேதத் தமைத்துச்—சதுர்மறையோர்

---

43. மின்னும் புயலும் என - திருமகளும் திருமாலும் போல. மாதேவிக்குத் திருமகளும் சோழனுக்குத் திருமாலும் உவமை. கடி அனங்கப்பாயல் - திருமணத்துக்குரிய காம விளையாட்டயர்கின்ற படுக்கை; அனங்கன் - காமன்.

44. இது முதல் 46-ஆம் கண்ணிவரை தேவியின் சிறப்பு. பரசும் - புகழும்.

46. திருப்பள்ளி உணர்ந்து - உறக்கத்தினின்றும் எழுந்து. கறங்கி - சுழன்று.

47. நீல நாகம் - கரு நிறம் பெற்ற மலை.

47—8. யானையின் பிடரியில் வைத்த பொற்குடங்களில் எடுத்து வந்த காவிரி நீரால் ஆடி. மதக்குன்று - யானை. எருத்தம் - பிடர். தசும்பு - குடம். திருத்தம் - தீர்த்தம். குருத்த - ஒளி செய்த.

49. கடவ - செய்யவேண்டுவன. அதிர் ஓதை வேதத்து அமைத்து- ஒலிக்கின்ற சுரங்களின் ஓசையையுடைய வேதத்தின் முறைப்படி செய்து.

50. பூங்கை மலரகத்துப் பொன்களில் தாம்பொறித்த
வேங்கை வரைநீக்கி மிக்கனவும்—தாம்கொணர்ந்த

51. கங்கையின் நீர்தவிர நீருள் கவர்ந்தெல்லாப்
பங்கய நீரும் பணித்ததற்பின்—வெங்களத்து

52. வேந்தர் புகழை விழுங்கி அதுகாலக்
கூர்ந்த சுடர்வடிந்து கோத்தென்னச்—சேர்ந்த

53. உடைவாள் விசிகச்சும் ஒண்தவளத் தூசும்
புடைவாள் எறிப்பப் புனைந்து—கடவுள்

54. இரவி பிறங்கடை உச்சிமோந் தென்ன
விரவிய மௌலி மிலைந்து—புரிகாதில்

55. சால வினவுதமிழ்ச் செப்பொழுகும் தன்மையிற்
கோல மகரக் குழைதூக்கி—வேல்விடுங்கைச்

49—51. மறையவர்களுக்குப் பொன்னைத் தானம் செய்யும் செயலை ஆசிரியர் கூறுகிறார். தாம் பொறித்த வேங்கைவரை - சோழர்களாகிய தாம் வெட்டிய வேங்கை இலச்சினையையுடைய மேருமலை; கரிகால் சோழன் வடக்கே படையெடுத்துச் சென்று இமயமலையில் வேங்கை இலச்சினையைப் பொறித்தான் என்பது வரலாறு. இமயத்தையே மேருவாகச் சொல்லுவது கவி மரபு. மிக்கனவும் - எஞ்சினவற்றையும். தாம் கொணர்ந்த கங்கை : இராசேந்திர சோழன் வடநாடு சென்று மன்னர்களை வென்று கங்கை நீரைக் கொண்டுவந்தான் என்பது வரலாறு. பங்கய நீர் - தாமரை மலர்ந்த பொய்கையின் நீர்; பங்கயம் : ஆகுபெயர்.

52-3. உடைவாளால் வேந்தரை வென்று அவர் புகழையெல்லாம் விழுங்கிப் பின் அதை அந்த வாள் உமிழ, அதன் ஒளி வடிந்து சேர்ந்தாற் போல வெள்ளைக்கச்சும் வெள்ளை ஆடையும் அணிந்தான். புகழ் வெள்ளை நிறமுடையது என்பது கவி மரபு. அது கால - அந்தப் புகழை உமிழ. கூர்ந்த சுடர் வடிந்து கோத்தென்ன - அதனால் மிகுந்த ஒளியானது வடிந்து கோத்தாற் போல. விசி - கட்டிய. தவளத்தூசு- வெள்ளை ஆடை. கச்சும் தூசும் வெள்ளை நிறமுடையவை. வாள் எறிப்ப - ஒளி வீச. கச்சும் தூசும் புனைந்து.

53-4. கடவுள் இரவி - கதிரவனாகிய தெய்வம். பிறங்கடை உச்சி மோந்தென்ன - தன் குலத்தில் தோன்றியவனுடைய உச்சியை மோந்து பார்த்தாற் போல. மௌலி - முடி. முடிக்குக் கதிரவன் உவமை.

55. தமிழ்ச் செப்பு - தமிழில் வாய் மலர்ந்த நூல்கள். மகரக் குழை - மகர மீன் வாயும் வாலும் கவ்வியது போன்று அமைத்த காதணி. இது தாழ்ந்து தொங்கும். தூக்கி - தொங்கவிட்டு.

56. சேய கவுரியற்குத் திங்கள் இரந்தாங்குத்
தூய தரளத் தொடிபூட்டி—நாயக

57. மாணிக்கச் செம்பூண் மரகதப்பூண் மார்புதோட்
காணிப் பெயரழகிற் கைசாத்தி—மாணிக்கம்

58. நள்அமைத்த பச்சுதர பந்தத்தை நாபியின்
உள்அமைத்த போதடைக் கொப்பாக்கி—
வெள்அரவம்

59. ஏந்திய பார்அளந்த பாதத் தெறிகடற்
காந்திய நீலக் கழல்வீக்கிச்—சாந்தும்

60. அகருவும் ஆரமும் தேனலர் அம்பொற்
சிகரி விரைகமழச் சேர்த்திப்—புகர்இகந்த

---

56. சேய கவுரியற்கு - ஒட்டாமல் தூர நின்ற பாண்டிய மன்னன் பொருட்டு. பாண்டியனுக்கு அருள் செய்யவேண்டுமென்று அவன் குல முதல்வனாகிய சந்திரன் சோழன் கையைப் பிடித்து இரந்தது போல, முத்துக் காப்பைக் கையில் அணிந்து கொண்டான். தரளத்தொடிக் குத் திங்கள் உவமை.

56-7. நாயக மாணிக்கம் - தலை சிறந்த செம்மணி. மார்பு தோள் காணி பெயர் அழகின் - மார்பிலும் தோளிலும் அவற்றுக்கு உரிமையான, விட்டு விளங்கும் அழகுக்கு ஒப்ப. கைசாத்தி - கையினால் அணிந்து. மாணிக்கப் பூணை மார்பிலும் மரகதப் பூணைத் தோளிலும் அணிந்து கொண்டான்; நிரனிறை. காணி - உரிமை. பெயர் - மிளிரும்; விட்டு விளங்கும்.

58. நள் அமைத்த - நடுவிலே பதித்த. பச்சுதர பந்தத்தை - பச்சை நிறமுடைய உதரபந்தம் என்னும் அணிகலனை. உதர பந்தம் என்பது உடை நழுவாமல் வயிற்றின்மேல் கட்டும் அணிகலனை. நாபியின் உள் அமைத்த போது அடைக்கு ஒப்பாக்கி - கொப்பூழின்கண் பொருத்திய தாமரையோடு சேர்ந்த இலைக்கு ஒப்பாகும்படி செய்து. போது - தாமரை மலர். அடை - இலை. மாணிக்கத்துக்குத் தாமரை மலரும் உதரபந்தத்துக்கு அதன் இலையும் உவமை. இவனைத் திருமாலாக நினைத்துச் சொன்னபடி. வெள் அரவம் - ஆதிசேடன்.

59. எறிகடல் காந்திய - அலை எறியும் கடலின் நிறத்தைபுடைய. நீலக்கழல் - நீலமணிகள் பதித்த வீரக்கழல். வீக்கி - கட்டி. இதுவும் சோழனைத் திருமாலாக வைத்துச் சொன்னபடி. சாந்தும் - சந்தனமும்.

60. அகருவும் - அகிலும், ஆரமும் - மாலையும். தேன்அலர் அம் பொற்சிகரி - வண்டு மொய்க்கும் மலர் மாலையை அணிந்த அழகிய மேருமலை போன்ற தோளில்; சிகரி : ஆகுபெயர். விரை - நறுமணம். புகர் இகந்த - குற்றம் நீங்கிய.

61. தண்ணந் திரிபுண் டரவெணிலாத் தையலார்
கண்ணஞ் சகோரக் கணம்ஆர்த்திப்—பண்அமைத்த

62. காலைப் படிமக் கலத்துக் கலாமதிய
மாலைப் பொருவும் வகைநோக்கி—மேலைமதி

புறப்படுதல்

63. ஒன்று தவழ்பவழக் குன்றை உலகனைத்தும்
சென்று கவிந்ததொரு செவ்வானைத்—தொன்றுதொட்

64. டோதிச் சுருதி உததிதரும் எப்பொருட்கும்
ஆதிப் பொருளை அடிவணங்கிச்—சோதி

65. படைக்கும் தடமகுடம் பல்கோடி தம்மிற்
புடைக்கும் புறங்கடை போந்து—கடைக்கணிப்ப

---

61. திரிபுண்டர வெணிலா-திருநீற்றுப் புண்டரமாகிய வெண்ணிலாவை. தையலார் கண் அம் சகோரக் கணம் ஆர்த்தி - பெண்களுடைய கண்களாகிய அழகிய சகோரப் பறவையினங்களை உண்ணச் செய்து. திருநீற்றுக்கு வெண்ணிலாவும் கண்களுக்குச் சகோரமும் உவமை. சகோரப் பறவை நிலாவை உண்ணும்.

61-2. பண் அமைத்த காலை - இவ்வாறு அலங்காரங்களைச் செய்து நிரப்பிய வேளையில். படிமக் கலத்து-கண்ணுடியில். கலாமதியம் மாலை பொருவும் வகை நோக்கி - கதிர்களை உடைய சந்திரனுக்கு நடுவிலுள்ள திருமாலை ஒக்கும் வண்ணம் பார்த்து. கண்ணுடிக்கு மதியமும் சோழனுக்குத் திருமாலும் உவமை.

62-4. சிவபெருமான் பெருமை.

63. பவழக்குன்றை - பவழமலை போன்ற சிவபெருமானை. சிவபெருமானைப் பவழக் குன்றுகவும் செவ்வானமாகவும் உருவகம் செய்தார்.

64. சுருதி உததி - வேதமாகிய கடல்.

65. தட மகுடம் பல்கோடி என்றது சோழனைக் காண வந்திருக்கும் பல மன்னர்களின் முடிகளை. தம்மில் புடைக்கும் - நெருக்கத்தினல் தமக்குள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும். புறங்கடை - அரண்மனை வாயில். கடைக்கணிப்ப - மன்னர்களைக் கடைக்கண்ணல் நோக்க.

பட்டத்து யானை

66. ஆதோ ரணர்கொணர ஆர்க்கும் மணிக்கரிணி
மீதோய் முகடுதொடும் வெங்கைமா—ஓதம்போய்

67. அப்புறத்தும் இப்புறத்தும் ஆமா றிறைத்திறைத்துக்
குப்புறப் பேராழிக் குன்றத்தே—துப்பும்

68. மகர திமிங்கிலகு லாதி வருக்கம்
குகர விடைமடுக்கும் கூற்றம்—புகர்முகக்கை

69. நீட்டும் தொறும்அனங்கன் நின்றுறங்காக் கண்ணோடு
பூட்டும் சிலைகரக்கும் போர்உவா—நீட்டியகை

66-85. சோழனுடைய பட்டத்து யானையின் வருணனை.

66. ஆதோரணர் - யானைப்பாகர். ஆர்க்கும் மணி கரிணி - ஒலிக்கின்ற மணிகளையுடைய பெண் யானை. மீ தோய் முகடுதொடும் வெம் கை மா - மேலே தோய்ந்த வானத்தின் உச்சியைத் தொடுகின்ற வெவ்விய துதிக்கையையுடைய விலங்கு.

66-8. யானை கடலில் உள்ள நீரை இறைந்து இறைத்துச் சக்கர வாளகிரியில் துப்பி, அக்கடல் நீரில் உள்ள மகர மீன் முதலியவை அந்தக் கிரியில் உள்ள குகைகளினிடையே புகும்படி செய்கின்றது. ஓதம் - கடல் அலை; இங்கே நீர். குப்புற - குதிக்க. பேராழிக் குன்றம் - பெரிய சக்கரவாளகிரி. மகரதிமிங்கில குலாதி வருக்கம் - மகர மீன் வகைகள், திமிங்கிலத்தின் வகைகள் முதலிய நீர் வாழ் இனங்கள். குகரம் இடை - குகைகளின் இடையே. மடுக்கும்- புகுத்தும். நீர் நிலையை விட்டு மகர மீன் முதலியவை குகைகளிற் புகுந்து இறந்துபடச் செய்தமையால் கூற்றம் என்று உருவகம் செய்தார். புகர்முகக் கை - புள்ளிகளையுடைய முகத்தினின்று தொங்கும் துதிக்கை.

69. யானை கை நீட்டும்பொழுதெல்லாம் அது பறித்து உண்டு விடுமோ என்ற அச்சத்தால் மன்மதன் தன் கையிலுள்ள கரும்பு வில்லை மறைத்துக்கொள்வானும். அனங்கன் - மன்மதன். சிலை - கரும்பு வில். உறங்காக் கண் என்றது, மன்மதனுடைய கண்ணைக் குறித்தது; அன்றி, கரும்பிலுள்ள கணுக்களைக் குறித்ததாகவும் கொள்ளலாம். அப்பொருளுக்கு உறங்காக் கண் என்பது வெளிப்படை. உவா - யானை.

70. காண்டா வனப்புகைபண் டுண்ட கடவுட்கா
வேண்டா தெழுகாவில் விட்டதீ—ஈண்டுலகத்

71. தெக்கயமும் எக்களத்தும் கைக்கொண் டிருநான்கு
திக்கயமும் மாறழியச் சீறிப்பின்—எக்கயத்தும்

72. பொங்கு குமுதமுடன் புண்டரிகம் என்கினும்
அங்கும் புனல்கலக்கும் ஆலாலம்—எங்கும்

73. பலகங் கிடறிப் படுகட வெள்ளம்
உலகம் கரந்துபரந் தோடிப்—பிலனுள்

74. திருப்புவன மும்பொற் சிவப்புவனம் மாற
இருப்புவனம் செய்த இபக்கோ—செருப்போய்ப்

69-70. முன்பு அருச்சுனன் காண்டாவனத்தை எரித்தபோது அதன் புகை வானளவும் சென்று கற்பகக் காட்டை வாடச் செய்தமையின் அதை வேண்டா வென்று ஒதுக்கிப் பிற மன்னர்களுடைய ஏழு பொழில்களையும் அழிக்கவிட்ட தீப்போன்ற யானை, வேறு தீ எச்சிற்படுத்தியதாதலின் அதை விட்டு மற்றப் பொழிலை அழித்தது. கடவுட்கா - கற்பகப் பொழில். கற்பகம் ஐந்து என்பது மரபாகலின் கா என்றார். எழு கா - ஏழு தீவுகளில் உள்ள பொழில்கள்.

71. எக்கயமும் - ஏவ்வகையான யானைகளையும். எக்களத்தும் - எந்தப் போர்க்களத்திலும். திக்கயமும் - திசை யானைகளையும். மாறு அழிய - பகை கெடும்படி. எக்கயத்தும் - எந்தக் குளத்திலும்.

71—2. எந்தக் குளத்திலேனும் குமுதம், புண்டரிகம் உண்டு என்று பெயரைச் சொன்னாலும் அவ்விடங்களிலும் நீரைக் கலக்கித் தன் கோபத்தைக் காட்டியது. குமுதம் புண்டரிகம் என்பன, பொய்கையில் வளரும் செங்குவளையையும் தாமரையையும் குறிப்பன. அவை இரண்டும் திசை யானைகள் எட்டில் இரண்டுக்குரிய பெயர்களாகவும் இருத்தலின் அவ் யானைகளை நினைந்து சாடியது. ஐராவதம், புண்டரிகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிர தீபம் என்பன எட்டுத் திசை யானைகளின் பெயர்கள். ஆலாலம்: உருவகம்.

73—4. யானையின் மதம் எங்கும் பரந்து சென்று நாகலோகத்துட் புகுந்து அதன் செந்நிறத்தை மாற்றி, இரும்பைப் போன்ற கரிய நிறத்தை அடையச் செய்தது. யானை மதம் கரிய நிறமுடையது. கங்கு - கரை. கடவெள்ளம் - மதவெள்ளம். பிலனுள் திருப்புவனமும் - பாதாளத்திலுள்ள அழகிய உலகமும். நாகலோகம் சிவப்புநிறமுடையது. இருப்பு வனம் - இரும்பின் வண்ணமாகிய கருமை. இபக்கோ - தலைமையையுடைய யானை.

75. பயந்தவரை எல்லாம் பருவருகை தீர்க்கும்
நயந்தவரை ஒத்தெல்லா நாட்டும்—உயர்ந்தமதில்

76. வாரி இடித்து மணிக்குவடு தன்கடத்து
வாரி மடுத்த மதவாரி—மேருக்

77. கனனுகக் கோடன் ைெருநாட் கடிந்த
மனனுகக் காற்றை மலைப்பத்—தினமும்

78. கிரிக்கோடு கோடி கிளரும்ஒரு கோடி
கரிக்கோ டொடித்தெறியும் காற்றுப்—பெருக்கருவித்

79. தண்பொருந்தம் ஆடித் தமிழ்மலையாய்க் கங்கையங்
கண்பொருந்த மூழ்கிக் கயிலையாய்—விண்பணிந்து

---

75. பயந்தவரை எல்லாம் - அஞ்சிய மன்னர்களை எல்லாம். பருவருகை தீர்க்கும் - துன்பத்தை நீக்கும், நயந்த வரை ஒத்து - பகை மன்னர்கள் சென்று மறைய விரும்பும் மலையைப் போன்று. போரில் அஞ்சிப் பின் வாங்கிய மன்னர்கள் புகுந்து மறைந்திருப்பதற்கு இடங் கொடுத்தலின் ' பருவருகை தீர்க்கும் வரை ' என்றார். தோற்ற மன் னர்கள் மலைகளிற் சென்று மறைந்திருத்தல் வழக்கம்; '' பொருந்தா அரசர், கானகம் பற்றக் கனவரைபற்ற '' (ஒட்டக்கூத்தர் பாடல்.) வரையொத்து உயர்ந்த மதில் எனக் கூட்டுக; யானை ஒத்ததென்றும் சொல்லலாம்.

75—6. மதில்களைக் கையினுல் வாரி இடித்து. பகைவர் புகுந்த மலைகளை இடித்து அவ்வாறே மதில்களையும் இடித்தது என்றும் ஒரு பொருள் கொள்ளலாம். மணிக்குவடு - மதில் மேலுள்ள அழகிய சிகரங்கள். தன் கடத்து வாரி மடுத்த - தன்னுடைய மதமாகிய கடலில் அமிழ்த்திய. மதவாரி - மதம் நிறைந்த கடல்; உருவகம்.

76—7. மேரு கனல் நாகக்கோடு - மேருவாகிய நெருப்புப் போன்ற சிவந்த மலையினது சிகரத்தை. ஆதிசேடனுக்கும் காற்றுக்கும் இகல் உண்டாகி, ஆதிசேடன் மேருவின் சிகரத்தை மறைக்க, காற்று அச் சிகரங்களில் ஒன்றைப் பறித்து வீசினுன் என்பது புராண வரலாறு. அன்ைெரு நாள் - ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் பூசல் நிகழ்ந்த அன்று. கடிந்த மன்னன் ஆகு அக்காற்றை. மலைப்ப - ஒப்ப.

78. கிரிக்கோடு கோடி கிளரும் - கோடி மலைகளின் சிகரங்களில் விளங்கும். கரிக்கோடு - யானையின் தந்தங்களை. காற்று : உருவகம்.

79. பொருந்தம்-தாமிரவருணி. தமிழ்மலை-பொதியில். சோழன் பாண்டியனை வென்று பொருநைக் கரையை அடைந்தபொழுது இவ் யானை அவ்வாற்றில் ஆடியது. பொருநையின் தொடர்பாலும் உருவத் தாலும் தமிழ் மலையாக உருவகித்தார். வடநாடு சென்று அங்குள்ள அரசர்களை வென்று சோழ மன்னன் கங்கையில் நீராடிய பொழுது இவ் யானையும் நீராடியது; கங்கையின் தொடர்புடைமையால் கயிலையாக உருவகித்தார்.

80. போம்மே ருவைவலந்த சாம்புநதம் புக்கந்த
மாமேரு வெற்பாய் வருமேரு—கோமகன்

81. வஞ்சிக்கும் ஓதை மகோதைக்கும் மாமதுரை
இஞ்சிக்கும் கொற்கைக்கும் ஏறுதொறும்—
வெஞ்சமத்து

82. முன்நின்று கோட்டு முனைபட் டிறந்திறந்து
கல்நின்ற வர்க்கிலகு காப்பணிந்தும்—சொல்நலத்தில்

83. சேர்த்தும் பொருளில் சிறந்த கவிவேந்தர்
ஏத்தும் பரணி எழுதியும்—பூத்தரச்

---

80. வலந்த - சுற்றிவந்த. சாம்புநதம் - நாவல் பழத்தின் சாறு ஓடும் ஆறு. சோழன் மேருவரை சென்றபோது சாம்பூநதத்தில் யானை ஆடியது. அதனால் மேருவாயிற்று.

81. வஞ்சி, மகோதை என்பன சேர மன்னனுடைய நகரங்கள். ஓதை - ஆரவாரம். மதுரையும் கொற்கையும் பாண்டியனுடைய நகரங்கள். இஞ்சி - மதில். சேரனுடைய நகரங்களையும் பாண்டிய னுடைய நகரங்களையும் அழிப்பதற்குச் செல்லும்பொழுது. சமம் - போர்.

82. கோட்டு முனை - கொம்பினது நுனி.

81–5. போரில் பகைவரின் படை வீரர்கள் இறக்க, அவர்களுக் குக் கல் நட்டு, அதில் பேய்க்குப் பாதுகாப்பாக வேப்பிலையை அணி வார்கள்; சோழனுடைய போர் வீரத்தைப் பாராட்டிக் கவிஞர்கள் பனையோலையில் பரணி நூலை எழுதுவார்கள். பாண்டியனுடைய மாலையைத் தரும் வேம்பும் சேரனுடைய மாலையைத் தரும் பனையும் இந்தச் செயல்களால் அழிந்தன. இவ்வாறு வேப்பம் பொழிலும் பனம் பொழிலும் அழிவதற்குக் காரணமான வீரத்தையுடையது பட்டத்து யானை என்று சொல்ல வருகிறார்.

82. கல் நின்றவர்க்கு-இறந்த வீரரின் பொருட்டு. அவர்களுடைய பெயரும் பீடும் எழுதிக் கல்லை நட்டு வழிபடுதல் வழக்கம். இலகு காப்பு அணிந்தும் - விளங்குகின்ற பேய்க்குப் பாதுகாப்பாகிய வேப் பிலையை அணிந்தும். ''அலகைக் காப்பணிந்தும்'' என்று பாடமிருப் பின் சிறக்கும். வேப்பிலைக்குக் கடிப்பகை என்பது பெயர். ''அரவாய்க் கடிப்பகை'' (மணி. 7:73); ''கடிப்பகைக்குத் தாதகியம் கண்ணியோ அம்மானை'' (தனிப்பாடல்). காப்பாக வேப்பிலையைச் செருகுதல் வழக்கம் என்பதை, ''வேம்பு மனைச்செரீஇ'', ''வேம்பு சினை ஒடிப்பவும்'' (புறநா. 281, 296) என்பவற்றால் உணரலாம்.

82-3. சொன்னலத்திலும் பொருளிலும். பூத்தர - வேம்பும் பனை யும் பூக்களைத் தர.

84. சூடிய பாண்டியனும் சேரனும் சூடாது
கோடி பொழில்அழிக்கும் கொல்யானை—ஆடற்

85. பணைக்கும் அயிரா பதம்புக் கதனை
இணைக்கும் புரசைஎருத் தேறிக்—குணிக்கரிய

வீதியில் வருதல்

86. தானைப் புணரி தரும்குமிழி ஓங்கியென
வானைக் கவிகை மதிகவிப்பச்—சேனை

87. உவரி மரக்கலமுன் ஓதம்மலைத் தென்னக்
கவரி கரிமுன் கறங்கப்—புவனியோர்

88. பண்ணரும் சித்திர காயப் பதாகைசுரும்
புண்ணரும் போதலரி யோடாட—மண்நிரந்து

84. பாண்டியன் சூடியது வேம்பு. சேரன் சூடியது பனை. பாண்டியனும் சேரனும் வெற்றி பெருமையின் தங்களுக்குரிய அடையாள மாலையைச் சூடாமற் போனதன்றி, நடுகல்லில் அணிந்தும் பரணி எழுதியும் வேம்பும் பனையும் ஒழிந்தமையின், அவற்றைச் சூட எண்ணினும் கிடையாத நிலை உண்டாயிற்று என்று கற்பனை செய்தார். ஆடல் - வெற்றியில்.

85. பணைக்கும் - பெருத்திருக்கும். அயிராபதம் - ஐராவதம்; சோழன் யானையையே இந்திரன் யானையாகக் கூறினர். இணைக்கும் - கட்டுகின்ற. புரசை எருத்து - கயிறு கட்டிய பிடரி. குணிக்கரிய - எண்ணுவதற்கரிய.

86. தானைப்புணரி - சேனையாகிய கடல். கவிகைக்குக் குமிழி உவமை. கவிகையாகிய மதி.

86-7. சேனையாகிய கடலில் யானையாகிய கலத்துக்கு முன் கவரியாகிய அலைகள் மோதின. உவரி-கடல். ஓதம் - அலை. கறங்க - சுழல.

88. சித்திர காயப் பதாகை - புலிக்கொடி. சுரும்பு உண் அரும் போது அலரியோடு - வண்டு உண்ணுவதற்கரிய, பொழுதைக் காட்டும் சூரியனோடு. போது அலரி என்பது பொழுதிலே மலரும் மலருக்கும் ஆதலின் அதை விலக்க, 'சுரும்பு உண்ணரும் போதலரி' என்றார்; வெளிப்படை. கொடி சூரிய மண்டலத்தளவும் ஓங்கி அசைந்தது. மண் நிரந்து - பூமியில் வரிசையாக நின்று..

89. தென்னர் கனவட்டம் சேரலர் பாடலம்
பின்னர்ப் பணித்தபணி பெற்றியங்க—முன்ஒருதம்

90. கோரக் கதிசெல்லக் கொல்லத்தர் பல்லவத்தர்
பாரத்தர் மக்கர் பரதத்தர்—மாரட்டர்

91. ஈழத் தவர்முதலோர் எண்இறந்த மாக்கடலும்
வேழத் தெறிகடலும் மேற்போத—ஆழி

92. மழுத்திரி சூலம்அயில் வாள்குலிசம் சாபம்
எழுத்திரள் ஆதிஇவை யாவும்—தொழிற்குச்

93. சுரர்எடுத்த அன்றித் தொழுபடைஈட் டத்து
நரர்எடுத்த எல்லாம் நடப்ப—அரன்எடுத்த

---

89. பாண்டியருடைய குதிரையாகிய கனவட்டமும் சேரர்களுடைய குதிரையாகிய பாடலமும் ஏவல் கேட்டுப் பின் வர.

90. கோரக் கதிசெல்ல - சோழருடைய குதிரையாகிய கோரத்தினுடைய வையாளி நடை முன்னாலே போக. கொல்லத்தர் - மலைநாட்டிலுள்ள கொல்லத்திலிருந்து வந்தவர்கள். பல்லவத்தர் - பல்லவ மன்னர்கள். பாரத்தர் - கடற்கரைப் பக்கத்திலிருந்து வந்தவர்கள்; பாரம் - கரை. மக்கர் - வெளிநாட்டிலுள்ள மக்கம் என்னும் நகரத்திலிருந்து வந்தவர்கள். பரதத்தர் - பரதகண்டத்தின் வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்கள். மாரட்டர் - மகாராட்டிர தேசத்திலிருந்து வந்தவர்கள்; மாராட்டர் என்பது எதுகை நோக்கிக் குறுகியது. பெரிய இராட்டிரகூட மன்னர் என்றும் பொருள் கொள்ளலாம். அவர்களை இரட்டர் என்று சொல்லுவது மரபு.

91. ஈழத்தவர் - இலங்கையிலிருந்து வந்தவர்கள். முதலோராகிய மாக்கடலும். ஆழி - சக்கரம்; இது திருமாலாயுதம்.

92. அயில் - வேல். குலிசம் - வச்சிரப்படை. சாபம் - வில். எழுத்திரள் - இரும்புக்கணையத்தின் கூட்டம்.

92—3. ஆழி முதல் எழுத்திரள் என்பது வரை உள்ளவை தேவர்களின் ஆயுதங்கள்.

93. சுரர் எடுத்த அன்றி - தேவர்கள் ஏந்திய ஆயுதங்களை அல்லாமல். ஈட்டம் - தொகுதி. நரர் - மனிதர். தேவர்கள் எடுத்த ஆயுதங்களையன்றி மற்ற எல்லாப் படைக்கலங்களும் இங்கே வந்தன. அரன் - சிவபெருமான்.

94. மானத் துடியும் நெடியோன் வலம்புரியும்
கானத் தியக்கர் கரநரம்பும்—மேல்நாள்

95. முனைத்த தருமன் முரசமும் நிற்ப
அனைத்தும் இயம்இயம்பி ஆர்ப்ப—நனைப்போ

96. திறைவன் மதிமகன் எண்புயத்தன் அல்லால்
மறையர் புதர்பொருநர் வாழ்த்த—நிறையும்

97. புயலைப் பிரான்என்று பூமான் புகப்போம்
இயலைப் படுதூளி ஏய்ப்ப—வியன்மறுகில்

98. மன்னர் முடிஅடர்ந்து வீழ்ந்த மணித்துகளை
அன்னர் தொடலைத்தேன் ஆறடக்க—இன்னணம்

---

94. மானத் துடி - பெருமையையுடைய உடுக்கை. இதுமுதல் இரண்டு கண்ணிகளில் இசைக் கருவிகளைச் சொல்லுகிறார். நெடியோன்- திருமால். கானத்து இயக்கர் கர நரம்பும் - இசைபாடும் இயக்கர் களுடைய கையில் உள்ள யாழும். நரம்பு : சினையாகு பெயர்.

95. தருமன் - இயமன். இயம் - இசைக் கருவிகள்.

94—5. துடிமுதல் முரசம் வரையிலுள்ளனவாகிய தெய்வங்களுக் குரிய இசைக் கருவிகள் அல்லாமல் மற்றவை முழங்கின.

95—6. நனைப்போது இறைவன் - தேனையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். இவனுக்கு மறையவன் என்பது ஒரு பெயர். மதி மகன் - சந்திரனுடைய மகனாகிய புதன். எண் புயத்தன்-சிவபெரு மான். மறையர் - அந்தணர். புதர் - புலவர். பொருநர் - வீரர். மறையவரில் பிரமனை ஒழிந்தவர்களும், புதர்களில் மதிமகனாகிய புதனை ஒழிந்தவர்களும், வீரர்களில் இறைவனை அல்லாதவர்களும் வாழ்த்தி னார்கள். அட்டவீரட்டம் என்ற தலங்களில் எட்டுவகை வீரத்தைக் காட்டியவனாகலின் சிவபெருமானைப் பொருநனாகக் கொண்டார்.

97. புயலை - மேகத்தை. பிரான் என்று - திருமால் என்று எண்ணி. பூ மான் - பூமி தேவி, புகப் போம் இயலை - அடைவதற்குப் போகின்ற தன்மையை. படு தூளி - அங்கே உண்டாகிய புழுதி; சேனுபராகம். கீழிருந்து தூளி மேலே போவது, வானத்திலுள்ள மேகத்தைத் திருமால் என்று எண்ணி அவனை அடைவதற்குப் பூமி தேவி போவது போல இருந்தது. வியன் மறுகில் - விரிந்த தெருவில்.

98. மன்னர்களின் மகுடங்கள் மோதியதனால் கீழே விழுந்த மாணிக்கப் பொடியை அவர்களுடைய மாலையிலிருந்து ஆறு போல ஒழுகும் தேன் அடக்கியது. துகள் - பொடி. அன்னர் - அந்த மன்னர் கள். தொடலை - மாலை. இன்னணம் - இவ்வாறு.

99. பன்மா டகயாழ்ப் பணிமொழியார் மாணிக்கப்
பொன்மாட வீதிவாய்ப் போதுதலும்—மென்மாலை

குழாங்கள்

100. சிந்தக் கலைந்த செழுங்குழல் மீன்உகுத்த
அந்தக் கருங்கங்குல் ஆகியும்—தந்த

101. நிரையுடை அஞ்சனம் நீக்கும் கயற்கண்
கரைஉடை வாரி கடுத்தும்—சரிஉடை

102. வீங்கிய முன்கை விசித்த திவவுபோய்
நீங்கிய வீணை நிலைமலைந்தும்—பாங்கியர்

103. யாத்த மணிக்கச் சிகந்த முலைபுயங்கன்
கோத்த பணம்அகன்ற குன்ருயும்—நீத்தன

---

99. மாடகம் - முறுக்காணி. யாழ் போன்ற பணிந்த மொழியை உடைய பெண்கள்.

100. மீன் - நட்சத்திரங்கள். கங்குல் - இரவு. மாலை சிந்திய கூந்தலுக்கு நட்சத்திரம் இல்லாத இரவு உவமை.

101. கரை உடை வாரி - கரை உடைந்த கடல். மையில்லாத கண்ணுக்குக் கரை இல்லாத கடல் உவமை. சரி உடை - வளைகள் உடைந்த.

101—2. சரி உடை முன்கை, வீங்கிய முன்கை எனக் கூட்டுக. சோழனைக் கண்டு பெற்ற உவகையால் மகளிர் உடம்பு பூரித்தது. விசித்த திவவு - கட்டிய நரம்புக்கட்டு. மலைந்தும் - ஒத்தும். வளை இல்லாத கைக்கு நரம்புக் கட்டு இல்லாத வீணை உவமை.

103. யாத்த - கட்டிய. இகந்த - நீங்கிய. புயங்கன் கோத்த பணம் அகன்ற குன்று - ஆதிசேடன் மூடிய படம் நீங்கிய மேருமலை. ஒரு சமயம் வாயு தேவனுக்கும் ஆதிசேடனுக்கும் போர் நிகழ, ஆதி சேடன் தன் படங்களால் மேருமலையை மறைத்தான்; வாயுவின் வலிமையினல் பின்பு படங்களை எடுத்தான். இந்த வரலாற்றை நினைந்து சொன்னது இது. கச்சு இல்லாத நகிலுக்கு ஆதிசேடன் படம் நீங்கிய மேரு உவமை.

104. காஞ்சித் திரள்அல்குல் காய்கிரணத் தோரணம்
போம்சித் திரத்தேர் பொருவியும்—காஞ்சன

105. மாடமும் பீடிகையும் மன்றமும் அங்கணமும்
கூடமும் மூழ்கக் குழீஇக்கொள்வார்—ஆடகப்

106. பூரண கும்பத்தும் பூகக் கனவனத்தும்
காரண விற்கருப்பங் கானத்தும்—சேரும்

107. அரம்பைக் குலத்தும் அவன்பவனி வீதி
நிரம்பப் புனைந்தென்ன நிற்பார்—அரும்பு

108. நகையார் முகிலில் நகைக்கும்மின் என்னப்
புகைஆர் அகில்பொதியப் போவார்—தகையோன்

109. குடையிடைப் பாய்ந்த கொழுநிலா வெள்ளத்
திடையிடைப் பாய்அமுதம் ஏய்ப்பார்—கடமாம்

103–4. நீத்தன காஞ்சி - காஞ்சியை நீத்த; வடமொழி முடிபு. காஞ்சி - மேகலை. மேகலையை நீத்த உறுப்புக்குத் தோரணம் இல்லாத சித்திரத் தேர் உவமை. பொருவியும் - ஒத்தும். காஞ்சனம் - பொன்.

105. பீடிகை-திண்ணை; மேடையுமாம். அங்கணம்-தாழ்வாரம். ஆடகம் - பொன். பணிமொழியார் (99) குழீஇக்கொள்வார் (105).

106. கும்பத்தும் - கும்பத்தாலும்; இது நகிலுக்கு உவமை. பூகக் கன வனத்தும் - கமுகாகிய பெரிய சோலையாலும். கமுகு, கழுத்துக் குவமை. கார் அணவு இல் கருப்பங் கானத்து - மேகத்தோடு அளாவிய வீடுகளில் கட்டிய கரும்புக் கூட்டத்தினாலும். கரும்பு, மகளிர் தோளுக் குவமை.

107. அரம்பைக் குலத்தும் - வாழைமரக் கூட்டத்தினாலும்.

106–7. பூரணகும்பம், கமுகு, கரும்பு, வாழை ஆகியவற்றால் சோழன் உலாவரும் வீதியை அலங்கரித்தாற் போல, அவற்றுக்கு ஒப்பான நகில், கழுத்து, தோள், துடை என்பவற்றோடு மகளிர் நின்றனர். அரும்பு - முல்லை அரும்பு.

108. அகிற்புகைக்கு மேகமும் மகளிர்க்கு மின்னலும் உவமை. தகையோன் - தகுதி உடையவன்; அழகுடையவன் என்றுமாம்.

109. குடைகளினால் பரவிய நிலாவெள்ளத்தின் இடையே பாய்ந்த அமுதத்தை ஒப்பார். சந்திரனிடத்தில் அமுதம் உண்மையின் இவ்வாறு கூறினார். குடைக்குச் சந்திரனும் அதன் ஒளிக்கு நிலாவும் மகளிர்க்கு அமுதமும் உவமைகள்.

110. தளிவிடு மாமலையச் சாமரைத் தென்றற்
கொளிவிடு மாந்தளிர் ஒப்பார்—அளியோடும்

111. தீனர்க் குதவச் சிதறிய பொன்மறுகில்
ஏனற் களக்கிளியின் எய்துவார்—தானைப்

112. பெரிதிரை வாரிப் பெருந்துரகம் என்னத்
திரிதிரை ஓதிமத்திற் செல்வார்—அரிவைமீர்

113. பொன்நா டனைத்தாளும் புத்தேட் புனிதவனத்
தொல்நா டனைநாம் தொழவாரீர்—பொன்னி

114. நதிராச ராச திவாகரனை நாகப்
பதிராச சேகரனைப் பாரீர்—முதுதவம்

115. சங்கர வேந்தன் சரணம் தொழஇந்தச்
செங்கரம் மேவு செயல்பாரீர்—எம்கோன்

109—10. மதமாகிய துளியை வீசுகின்ற பொதியிலைப் போன்ற யானையின் காதிலுள்ள கவரி வீசும் தென்றற் காற்றுக்கு ஒளி விடுகின்ற மாந்தளிரைப் போல்வார். தளி - துளி. தென்றலால் மாந்தளிர் ஒளி பெறும். அளி - அன்பு.

111. தீனர் - ஏழையர். அரசன் உலா வரும்பொழுது வீதியில் காசுகளை இறைப்பது வழக்கம். ஏனல் களம்-தினைக் கொல்லை. பொன்னை இறைக்கும் வீதிக்குத் தினைப்புனமும் மகளிர்க்குக் கிளியும் உவமை.

111—2. தானையாகிய வாரி. பெரிது இரை வாரி; பெரிது இரை-மிகுதியாக ஒலிக்கும். வாரி - கடல். சேனைக்குக் கடலும் குதிரைக்கு அலையும் மகளிருக்கு அன்னமும் உவமை. ஓதிமம் - அன்னம்.

112—25. குழாங்களின் கூற்று.

113. பொன் நாடு - வானுலகம். புத்தேள் புனித வனத்தொன்ஞடன் - இந்திரன். சோழனை இந்திரனுகச் சொன்னபடி.

113—4. பொன்னி நதி — காவேரியாறு. நாகப்பதி - நாகருலம்.

114—5. இந்தச் செங்கரம் மேவு செயல் - இந்த நம்முடைய கரங்கள் பொருந்திய செய்கையை தவம் கரம் செய்ததாகச் சொல்கிமுர்கள்.

116. தனிக்குடைக்கீழ் வாழத் தனித்தனி ஏழு
பணிக்கடலும் பெற்றவா பாரீர்—கனிக்கிளவிப்

117. பல்ஆரம் ஒப்பீர்இப் பானுகுலப் புண்ணியம்
எல்லாம்ஒன் றுய திவன்என்பார்—தொல்லைநாள்

118. அவ்வேந்தர் யாரும் ஒருதிவலை அத்திவலைக்
கிவ்வேந்தன் பவ்வம்ஓர் ஏழென்பார்—தெய்விகத்

119. தன்னர்க்கு நாள்ஆய தத்தனையும் இத்தரணி
மன்னற்கு நாளாக வாழ்கென்பார்—மின்னூர்க்குத்

120. திக்குக் கடப்பினும் இக்கோன் திருஅழகை
மிக்குக் கடவா விழிஎன்பார்—வைக்கும்

121. அவனித் திகிரிக் கரிதிகிரி ஏந்தான்
இவன்இத் திகிரிதரித் தென்பார்—பவனிக்காய்

---

116. ஏழு கடலும் சூழ்ந்த இடமெல்லாம் சோழன் ஆட்சிக்குள் அமைந்ததாக எண்ணிப் பாடியது. வாழப் பெற்றவாறு.

116—7. கனிக்கிளவி பல் ஆரம் ஒப்பீர் - சொல் கனிக்கும் பல் முத்துக்கும் ஒப்பாக உள்ளவர்களே. ஆரம் - முத்து. பானுகுலப் புண்ணியம் எல்லாம் - சூரியகுல மன்னர்கள் செய்த புண்ணியப் பயன்கள் யாவும்.

118. பழைய சோழ மன்னர் யாவரும் ஒரு துளியாகவும் அவர்களோடு ஒப்பு நோக்க இவன் ஏழு கடலாகவும் தோற்றுவான். பவ்வம் - கடல். தெய்விகத்து - தெய்வத் தன்மையினுல்.

119. அன்னர்க்கு நாள் ஆயது அத்தனையும் - அந்த மன்னர்களுக் குரிய வாழ் நாட்களாகிய அவ்வளவும். ஆயது : தொகுதி ஒருமை. மின்னூர் - மகளிர்,

120. விழி திக்கைக் கடந்து பார்க்கும் அளவுக்கு விரிந்தாலும் இவன் அழகை விட்டுக் கடந்து செல்லா.

121. அவனித் திகிரிக்கு - பூமியாகிய வட்டத்தைக் காக்கும் பொருட்டு. அரி - திருமால். திகிரி ஏந்தான் - சக்கராயுதத்தை ஏந்த மாட்டான். இத்திகிரி - இந்த ஆணைச்சக்கரம். இவன் சக்கரவர்த்தியாகி உலகத்தைக் காப்பதால் திருமால் சக்கரமேந்திக் காத்தல் தொழிலினின்றும் ஓய்வு பெற்றுன் என்றபடி.

122. இத்தலையர் கண்ணேகண் ஆகியே முக்கிமையா
அத்தலையர் கண்ணேகண் ஆகென்பார்—இத்தாம

123. நேரியனை நேரலர் காலனைப் பூலோக
சூரியனை ஏற்போம் தொழுதென்பார்—பார்முழுதும்

124. மாதா தகியாய் வனம்அனைத்தும் தோற்றிடினும்
போதா துதவுகைக்கிப் போதென்பார்—வேதாவுக்

125. கெண்ணற் கருந்தவம் எத்தருவும் இத்தருவாய்ப்
பண்ணற் கிழைத்திலோம் பண்டென்பார்—கண்
அழகால்

126. கொற்றக் கரடதடம் அன்றிக் கொலைக்களிறு
முற்றக் களிவண்டாய் மூய்க்கொள்வார்—
கொற்றமனு

---

122. இத்தலையர் கண்ணே கண் ஆகியேமுக்கு - இந்நிலவுலகத்தில் உள்ளவர்களின் இமைக்கும் கண்களே கண்களாகப் பெற்ற எமக்கு. இமையா அத்தலையர் கண்ணே கண்ணாக - வானுலகத்தில் உள்ள தேவர்களின் இமையாத கண்களே எங்களுக்குக் கண்களாக; ''இமையா நாட்டம் பெற்றிலம் என்றார்'' (கம்ப. மிதிலைக் காட்சி). தாமம் - மாலை.

123. நேரி என்பது சோழனுக்குரிய மலை. நேரலர் - பகைவர். ஏற்போம் - எதிர்கொள்வோம்.

124. தாதகி - ஆத்தி. இது சோழனுடைய அடையாள மாலை. உலகத்திலுள்ள காடுகளிலெல்லாம் ஆத்தி மரங்களே வளர்ந்தாலும் கூட்டமாக உள்ள மகளிர்க்குக் கொடுக்கப் போதாது என்றபடி. வேதா - பிரமன்.

124-5. எல்லா மரங்களும் ஆத்தி மரமாகப் படைக்கும்படி பிரமனை நோக்கி நாம் தவம் செய்யவில்லை. அருந்தவம் இழைத்திலோம்.

125-6. கரட தடம் - மதம் தோற்றும் இடங்கள். இவை மூன்றென்றும் ஏழென்றும் கூறுவர். மதநீர் மணமுடையதாதலின் அதில் வண்டு மொய்க்கும். மகளிர் பட்டத்து யானை உடல் முழுவதும் பார்ப்பதனால் அதன் உடல் முழுதும் வண்டுகள் மொய்த்தது போலாயிற்று. வண்டாய் மூய்க்கொள்வார் - கண்ணழகால் வண்டாய் மொய்த்துக் கொள்வார்.

127. துங்கன் உறுப்பில் சிலஅலது சூழ்ந்தெல்லா
அங்கமும் பங்கயக்கா டாக்குவார்—திங்களும்

128. தென்னர் நிமித்தம் மறைந்தென்னச் செம்முகமும்
முன்னர் விழிக்கலுழி மூழ்குவார்—தென்னர்பால்

129. மீன்இருக்கை செய்கலா வெம்புலிக் கம்புலியை
மான்இருக்கை என்ன மறைக்கிலார்—வேனிலான்

130. இக்குவளை வில்லால் வருங்குவளைக் கேங்கித்தம்
மைக்குவளை திக்கு வளைவிப்பார்—கைக்குவளை

126—7. மனு துங்கன் - மனுகுலத்தில் தோன்றிய பரிசுத்தமானவன். சூழ்ந்து - உள்ளத்தால் நினைந்து. உள்ளத்தை இதயகமலம் என்பராதலின் அக்கமலத்தைச் சார்த்தியதால் சோழனுடைய எல்லா உறுப்பையும் தாமரை போலத் தோன்றச் செய்வார். உறுப்பிற் சில வென்றது, கண், முகம், வாய், கை, கால் ஆகியவற்றை. இயல்பாக அவ்வுறுப்புக்களே தாமரையாகத் தோற்ற, இப்பொழுது மகளிர் இதய கமலத்தை வைத்தலால் மேனி முழுதும் பங்கயக் காடாயிற்று. மனத்தைப் பூவாக வைத்து அதைச் சேர்த்துவதாகச் சொல்வது இவ் வாசிரியர் இயல்பு; கண்ணி, 345 பார்க்க.

127—8. தென்னர் நிமித்தம் - தோல்வியுற்ற பாண்டியர்களின் பொருட்டு. விழிக் கலுழி - கண்ணீர் வெள்ளம். தோல்வியுற்ற பாண்டியரை எண்ணி அவர்களுடைய குல முதல்வனாகிய சந்திரன் மறைந்தது போலத் தங்கள் முகங்களைக் கண்ணீரின் மூழ்கச் செய்து மறைப்பார்.

129. மீன் - பாண்டியருடைய கொடி. வெம்புலி - சோழருடைய கொடி. வேனிலான் - மன்மதன்.

128—9. பாண்டியர்களுடைய கொடியாகிய மீனை நிலைத்திருக்கச் செய்யாமல் ஓட்டிய சோழனுடைய கொடியாகிய புலிக்கு உணவாகும் மான் இருக்கும் இடமென்று சந்திரனை மறைக்கவில்லை.

127—9. முகத்தை மறைத்தவர்கள் அம்புலியை மறைக்காததற்குக் கற்பனையாக ஒரு காரணம் கூறினார்.

130. இக்கு வளை வில்லால் - கரும்பாகிய மன்மதன் வளைக்கும் வில்லினால். குவளை மரணத்தை உண்டாக்கும் அம்பாதலின் ஏங்கினர்; ''முழுநீலம் மாதே, கொல்லுமதன் அம்பின் குணம்'' (பழம்பாடல்). மைக்குவளை - மையை அணிந்த கண்களை; உவம ஆகுபெயர்.

131. இல்லேம்எம் ஆவி இனிக்கணம் தாழ்க்கினும்
நில்லேம்என் றுண்மை நிகழ்த்துவார்—மெல்ல

132. இழையும் இளந்தென்றல் என்கின்ற தீயில்
குழையும் மெழுகிற் குழைவார்—மொழிஇழப்பார்

133. மேதை இழப்பார் பசந்துதம் மெய்இழப்பார்
கோதை இழப்பார் குழாத்தொருத்தி—பேதை

பேதை

134. உருவத் திளைஞர்க் குறுகண் விளையாப்
பருவத் தடுத்த படியே—அருகோம்பும்

135. அன்னம் மயில்கிள்ளைக் கெல்லாம் அலம்வருகைக்
கின்னம் அவயவத் தீட்டிலாள்—நன்னிறச்

136. செந்தேன் கடல்முகந்து சேர்ந்த தொருபுயலை
வந்தே கலைத்தன்ன வார்குழலாள்—பிந்தா

130-31. கைக்கு வளை இல்லேம்-உடம்பு மெலிந்தமையால் கையில் வளை இல்லாதவர்களானோம். ஆவி நில்லேம்.

132. இழையும் - வீசும்.

133. மேதை - அறிவு, பசந்து - பசலை பூத்து. மெய் - உடலின் நிறம். கோதை - மாலையை.

134. உறுகண் - துன்பம். இளைஞர்களுக்குத் துன்பம் விளையாத பருவம் என்றது, பேதைப் பருவத்தை. அருகு ஓம்பும் - அருகில் வைத்துப் பாதுகாக்கும்.

135. அலம்வருகைக்கு - தன்னுடைய நடை முதலியவற்றைக் கண்டு மனம் கலங்குவதற்கு. அலம்வருதல் - சுழலுதல்; இங்கே மனம் சுழலுதல். அவயவத்து ஈட்டிலாள் - தன் உறுப்புக்களில் தகுதியைப் பெறுதவள். அன்னம் நடையைக் கண்டும், மயில் சாயலைக் கண்டும், கிளி மொழியைக் கேட்டும் வெட்கி வருந்தும் அளவுக்கு அவளுடைய உறுப்புக்கள் பருவ முதிர்ச்சி பெறவில்லை.

136. புயலை - மேகத்தை. வந்து - காற்று. மேகத்தைக் காற்றுக் கலைத்தால் அது ஒன்றுபடாமல் கலைந்திருப்பது போல, முடியாமல் கலைந்திருக்கும் கூந்தலை உடையவள். செந்தேன் கடல் முகந்து சேர்ந்த புயல் என்றதனால், சிறிதளவு செந்நிறம் உடைய கூந்தல் என்று கொள்ள வேண்டும். பேதைப் பருவத்தில் கூந்தலில் முழுக்கருமை இராது.

137. நடையும் பெருநிருத்தர் ஆட்டமர் ஆட்டின்
மிடையும் பகழி விழியாள்—இடையிடைபல்

138. போயனவும் போகா தனவும் புடைத்தூட்டு
தாயர் முலையூற்றில் சாற்றுவாள்—தூயவாம்

139. துண்டத் திகிரிக் குருகு தொகுத்தபே
ரண்டத் தினைஅனைய ஆகத்தாள்—வண்டல்வாய்ச்

140. சேயும் வதுவை முலைவிலையும் செய்வதுவைக்
கேயும் உறவோர்க் கிடுசோறும்—சேயிழைதன்

---

137. நிருத்தர் ஆட்டு அமர் ஆட்டின் மிடையும் - நாடகம் ஆடுவார் கூத்தில் நடைபெறும் போரில் செறியும். பகழி - அம்பைப் போன்ற. நாடகத்தில் கைச்கொண்ட அம்பு உருவத்தால் அம்பு போல இருந்தாலும் அது யாரையும் குத்தாது; அதுபோல் பேதையின் விழியும் யாரையும் துன்புறுத்தாது.

137—8. புடைத்து - பருத்து. ஊட்டு - உண்பிக்கின்ற. முலையூற்றில் - நகில்களில் பேதை வாய் வைத்துப் பாலருந்தும்போது உண்டாகும் பரிசத்தால். சாற்றுவாள் - புலப்படுத்துவாள். பாலுண்ணும் போது பற்போன இடமும் பல்லுள்ள இடமும் நகிலில் தெரியுமாதலால் இவ்வாறு கூறினர்.

139. துண்டத் திகிரிக் குருகு - மூக்கையுடைய சக்கரவாகப் பறவை. தொகுத்த பேர் அண்டத்தினை அனைய - மறைத்துவைத்த பெரிய முட்டையைப் போன்ற. ஆகத்தாள் - மார்பை உடையவள். நகிலுக்குச் சக்கரவாகப் பறவையை உவமை கூறுதல் மரபு; ''முலைக்கும் நடைக்கும் முதற்பகை நாமென் - றுடைப்புண்டு, பின்னர்ப் பெருஞ் சக்ர வாகப் பெருங்குலமும், அன்னக் குலமு மலம்வர'' (இராசராச. 282—3.) முட்டை அப்பறவையை மறைத்துவைத்திருத்தலைப் போலப் பேதையின் மார்பு நகிலை மறைத்து வைத்திருக்கிறது; இன்னும் தோன்றவில்லை என்பது கருத்து. வண்டல்வாய் - விளையாடும் இடத்தில்.

140. சேய் - மரப்பாச்சி. வதுவை முலைவிலை - கல்யாணத்துக்குரிய சீதனம்; பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும்போது காதலன் தரும் சீதனத்தை முலைவிலை என்று கூறுவது பழைய மரபு. வதுவைக்கு ஏயும் உறவோர்க்கு - திருமணத்துக்கு வரும் உறவினருக்கு. சோறு - சிறுசோறு; மணற் சோறு.

141. மாற்றவள் என்ப துணராது மன்இருதோள்
ஏற்றவள் பால்ஏற்றும் எல்லைக்கண்—மாற்றலர்

142. காலனைச் செங்கமலை காந்தனைச் சக்ரபரி
பாலனைச் சோணாடர் பார்த்திபனைச்—சீலனைச்

143. சங்கர ராச தயாநிதியைச் சங்காழிச்
செங்கர ராச சிகாமணியை—வெங்கரமாக்

144. கொண்டு புகப்புகுந்து கோள்தாயர் போதப்போய்க்
கண்டு தொழத்தொழுது காமுறாள்—விண்தோயும்

145. நாவலந் தீவெல்லாம் நாற்கடல் காக்கும்ஒரு
காவலன் பூண்ட கவுத்துவத்தே—ஆவலளாய்

146. வாங்குமின் வண்டற் குழவி மணஅணிக்கென்
றாங்கு மடிஅலைப்ப அன்னைமார்—தாங்கலராய்த்

140—41. பேதை தரையில் சிற்றில் கட்டிச் சிறு சோறு இடுவதைக் கூறுகிறார். மாற்றவள் - சக்களத்தி. மன் இரு தோள் ஏற்றவள் பால் - அரசனது இரண்டு தோளையும் தனக்குரியனவாக ஏற்ற பூமி தேவியினிடம்; தரையில். சோழன் தன் தோளில் பூதேவியைச் சுமக்கின்றான். அவனைத் திருமாலாக வைத்து, அவனுடைய தேவியாகிய பூதேவியை மாற்றவள் என்றார். பேதை பருவம் அடைந்தால் சோழனை அடைவதற்குரியவளாதலின் பூதேவியை அவளுக்கு மாற்றவள் என்றார். பேதையாதலின் அவள் தனக்குச் சக்களத்தி என்பதை அறியாளாயினாள், சேய் முதலியவற்றை ஏற்றும் எல்லைக் கண். ஏற்றும் - கட்டும். எல்லை-வேளை. மாற்றலர் - பகைவர்களுடைய.

142. செங்கமலை காந்தன் - திருமகள் கணவனாகிய திருமால். சக்ரபரிபாலன் - சக்கரவர்த்தி.

143. சங்கு ஆழிச் செங்கர ராச சிகாமணியை - சங்கையும் சக்கரத்தையும் செம்மையான கரத்தில் ஏந்திய, அரசர்களுக்குள் தலைவனை. வெங்கர மா - வெவ்விய துதிக்கையையுடைய பட்டத்து யானை.

144. கோள்தாயர் - செவிலித் தாய்மார். காமுறாள்-சோழனிடம் காதல் கொள்ளவில்லை.

145. நாற் கடல் - சதுரங்க சேனையாகிய கடல். கவுத்துவம் - மார்பில் அணிந்த மணி. பேதையாதலின் சோழன்பால் காதல் உறாமல் அவன் மார்பில் அணிந்த மணிக்கு ஆசைப்பட்டாள்.

146. வண்டல் குழவி - சிற்றில் விளையாட்டில் கைக்கொள்ளும் குழந்தை; மரப்பாச்சி; இதைக் குழமகன் என்பர். மடி அலைப்ப - மடியைப் பிடித்து இழுக்க. தாங்கலராய் - பேதையின் நச்சரிப்பைப் பொறுக்காதவர்களாய்.

147. தூண்டிய மாவைத் தொழுது முழுதளந்த
பாண்டியர் ஆரத்தின் பல்கலமோ—ஈண்டிப்

148. பொரவிட்ட சேரர் மலாடு புறந்தந்து
வரவிட்ட வச்ர வடமோ—நிருபர்

149. முழங்கிய போர்தொலைப்ப மூதண்டர் லோகம்
வழங்கிய சிந்தா மணியோ—கொழுங்குதலைப்

150. பண்நிறைந்த நாகர் மகள்மணத்துப் பாரித்த
எண்இறந்த மாணிக்க ராசியோ—நண்ணும்இது

151. வையம் அளிப்ப மனுகுலத்து மால்வந்த
செய்ய அறிகுறிச் செய்கைகாண்—கைவருந்தத்

152. தான்ஓர் கிரிதிரித்துத் தன்திருப் பாற்கடலில்
வானோ ருடன்கடைந்து வந்ததுகாண்—தேன்நளினத்

---

147. தூண்டிய மாவை - செலுத்திய யானையை. இது முதல் 154 வரை தாயர் கூற்று. ஆரம் - முத்து. கலம் - அணிகலன். பாண்டி நாட்டில் முத்து மிகுதியாதலின் அவ்வரசர் முத்துக்கலன்களை இட்டனர். ''பூழியர்கோன், தென்னாடு முத்துடைத்து'' (தனிப்பாடல்.)

148. மலாடு - மலை நாடு. புறந்தந்து - முதுகிட்டு; தோற்று; பாதுகாத்து எனலுமாம். வச்ர வடம் - வயிரமாலை. மலையில் வைரம் விளையும்; ''மாமலை பயந்த காமரு மணியும்'' (புறநா. 219); ''அசல குல வச்ரப் பலகை'' (குலோத்துங்க. 41.)

149. அண்டர் லோகம் - தேவருலகம். சிந்தாமணி இந்திரனிடம் உள்ளது.

149—50. வளமான குதலையாகிய பண் நிறைந்த. ஒரு சோழன் நாககன்னிகையை மணந்த செய்தியை நினைந்தது இது (கண்ணி, 8.) பாரித்த - பரப்பிய.

151. உலகத்தைக் காப்பதற்காக மனுவம்சத்தில் அரசனாகத் திருமால் வந்ததற்கு அடையாளமாக அமைந்தது. அறிகுறிச் செய்கை- அடையாளமாக வைத்த செயல். கௌத்துவ மணி திருமால் மார்பில் உள்ளது.

152. தேவர்களுடன் திருமாலும் ஒரு கை கொடுத்துப் பாற்கடலைக் கடைந்தான் என்பது புராண வரலாறு; ''வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக், கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்

153. தேவியும் ஈதும் உடன்பிறந்த செல்வம்காண்
ஓவிய மற்றோர்க் குறுதுகாண்—தேவி

154. பிறியாமை ஒக்கும்இப் பெய்மணிக் கென்றன்
றறியாமை பாவைக் கமைத்தார்—தெறுகாமன்

155. மானைவந் தெய்யாது போத மனுவேந்தன்
சேனையும் தானும் தெருக்கடந்தான்—கோனை

156. எழுபங்கின் ஓர்பங்கு வென்றோர்உண் டென்னத்
தொழுபங் கயக்கைத் தொடியும்—பழவடிவும்

157. சிற்றிடையும் கொண்டு திருமீண்டாள் ஈதொருத்தி
பெற்றுடைய தப்பால் பிறிதொருத்தி—முற்றுகை

வயிறு கலக்கினையே'' (சிலப். ஆய்ச்சியர் குரவை). கிரி திரித்து - மந்தர மலையாகிய மத்தைச் சுழற்றி. பாற்கடலை அமிர்தத்துக்காகக் கடைந்தபோது வந்த பொருள்களுள் கவுத்துப மணியும் ஒன்று.

153, தேவி - திருமகள். ஓவிய மற்றோர்க்கு - அவர்களினின்றும் நீங்கிய மற்றவர்களுக்கு; அவள் அல்லாதவர்களுக்கு.

153—4. தேவி பிறியாமை இப் பெய்மணிக்கு ஒக்கும் - திருமகள் எவ்வாறு திருமால் திருமார்பைப் பிரியாமல் வாழ்கிறளோ அவ்வாறு பிரியாத் தன்மை இந்த மணிக்கும் பொருந்தும்; உம்மை தொக்கது. பாவைக்கு அறியாமை அமைத்தார் - பேதைப் பெண்ணுக்கு அறியாமையைப் பொருந்தச் செய்தார்; நீ கேட்பது அறியாமை என்பதைத் தெரிவித்தார் என்றபடி. தெறு - போர் செய்யும்.

155. மானை - பேதையை.

156. எழுபங்கின் ஓர் பங்கு வென்றோர் உண்டு என்ன - மகளிர் கூட்டத்தில் தாம் மயலுண்டு தோல்வியுறுமல் வென்றவர்கள் ஏழில் ஒரு பங்கினராகிய பேதைப் பருவத்தினர் உண்டு என்று சொல்ல. மற்றவர்கள் அவன் அழகுக்குத் தோற்றுக் காமுறப் பேதை சிறிதும் காமுறுது இருந்ததையே வென்றதாகச் சொன்னுர். தொடி - வளை. பழவடிவு - வந்தபோது இருந்த வடிவம்.

157. திரு - பேதை. மற்றப் பருவத்து மாதர் கைவளை நழுவ, வடிவு வேருகி இடை தளர்ந்து மயலில் உழப்பர். இவள் அவ்வாறு ஆகவில்லை. ஈது ஒருத்தி பெற்றுடையது - இது ஒரு பெண் பெற்ற நிலை. முற்றுகை - நிறைவு,

பெதும்பை

158\. கூடாச் சகோடம் தனிபாடிக் கூட்டமுடன்
பாடாப் பெதும்பைப் பருவத்தாள்—ஓடாது

159\. குன்றெட்டும் நாம்எழுந்து கோபித்தால் ஆற்றுங்
கொல்
என்றெட்டிப் பார்க்கும் இளமுலையாள்—மன்றத்து

160\. மண்அணிந்தார் தம்கண்ணும் மண்ணி அணிஅகலக்
கண்அணிந்தார் தம்கண்ணும் கண்அணிவாள்—
தண்மதிக்

161\. கோடித் திரிதிமிரம் ஆற்றா துடன்புணரக்
கூடித் திரண்டனைய கொண்டையாள்—பாடு

162\. குறுகநாட் கொள்வன கொங்கையென் றுள்ளம்
மறுகநாட் கொள்ளும் மருங்காள்—மறுகில்

158\. சகோடம் - சகோட யாழ். தனியே பாடுவாளேயன்றி மங்கையருடன் சேர்ந்து பாடாதவள்.

159, சிறிதே நகில் தோற்றும் பருவம் இது. மன்றம் - பொது விடம்; தெரு.

160\. மண் அணிந்தார் - மண்ணைப் பூசிக்கொள்ளும் பேதைப் பருவப் பெண்கள்: மண்ணுல் இல் முதலியவற்றைப் புனைந்தவர் என்றும் கொள்ளலாம். மண்ணி அணி அகலக்கண் அணிந்தார் - நீராடித் தம் திருமார்பில் அணிகலன்களை அணிந்த மங்கைப் பருவ மாதர்; பேதையர் கண்ணையும் மங்கையர் கண்ணையும் தன் கண்ணிலே பூண்டவள்; என்றது பேதைத் தன்மையும் மங்கைத் தன்மையும் இணைந்தவள் என்றபடி, ஆர்வத்தால் மங்கையின் நிலையும் இன்பம் துய்க்கும் பக்குவம் இன்மையால் பேதையின் நிலையும் உள்ளவள் ஆதலின் இருவகைப் பார்வையும் உள்ளவள் என்றார்.

161\. திமிரம் - இருள். இருள் திரண்டாற் போன்ற கொண் டையை உடையவள். பாடு - தனக்கு அழிவு.

162\. நாட்கொள்வன - தோற்றத் தொடங்குவன. உள்ளம் மறுக - மனம் வருந்த. நாட்கொள்ளும் - தோன்றும். மருங்கு-இடை. மங்கையைப் போல அடியோடு தோற்றமின்றி இராமல், சிறிதே தோற்றும் இடையுடையாள் என்றபடி. மறுகில் - தெருவில்.

163. பொருந்த இரண்டு புடையும் அடைய
இருந்த திருந்திழையார் எல்லாம்—விரிந்த

164. அவனிபர் சிங்கம் அனகன்அன பாயன்
பவனி தொழத்தொழப் பல்கால்—அவனே

165. இருங்கட் கடைஅடைந்தான் ஏகவிடோம் என்னக்
கருங்கட் கயல்மூடக் கண்டும்—ஒருங்கின்னம்

166. நேற்றுப் படுகனு நேர்க எனத்தெய்வம்
நோற்றுப் பராஎடுப்ப நோக்கியும்—தூற்று

167. விசும்பின் மழைகடுப்ப மெய்க்குறம்சொன் ஞட்குப்
பசும்பொன் மழைபொழியப் பார்த்தும்—கசிந்து

168. கிளிக்கும் குயிற்கும் மடமயிற்கும் கேண்மை
அளிக்கும் குறைஅறைவ தாய்ந்தும்—களிக்கும்

---

163. இரண்டு புடையும் - இரண்டு பக்கத்திலும்.

164. அனசன் - பாவமற்றவன்.

165. இது முதல் 170 வரையில் பிற மாதர்பால் நிகழ்வன வற்றைக் கூறுகிறுர்.

பெரிய கண்ணுகிய வாயிலே அடைந்தான். கண்ணுகிய கயலை மூட.

166. நேற்றுப் படு கனு - நேற்றுச் சோழனேடு அளவளாவி இன்புற்றதாகத் தோன்றிய கனவு. நேர்க - பொருந்துக. பரா- துதி.

167. மெய்க்குறம் சொன்னுள் - உண்மையாகிய குறியைச் சொன்ன குறத்தி. குறம் என்றது குறி கூறும் தொழிலே.

168. கிளி முதலியன வளர்ப்புப் பறவைகள். அவற்றைத் தூதாக அனுப்ப எண்ணி மங்கைமார் தமக்கு ஆகவேண்டிய காரியத்தைச் சொல்கிறுர்கள். கேண்மை அளிக்கும் குறை - அரசனுடைய நட்பைப் பெறுவதாகிய தங்களுக்குரிய காரியத்தை.

169. நிவப்போடு தூதுதரும் நேரியன் மாலைக்
குவப்போடு முன்செல்வ தோர்ந்தும்—இவைக்கய

170. தூரில் சருகேனும் சூடுதும் என்றந்த [லாய்ந்
ஆரிற் பொழில்அடுப்ப தாராய்ந்தும்—போரில்

171. சினக்கும் மதகளிற்றுச் சென்னிவரச் சேவித்
தெனக்கும் இதுவருங்கொல் என்று—மனத்தில்

172. வளையாடும் கைத்தோகை வாஞ்சித்தா யத்து
விளையாடும் சோலைப்போம் வேலை—வளவன்

173. உபய குலோத்தமன் உத்துங்க துங்கன்
அபயன்அக ளங்கன் அபங்கன்—புவிவனிதை

174. காந்தன் அனந்த கலாகரன் தென்உறந்தை
வேந்தன் உலாப்போத மின்போந்து—சேந்தன்

---

169. நிவப்பு - ஊக்கம். முன் செல்வது - தூதுப் பறவைகள் முன்னே போவதை.

170. தூரில் — மரத்தடியில். ஆரிற் பொழில் - ஆத்தி மரத்தால் அமைந்த சோலையை. சோழன் அணிந்த ஆத்தி மாலையைச் சூடும் பேறு கிடைக்காவிட்டாலும் ஆத்தி மரத்தின் கீழ் உதிர்ந்துள்ள சருகை யாவது சூடுவோம் என்று போனூர்களாம்.

171—2. சென்னி - சோழன். மற்ற மாதர் காமத்தால் செய்வன கண்டு, 'எனக்கும் இந்த நிலை வருமா?' என்று பெதும்பை விரும்பினுள், மனத்தில் வாஞ்சித்து; வாஞ்சித்து - விரும்பி. ஆயத்து விளையாடும் - மகளிர் கூட்டத்தோடு விளையாடுகின்ற. வேலை - நேரத்தில். வளவன்- சோழன்.

173. உபயகுலோத்தமன் - தாயின் குலம், தந்தையின் குலம் ஆகிய இரண்டும் உத்தமமாக அமைந்தவன். உத்துங்க துங்கன் - மிக உயர்வான தூயவன். அபயன் - அச்சமற்றவன். அகளங்கன் - களங்கமில்லாதவன். அபங்கன் - பங்கம் அற்றவன்,

174. அனந்த கலாகரன் - பல கலைகளுக்கும் இருப்பிடமானவன். மின் - பெதும்பை, சேந்தன் - முருகன்.

175. இருப்புறும் மஞ்ஞை வரினும்இள மஞ்ஞை
விருப்புறும் அல்லால் மிகுமே—திருப்பதுமன்

176. அன்னம் புகினும் அடாத இளம்பேடை
தன்நண் பலது தழுவுமே—பொன்உலகிற்

177. கோலக் களிறு பெறினும் குழைவொழிந்து
வாலப் பிடிபோய் மணக்குமே—நீலிதன்

178. வெங்கட் பரிஉறினும் வேட்கை சிறிதன்றிச்
சிங்கத் திளம்பிணவு செல்லுமே—எம்கோனைத்

179. தாய ரொடும்வணங்கித் தாதகியில் வீழ்ந்தெழும்
பாய சுரும்பென்னப் பார்த்தொழிந்தாள்—நாயகன்

---

175. இது முதல் 179 வரை பெதும்பை சோழனைக் கண்டு ஓரளவு விருப்பம் கொண்டாலும் மயலால் சோர்வுறாமையை உவமைகளால் எடுத்துரைக்கிறார்.

இளமஞ்ஞை : எழுவாய். பெட்டைமயிற் குஞ்சு முருகனுடைய மயில் வந்தாலும் விருப்பம் கொள்ளுமேயன்றி அதற்குமேல் சென்று இன்புற முயலுமோ. மிகுமே : ஏகாரம், வினா, பின் வரும் ஏகாரங்களும் அத்தகையனவே. பதுமன் - பிரமன்.

176. அடாத - நெருங்காத. நண்பு அலது - நட்புக் கொள்ளுவதையன்றி. பொன் உலகின் - தேவலோகத்திலுள்ள.

177. கோலக்களிறு-அழகையுடைய ஐராவதம். குழைவு ஒழிந்து-குழைந்து நிற்றலையன்றி. வாலப்பிடி - பெண் யானைக்குட்டி. நீலி - கொற்றவை.

178. வெங்கண் பரி - வெம்மையான கண்ணையுடைய வாகனம்; என்றது சிங்கத்தை. சிறிது வேட்கையன்றி. சிங்கத்து இளம் பிணவு-பெண் சிங்கக் குட்டி.

179. தாதகி - ஆத்திமாலை. அதில் விழுந்து தேன் உண்டு மயங்கி விடாமல் எழுந்து பறக்கும் வண்டைப் போல. பாய-பரவிய; இங்கே, பறந்த. சுரும்பு - வண்டு. பார்த்து ஒழிந்தாள் - பார்ப்பதையன்றி மயங்குதல் முதலியன செய்யாது ஒழிந்தாள்.

180. ஆளும் திருக்கண்ணும் ஆனனமும் செவ்வாயும்
தாளும் கரங்களும்ஆம் தாமரையில்—கேளிர்போய்

181. மெய்க்குமெய் தம்மில் தழுவி விடுத்தாங்கு
வைக்கும் உளமுளரி வாங்கினுள்—தைக்கும்

182. செயலைச் செயக்காமன் நீட்டிய வாளிப்
புயலைத் தொடைமடக்கிப் போனுன்—அயல்அகலா

183. வண்டெடுத்த கையார் நடுக்கடற்போம் மாணிக்கம்
கண்டெடுத்த தென்னக் களிசிறப்பார்—மண்டி

184. வெறித்த கடாவேழம் கைக்கொண்ட வேழம்
பறித்த மகிழ்ச்சி பயப்பார்—பொறித்தழலிற்

180—81. தன் உள்ளத்தைக் கண் முதலியவற்றில் செல்லவிட்டு அங்கே தங்கி விடாமல் மீட்டுக் கொண்டாள். உறவினர்கள் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு பிரிந்தது போல இருந்தது இச்செயல்.

கண் பார்வையினுலே பலவற்றைச் செய்பவளுதலின், ''ஆளும் திருக்கண்'' என்ருர். ''கண்ணிற் சொலிச்செவியின் நோக்கும்'' என்பது நீதிநெறி விளக்கம், 28. ஆனனம் - முகம், கேளிர்-உறவினர். தம்மின் மெய்க்குமெய் தழுவி விடுத்தது போல, உளமாகிய முளரி.

181—2. தைக்கும் செயலைச் செய - பிரயோகம் பண்ணிய இடத்தில் சென்று தைக்கும் காரியத்தை நன்கு செய்யும்பொருட்டு, வாளிப் புயலை - அம்பாகிய மேகத்தை; மழை சொரிவது போலச் சொரிவதற் குரியதாதலின் புயல் என்ருர். தொடை மடக்கி-தொடுத்தலை மடக்கிக் கொண்டு. பெதும்பை காமம் சாலா இளமையளாதலின் காமனுக்கு அங்கே வேலை இல்லையாயிற்று.

183. வண்டு எடுத்த கையார் - வளைகளைத் தாங்கிய கைகளை உடைய மாதர்; இவர்கள் பெதும்பையுடன் வந்த தாய்மார்கள். நடுக்கடல் போம் மாணிக்கம் - நடுக்கடலில் வீழ்ந்த மாணிக்கத்தை.

184. வெறித்த கடா வேழம் - வெறிகொண்ட மத யானை. வேழம் பறித்த - கரும்பைப் பறித்து மீட்டுக்கொண்டதனுல் உண்டான. பயப்பார் - அடைவார். தழலின் - நெருப்பைவிட.

185. நீதாய திங்களும் தென்றலும் தோன்ருது
வாதா யனத்தை வலிதடைத்தும்—போதாய

186. பாயல் படுத்துப் படுத்துப் பசும்பனிநீர்த்
தோயம் இறைத்திறைத்துத் தோள்சோர்ந்தும்—
ஆயிரமாம்

187. மங்கைப் பருவத்தர் தாயரின் மாயாமே
நங்கைக்குத் தாயர் நனிபிழைத்தார்—இங்கிதன்

188. பின்கொண் டகன்றது பெண்அரசைப் பெண்குழாம்
மன்கொண் டகன்றது மால்யானை—மென்கால்

மங்கை

189. பரிபுர மங்கைப் பருவத் தொருத்தி
அரிபுர வெள்ளத் தமுதம்—திருநாணும்

185—7. மங்கைப் பருவமுடைய மாதரின் தாய்மார்கள் அவர்களது மயலாலாகிய துன்பத்தைப் போக்க முயன்றதை இக் கண்ணிகளில் கூறுகிருர்.

185. வாதாயனத்தை - சாளரங்களை. வலிது அடைத்தும் - வலிமையாகச் சாத்தியும்.

185—6. போதாய பாயல் - மலர்களாலான படுக்கை. படுத்து - விரித்து. பனி நீர்த் தோயம் என்றது பன்னீரை; வேத வேதியர் என்பது போல நின்றது.

187. தாயரின் - தாயரைப் போல. மாயாமே - வருத்தம் அடையாமல். நங்கைக்குத் தாயர் - பெதும்பையின் தாய்மார்கள்.

188. பெண் அரசை - பெதும்பையை. பெண் குழாம் பெண் அரசைக் கொண்டு அகன்றது. மன் கொண்டு - சோழ அரசனைக் கொண்டு. மென் கால் - மெல்லிய காலில் அணிந்த.

189. பரிபுரம்-சிலம்பு. அரிபுர வெள்ளத்து அமுதம்-திருமாலின் இருப்பிடமாகிய பாற்கடலிலே தோன்றிய அமுதத்தைப் போன்றவள். திரு நாணும் - அழகிய நாணமும்.

190. வேயும் குழலும் மிகமிகத் தான்சிறிது
சாயும் கிரீவத் தமனியம்—சேயவர்

191. நன்றிக் கணிய தவத்தை நனிமுனிந்து
வென்றிக் கணிய விழிமுத்தம்—ஒன்றொடொன்று

192. கூடத் தொடங்கிக் குவிதலும் உத்தரியம்
மூடத் தொடங்கும் முலைத்தோகை—வாடி

193. இடைபோம் குடிஇனி என்றுதடை ஆகப்
புடைபோம் விரிசிகைப் பூவை—பிடிநடைப்

194. பாவையர் வாயால் வளர்க்கும் பசுங்கிளிக்குக்
கோவை அடவிக் குழாம்ஏய்ந்தும்—தூவி

---

190. வேயும் குழலும் - மலர்களை அணியும் கூந்தலும். மிக மிக- மிகுதியாக ஆக. கிரீவம் - கழுத்து. நாணத்தாலும் கூந்தற் பாரத்தாலும் கழுத்துச் சிறிதே வளைந்தது. தமனியம் - பொன்னைப் போன்றவள். சேயவர் - நெடுந்தூரத்திற் சென்று தவம் செய்யும் முனிவர்; சேயைப் போன்ற முனிவர் எனலும் ஆம்.

191. நன்றிக்கு அண்ணிய தவத்தை - தம்முடைய நன்மைக்காக மேற்கொண்ட தவத்தை. நனி முனிந்த வென்றிக் கண்ணிய விழி - நன்றாகக் கோபித்து வென்று வெற்றி மாலை சூடிய கண்; வென்றிக் கண்ணி - வெற்றிமாலை. இவளுடைய விழிப் பார்வை கண்டு முனிவர் தவம் குலைந்தது என்றபடி. முத்தம் - முத்தைப் போன்றவள்.

191—2. ஒன்றொடு ஒன்று கூட - இடைவெளியில்லாமல் ஒன்றோடு ஒன்று செறிந்து சேர. உத்தரியம் - மேலாக்கு.

193. இனி இடை குடிபோம்; குடிபோம் - ஓடிவிடும். என்று - என்று அஞ்சி. தடையாக - இடை போவதற்குக் காப்பாக. புடை போம் - சுற்றி வளையும். விரிசிகை - முப்பத்திரண்டு வடங்களை உடைய மேகலை. பூவை - மைனாவைப் போன்றவள்.

194. இது முதல் 198 வரை மங்கையுடன் இருக்கும் பெண்களின் வருணனை.

195. அணிபூத்த மாமயிலுக் கம்பொற் சுணங்கிற்
கணிபூத்த காடு கடுத்தும்—துணைபிரியா

196. அன்னக் கணத்துக் கடிதொடிக் கைவதனம்
வன்னக் கமல வனம்நேர்ந்தும்—பன்மையாய்

197. எய்துழை மாலைக் கிடைப்பசிய காஞ்சியிற்
கொய்தழை வல்லிக் குலம்போன்றும்—செய்ய

198. திருமால் நிறத்துச் சிறக்கும் குயிலுக்
குருமாந் தளிர்க்கானம் ஒத்தும்—அருகே

199. விருப்ப மொடுதிரண்டு வெண்ணிலா முற்றத்
திருப்ப இருந்ததோ ரெல்லை—ஒருத்தி

வாயால் - தம் வாய்களினுல். கோவை அடவிக் குழாம் ஏய்ந்தும்- கோவைப் பழக் காட்டின் கூட்டத்தை ஒத்தும். கிளிக்குக் கோவைக் கனி உவப்பானது. மங்கையர் வாய் கோவைப் பழம் போல இருப்பது. வாயால் ஏய்ந்தும் என்று கூட்டுக. தூவி - சிறகு.

195. பொற் சுணங்கின் - பொன்னிறம் பெற்ற அழகுத் தேமலினுல். கணி பூத்த காடு - வேங்கை மலர் பூத்த காடு. கடுத்தும் - ஒத்தும். சுணங்குக்கு வேங்கை மலர் உவமை; ''நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச்சுரும் பரற்றும் சுணங்கின்'' (சிறுபாண். 23–4). மயில் வேங்கை மரத்தில் விரும்பித் தங்கும்; ''பூத்த வேங்கை வியன்சினை யேறி, மயிலின மகவும் நாடன்'' (பழம்பாடல்).

196. தொடிக்கை - வளையை அணிந்த கை. கமல வனம் - தாமரைக்காடு. அன்னப்பறவைகளுக்கு ஏற்ற தாமரைவனம் போல அடி முதலியன இருந்தன.

197. உழை மாலைக்கு-மான் வரிசைக்கு. இடைபசிய காஞ்சியின்- இடையில் அணிந்த மரகதக் கல்லால் அமைந்த மேகலையினுல்; எட்டுக் கோவையையுடைய மேகலைக்குக் காஞ்சி என்று பெயர். தழைவல்லிக் குலம் - தழையையுடைய கொடியின் கூட்டம்.

198. திருமால் நிறத்து - திருமாலின் கரிய நிறத்தைப் பெற்ற. உரு - நிறம். மாந்தளிர்ச் கானம் - தளிரையுடைய மாந்தோப்பு. உரு ஒத்தும். மாமரம் குயிலுக்கு விருப்பமானது; ''அடைகரை மாஅத் தலங்குசினை யொலியத், தளிர்கவி னெய்திய தண்ணறும் பொதும்பிற், சேவலொடு கெழீஇய செங்க ணிருங்குயில்'' (நற். 118.) பாவையர் (194) அருகே (198) இருப்ப (199) எனக் கூட்டுக.

199. ஒருத்தி - ஒரு தோழி.

200. அதிர்ந்தது பேரியம் ஆர்த்தது சங்கம்
உதிர்ந்தது பூமாரி ஓரை—எதிர்ந்த

201. திரவி குலன்அபயன் இப்பவனி யிற்போய்ப்
பரவி இழக்கப் படுமுன்—நிரைவளையைத்

202. துன்ன நெருக்குமின் வீக்கித் துகில்உடுமின்
இன்னம் மணிக்கச் சிறுக்குமின்—மின்னனையாட்

203. கென்றாள் இவள்பண் டிழந்தறி யாக்குறை
சென்றாள் மதித்தொன்றும் செய்கலாள்—முன்றில்

204. கடைகடந்தாள் சூழ்போம் கடல்ஆய வெள்ளத்
திடைகடந்தாள் தானே எதிர்ந்தாள்—அடையப்

205. புரந்த புவனசத கோடியும் ஓடிப்
பரந்த திகிரிப் பகலோன்—நிரம்பும்

---

200. பேர் இயம் - முரசு முதலிய பெரிய இசைக் கருவிகள். ஓரை - அரசன் வரும் முகூர்த்தம். எதிர்ந்தது - வந்தது.

201. இழக்கப்படுமுன் - வளை முதலியவை இழக்கப்படுவதற்கு முன்னே. நிரை வளையை - வரிசையாக அணிந்த கை வளைகளை.

202. துன்ன நெருக்குமின்-நழுவாமல் செறியும்படி நெருக்குங்கள். வீக்கி - இறுக்கி. இன்னம் - இப்போது இறுக்கினதற்கு மேலும். மின்னனையாட்கு - மங்கைக்கு.

201—2, மின்னனையாட்கு வளையை நெருக்குமின், துகிலுடுமின், கச்சு இறுக்குமின்.

ஒருத்தி (199) என்றாள் (203),

203. இவள் - மங்கை. குறை - குறையினால். மதித்து — தோழி கூறியவற்றை உளங்கொண்டு. ஒன்றும் செய்கலாள்-அவற்றில் ஒன்றையும் செய்யவில்லை. முன்றில் - முற்றம்.

204. கடை - வாயில். கடல் ஆய வெள்ளம் - கடலைப் போன்ற தோழியர் கூட்டம். தானே - தான் ஒருத்தியே. அடைய - முற்றும்.

205, திகிரிப் பகலோன்-ஆக்ஞாசக்கரமாகிய சூரியனை உடையவன்; பகலோன் — சூரியன்.

206. அமுத நிலவெறித் தாழிஓ ரேழும்
குமுதம் அலர்த்தும் குடையோன்—கமைதராக்

207. கந்தானை யும்தானும் மேருக் கதிர்கடுப்ப
வந்தானை வந்து வணங்கினாள்—நந்தா

208. தழகு வழிவெள்ளம் அங்கட் குடங்கை
ஒழுக முகந்துமுகந் துண்டாள்—மழகளிற்றை

209. நிற்றி எனத்தொழுதாள் நித்தில வில்லிக்கு
வெற்றி விளையும் விளைவறிந்தாள்—உற்றொருத்தி

210. சொற்ற படியே தொடியீடும் ஆடையும்
பொற்ற பொலன்கச்சும் போக்கினாள்—கொற்ற

211. முரசும் அனிகமும் முத்தக் குடையும்
அரசும் உடன்நடந்த அப்பால்—பரிசனத்தார்

---

206. குடை சந்திரனைப் போல இருத்தலின் சந்திரனால் விளையும் செயல்கள் விளைந்தன. குமுதம் அலர்த்தும் - குமுத மலர்களை மலரச் செய்யும்: சந்திரனுக்குக் குமுத சகாயன் என்பது ஒரு பெயர். கமை தரா - பொறுமையைப் பெறாத.

207. கந்து ஆனை - தறியிற் கட்டும் யானை. யானைக்கு மேருவும், சோழனுக்குச் சூரியனும் உவமை. கதிர் - சூரியன். வந்தானை - வந்த சோழ மன்னனை.

208. அழகு வெள்ளத்தை அழகிய கண்ணாகிய உள்ளங்கையில் வழிந்து ஒழுகும்படியாக முகந்து.

209. நிற்றி-நிற்பாயாக. நித்திலவில்லி-முத்தையுடைய கரும்பை வில்லாக உடைய காமன், காமன் அம்பு எய்து மங்கைக்கு மயல் மூட்டுவானாதலின் அவனுக்கு வெற்றி விளையும் என்றார். ஒருத்தி-முன்பு வந்து சொன்ன தோழி.

210. தொடியீடும் - வளைகளை இட்ட அமைப்பு. பொற்ற - பொலிவு பெற்ற.

211. அனிகம் - படை. அரசு - சோழன். பரிசனத்தார்ன் - சுற்றத்தார்.

212. கண்டு தரியாக் கருத்தார் திருத்துழாய்
மண்டும் மரகத மால்வரையே—பண்டு

213. புடவிசூழ் பாதம்முதல் பூந்தா மரையின்
அடவிசூழ் மேகா டவியே—முடிய

214. அதிரும் வலம்புரித் திங்களும் ஆழிக்
கதிரும் இலங்கும் கடலே—எதிரும்

215. அணிஏறு கட்டிய நின்கைக் கமலே
மணிஏறு கட்ட வலிதோ—பணையின்

216. குழல்விட மூடப் பயின்றாய் குழல்வாய்த்
தழல்விடம் மூடத் தகாதோ—பழையநாள்

212—26. சுற்றத்தாராகிய மகளிர் கூற்று.

212. திருமாலாகச் சொன்னபடி.

213. புடவி சூழ் - பூமியைச் சுற்றியளந்த. பாதம் முதல் பூந் தாமரையின் அடவி - அடி, கை, வாய், முகம், கண் என்னும் தாமரைகள் அடர்ந்த காடு. மேகாடவி - மேகக் கூட்டம். திருமாலின் நிறம் மேகம் போன்றது.

214. சங்கமாகிய சந்திரனும் சக்கரமாகிய சூரியனும்.

215. கண்ணனாகக் கொண்டு கூறியது. அணி ஏறு கட்டிய - நப்பின்னைக்காக அழகையுடைய காளையைத் தழுவிக் கட்டிய. அமலே மணி ஏறு - ஒலியையுடைய மணியை அணிந்த காளை. ஏற்றின் மணி காமமுடையாருக்குத் துன்பத்தைத் தருவதாதலின் அதைக் கட்ட வேண்டுமென்று விரும்பினர். ''அறிவர்கொல் வாழி தோழி.... நல்லே றியங்குதோ றியம்பும், பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே'' (குறுந். 190).

215—6. இதுவும் கண்ணனாகக் கொண்டு சொன்னது. பணையின் குழல் விட மூடப் பயின்றாய் - மூங்கிலால் செய்த புல்லாங்குழலின் துளைகளை விடவும் அடைக்கவும் பழகினாய். குழல்வாய்த் தழல்விடம்- ஆயர் ஊதும் புல்லாங் குழலிலே பிறக்கும், தழலும் விடமும் போன்ற ஒலியை. குழலோசை காமமுற்றாருக்குத் துன்பத்தை உண்டாக்கும்; ''குழற்றுளையில், நஞ்சுங் குமிழியெழும்'' (இராசராச. 118.)

217. ஆய்மணிக் கோவை அளித்த திவள்அணிந்த
காய்மணிக் கோவையும் காவாதோ—ஆய்மனையில்

218. விண்டுண்ட பாலுடன் விற்கரும்பை யும்சாறு
கொண்டுண்டக் கால்மதுரம் கூராதோ—
ஒண்தொடிக்காய்

219. விண்ணிற் பொழில்பெயர்த்த வீரம் குயில்பயிலும்
மண்ணிற் பொழில்பெயர்க்க மாட்டாதோ—
அண்ணலே

220. முன்னர்ப் பெருதஉன் மோகா னலம்பொறுத்தாள்
இன்னல் பொருதெமக் கென்றேத்திப்—பின்னரும்

221. சேப்பின் உகாந்த திவாகர வாதைக்குக்
காப்புநவ நீதக் கவிகையோ—சேப்பகலா

---

217. ஆய் மணிக்கோவை அளித்தது - அழகிய மணிகளை அணிந்த பசுக்களைக் காப்பாற்றிய இயல்பு. காய் மணிக்கோவை - சுடுகின்ற முத்து மாலையையும். காம மிகுதியால் முத்து மாலை பொரிந்துவிழும். ஆய்மனையில் - ஆயர்களின் வீட்டில்.

218. விண்டு உண்ட பால் - சட்டியை உடைத்து உண்ட பால். விற்கரும்பு - காமனுடைய வில்லாகிய கரும்பு. மதுரம் கூராதோ - இனிமை மிக்கிராதோ. ஒண்டொடிக்காய் - சத்தியபாமைக்காக.

219. விண்ணிற் பொழில் - பாரிஜாதச் சோலை. குயில் ஓசை காமுற்றார்க்குத் துன்பம் தருவது. ஆதலின் அது பயிலும் சோலையைப் பெயர்க்கவேண்டும் என்று விரும்புகின்றனர்.

220. முன்னர்ப் பெருத-முன்பு அனுபவித்தறியாத. மோகானலம்-மோகமாகிய தீயை. எமக்கு இன்னல் பொருது - இவள் படும் துன்பம் எமக்குப் பொறுக்க முடியாது.

221. இது முதல் 225 வரையிலும் உள்ள சுண்ணிகள் சுற்றத்தாராகிய மகளிர் தம்முடைய பாதுகாப்பால் ஒரு பயனும் விளையாது என்பதை உருவக வகையால் புலப்படுத்தித் தம்முட் கூறிக் கொள்வன.

சேப்பின் - செந்நிறத்தையுடைய. உகாந்த திவாகர வாதைக்கு - ஊழிக் காலத்துச் சூரியனுடைய வெம்மையால் உண்டாகும் துன்பத்துக்கு, நவநீதக்கவிகை காப்போ; நவநீதம் — வெண்ணெய். சேப்பு - சிவப்பு.

222. மாதுப்பு வாயீர் மழைவழங்கத் தாங்குவது
மூதுப்பு வெற்பு முழைகொலோ—மேதக்க

223. வானிற் படும்ஊழி ஆழி மறிப்பது
தேனிற் படுவண்டற் சேதுவோ—கான்ஒத்த

224. செந்நெற் கவரத் திசையானை வந்தெய்தின்
கன்னற் புறவேலி காவலோ—மன்னன்

225. கொடுத்த மயற்குக் குழீஇஎளியம் எல்லாம்
தடுத்த புரவுத் தடையோ—தொடுத்த

226. விரைத்தார் இறப்பினும் வேண்டுமென் றீண்டி
உரைத்தார் அயல்மற் றொருத்தி—கரத்தினல்

---

222. துப்பு - பவளம். முது உப்பு வெற்பு முழை - பழைய உப்பு மலையினுள்ளே உள்ள குகை. மழையால் உப்புக் கரைந்துவிடும்.

223. பிரளயகாலத்தில் பொங்கியெழும் கடலை மணல் விளையாட்டில் மகளிர் அமைக்கும் அணையோ தடுப்பது? வானிற்படும் ஊழி ஆழி - மழையினல் உண்டாகிப் பெருகும் பிரளய காலக் கடல். தேனின் படு - தேனின் இனிமை போல உண்டாகும்; இது விளையாட்டின் இனிமையைச் சொன்னபடி. வண்டல் - மகளிர் விளையாட்டிடம். சேது - அணை. கான் ஒத்த - காட்டைப் போல வளர்ந்த.

224. திசை யானை - அட்டதிக்கயங்கள். கன்னல் புறவேலி - கரும்பால் புறத்தே அமைத்த வேலி. கரும்பை யானை உண்டு பின் உள்ளே உள்ள நெல்லையும் உண்டுவிடும்,

225. குழீஇ - கூடி. புரவு - பாதுகாப்பு.

226. விரைத்தார் - மணமுடைய மாலை. இறப்பினும் - முயற்சியிலே இறந்தாலும்; மன்னன் இவ்விடத்தைக் கடந்து சென்றாலும் என்றும் பொருள் கொள்ளலாம். ஈண்டி - கூடி.

பரிசனத்தார் (211), தரியாக் கருத்தாராகி (212), என்று ஏத்திப் பின்னரும் (220), என்று ஈண்டி உரைத்தார் (226) என்று கூட்டி முடிக்க.

மடந்தை

227. மேரு நடுப்பொற் கடவுளர் வீற்றிருக்கும்
ஊரின் நடுப்பொன் உருக்கியும்—பார்உரகன்

228. பாணிக்கத் தாங்கும் பணம்ஆ யிரம்திரண்ட
மாணிக்கச் சோதியை வாரியும்—பாணித்

229. தடத்து மதித்த சலதி அமுதக்
குடத்து நடுஎடுத்துக் கொண்டும்—மடுத்த

230. மதுவாய தேனுய வாரி இரண்டில்
பொதுவாய் நடுமுகந்து போந்தும்—மதவேள்

231. குழைத்தள்ளி அள்ளிக் கொடுப்பக் கமலன்
இழைத்துள்ளி உள்ளிஉறுப் பெல்லாம்—கொழித்து

---

227. மேருவின் நடுவில் தேவர்கள் தங்கியிருக்கும் ஊரின் நடுவில் உள்ள பொன்னை உருக்கியும். தேவர்கள் வாழும் இடமாதலின் மேருவுக்குச் சுராலயம் என்ற பெயர் உண்டாயிற்று.

227—8. பார் உரகம் பாணிக்கத் தாங்கும் - பூமியை ஆதிசேடன் நிதானங் கொள்ளும்படி தாங்குகின்ற. பணம்-முடி. ஆயிரம் படங்களில் உள்ள மாணிக்கங்களின் சோதியை.

228—9. பாணித்தடத்து - கையாகிய விசாலமான உறுப்பினால்: தடம் - இடம்; இங்கே உறுப்பு. மதித்த சலதி - கடைந்த பாற்கடலிலே தோன்றிய.

230. கள்ளாகிய கடல், தேனாகிய கடல் ஆகிய இரண்டுக்கும் நடுவிடத்தில் முகந்துகொண்டு.

231. கமலன் — பிரமன். இழைத்து - கோலம் செய்து,

227—32. மதவேள், பொன்னை உருக்கியும், சோதியை வாரியும், அமுதக் குடத்தின் நடுவில் உள்ளதை எடுத்துக்கொண்டும், வாரியிரண்டில் நடு முகந்துகொண்டும் அள்ளி அள்ளிக் கொடுக்கப் பிரமன் மடந்தையின் வடிவத்தை வனைந்தான்.

232. மிகுத்த எழுபருவத் தின்நடு மின்ன
வகுத்த வடிவ மடந்தை—தொகுத்த

233. படைத்தலை மாரன் பணிகேட்பச் செம்பொற்
கடைத்தலை போந்திருந்த காலைப்—புடைத்தலை

234. ஆயச் சிலதியர் ஐம்பத்தோ ராறுய
தேயப் பரராச சேகரன்—சாயகத்தை

235. வெங்கரன் மோகரம் நீங்க விடும்கரன்
சங்கரன் வீர தனுகரன்—இங்கு

236. வருங்காறும் என்செய்தும் என்றிறைஞ்ச மன்றல்
இருங்காவுள் வல்விரைந் தேகி—மருங்கே

---

232. ஏழு பருவங்களின் நடுவே விளங்கும்படி. பேதை, பெதும்பை, மங்கை என்று மூன்று பருவத்தினர் முன் இருக்க, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற மூவர் பின் இருக்க இடையிலே இருப்பவள் மடந்தை.

233. படைத்தலை மாரன் - படைகளாகிய மகளிருக்குத் தலைமை தாங்குகின்ற மன்மதன். மன்மதன் மடந்தையின் ஏவலைக் கேட்டான். செம்பொற் கடைத்தலை - செம்பொன்னுலான வாயிலில். புடைத்தலை- இருபக்கமாகிய இடங்களிலும் உள்ள.

234. ஆயச்சிலதியர்-கூட்டமாயிருக்கிற ஏவற் பெண்கள் அவர்கள் மடந்தையைக் கேட்கிறுர்கள். பரராச சேகரன் - வேற்றரசர்களின் தலைவன். சாயகத்தை - அம்பை.

235. வெவ்விய கரனென்னும் அரக்கனுடைய பேராரவாரம் நீங்கும்படி விடும் கையை உடையவன். மோகரம் - பேராரவாரம். சாயகத்தை (234) விடும் கரன். இராமனுக வைத்துச் சொன்னபடி. வீர தன ஆகரன் - வீரமென்னும் செல்வத்துக்கு இருப்பிடமானவன்.

சிலதியர் (234) என்று இறைஞ்ச (236).

236. மன்றல் இருங்காவுள் - மணம் பரவிய பெரிய சோலையில். வல்விரைந்து - மிக விரைந்து.

237. வனைந்தநவ ரத்ன வகைக்கொரோ ரூசல்
புனைந்தநவம் நோக்கிப் புகழ்ந்தாள்—நினைந்து

238. செழுநீலச் சோதி திசைஅனைத்தும் கோத்த
கொழுநீலத் தூசல்கைக் கொண்டாள்—தழுவி

239. நிருபன் நிருபாபி டேகன்நிலம் ஏழுக்
கொருவன் உருஎன் றுவந்தாள்—பெரிதேறி

240. மேகோ தயத்தொரு மின்ஒத்தாள் மால்ஆகப்
போகோ தயத்தொரு பொன்ஒத்தாள்—மாகம்

241. குதிக்கும் உததிக் குரைதிரை நாப்பண்
உதிக்கும் இளஞாயி றொத்தாள்—துதிக்கடங்கா

242. நேரியும் காவிரியும் காவிரி நீர்நாடும்
ஆரியன் கோரமும் ஆரமும்—பேரியம்

---

237. நவரத்தின வகைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஊச லாக அமைத்திருந்தார்கள். நவம் நோக்கி - புதுமையைப் பார்த்து.

238. கோத்த - செறிந்த. நீலமணியால் ஆன ஊசலை அடைந் தாள்.

239. நிருப அபிடேகன் - அரசர்களின் முடியாக இருப்பவன். நீலமணி ஊசலைச் சோழமன்னனாக எண்ணி மகிழ்ந்தாள்.

240. நீல ஊசலுக்கு மேகமும் மடந்தைக்கு மின்னும் உவமைகள். மேக உதயத்து - தோற்றம் செய்த மேகத்தினிடையே. மால் ஆகப் போக உதயத்து - திருமாலினுடைய மார்பாகிய இன்பத்தைத் தரும் உதயகிரியில். பொன் - திருமகள். ஊசலுக்குத் திருமாலும் மடந் தைக்குத் திருமகளும் உவமைகள். மாகம் - வானத்தில்,

241. உததி குரை திரை நாப்பண் - கடலில் ஒலிக்கின்ற அலை களுக்கு நடுவே. மாகம் உதிக்கும் எனக் கூட்டுக.

242—3. சோழனுடைய தசாங்கங்கள். நேரி - சோழனுடைய மலை. காவிரி நீர் நாடு - சோலைகள் பரந்துள்ள சோழ நாடு. ஆரியன்- மேலானவன். கோரம் - சோழனுடைய குதிரை. ஆரம் - ஆத்தி மாலை; ஆர் அம்முச்சாரியை பெற்றது. பேரியம் - முரசு. வெற்றி, கொடை, மணம் ஆகியவற்றுக்கு அடிக்கும் முரசுகள் மூன்று. கொடுவாய் - புலிக்கொடி. மூரி - வலிமையையுடைய. அயிராபதம் - பட்டத்து யானை. புகார் - காவிரிப்பூம்பட்டினம். தேன் துளிக்க - தேனின் சுவை உண்டாகும்படி.

243. மூன்றும் கொடுவாயும் மூரிஅயி ராபதமும்
ஆன்ற புகாரும்பே ராணையும்—தேன்துளிக்கப்

244. பாடினுள் பாடற் குலகுருகப் பல்காலும்
ஆடினுள் ஆடும் அமயத்தே—கோடியர்

245. பாணர் விறலியர் பாங்கியர் கைகூப்பி
யாணர்த் திருவிரும்பும் இன்பமே—வாள்நுதலே

246. கூந்தல் கலைந்து பகல்இரவு கோக்குமேல்
வேந்தன் மரபினுக்கு வென்றியோ—காந்தி

247. முழுதும் மறைய முகஏர் மறைத்து
வழுதி குலம்சிறத்தல் மாண்போ—முழுதாள்

248. செயற்கை வளவன் திருவுள்ளம் கொள்ளா
இயற்கை நமக்கோர் இயல்போ—கயற்கண்ணுய்

மலை, ஆறு, நாடு, குதிரை, மாலை, முரசு, கொடி, யானை, நகர், ஆணை என்ற அங்கங்கள் பத்தையும் பாடினுள் (244)

244, ஊசலில் ஆடினுள். கோடியர் - கூத்தர்.

245. பாணர் - இசைபாடும் கலைஞர். விறலியர் - இசைபாடும் மகளிர். யாணர் - செல்வத்தை உடைய. திரு - திருமகள்.

246. ஆடுவதனுல் உன் கூந்தல் கலைந்து எங்கும் பரவி அதன் கருமையால் இந்தப் பகலில் இரவு வந்து சேருமானுல் அது சோழர் குலத்துக்கு வெற்றியாகுமா? இரவு சந்திரனுக்குரியதாதலின் அவனைத் தம் குல முதல்வனுகப் பெற்ற பாண்டியருக்கு ஆதிக்கம் உண்டாகுமாதலின் இவ்வாறு கூறினுர், காந்தி - ஒளி.

246—7. ஒளி கூந்தலினுல் உண்டாகிய இருளினுல் மறைய, முகத்தினது அழகை மறைத்து அதனுல் பாண்டிய குலம் சிறப்படைதல் பெருமையாகுமா? முகம் தாமரை போன்றது. அது வாடினுல் பாண்டிய குல முதல்வனுகிய சந்திரனுல் வந்ததென்று அவனுக்குப் பெருமை உண்டாகிவிடும். முழுதும் ஆள்கின்ற.

248. செயற்கை-செய்கை. பாண்டியன் மரபுச்குப் பெருமையை உண்டாக்குதல் சோழன் திருவுள்ளத்துக்கு உவப்பு ஆகாது. அவ்வாறு அவன் உள்ளம் ஏற்றுக்கொள்ளாத இயற்கையை உண்டாக்குதல் நமக்கு உரியதாகுமா? இயல்பு - உரிய தன்மை.

249. போதும் இனிப்போதும் என்றிரப்பப் போதகலா
மாது மணக்கும் மணவாளன்—சேதுவுக்கும்

250. தஞ்சைக்கும் கோழிக்கும் தாமப் புகாருக்கும்
உஞ்சைக்கும் ஏனை உதகைக்கும்—வஞ்சிக்கும்

251. கொற்கைக்கும் கூடற்கும் கோசலைக்கும் காஞ்சிக்கும்
வில்கைக்கு நில்லா மிதிலைக்கும்—நிற்கும்

252. அரசன் அரசர் குலாந்தகன் ஆரப்
பிரசன் அபயர் பெருமான்—புரிசை

253. அனுராச மாபுரிஓர் ஆனைகொண்டு கொண்ட
மனுராச ராசன் வரலும்—கனிமொழியும்

246—9. இருள் உண்டாவதும் தாமரை வாடுவதும் பாண்டிய குல முதல்வனாகிய சந்திரனால் விளைவன. அப்படி உண்டாகும்படி செய்யலாமா என்று வினவினர்.

249. போது அகலா மாது - திருமகள். சேது - தெற்கேயுள்ள தனுக்கோடியுள்ள இடம்.

250. கோழி - உறையூர். தாமம் - ஒளியையுடைய. உஞ்சை - உஜ்ஜயினி; இது அவந்தி நாட்டில் உள்ளது. உதகை - குடகு நாட்டில் கோட்டையோடு கூடிய நகரம். வஞ்சி - சேர நாட்டின் தலைநகர்.

251. கூடல் - மதுரை. கோசலை - கோசல நாடு. வில் கைக்கு நில்லா மிதிலை — வில்லானது கையில் நில்லாமல் ஒடிந்த இடமாகிய மிதிலை; இராமன் செயலை நினைந்து சொன்னது.

249—52. பிற அரசர்களை வென்று அவர்களுடைய ஊர்களிலும் தன் ஆணை செல்ல நின்றவனாதலின் சேது முதலியவற்றிற்கு அரசன் என்றார். தஞ்சைக்கும் கோழிக்கும் புகாருக்கும் அரசன் என்பவை மட்டும் அவனுக்கு இயல்பாகவே உள்ள உரிமையைக் குறித்தது.

252. அரசர் குல அந்தகன் - பகையரசர் குலத்துக்கு யமனைப் போன்றவன். ஆரப்பிரசன் - ஆத்திமாலையிலிருந்து ஒழுகும் தேனை உடையவன்; பிரச ஆரன் என்று மாற்றிக் கூட்டிப் பொருள் செய்வதும் பொருந்தும். புரிசை - மதில்களையுடைய.

253. அனுராசமாபுரி - இலங்கையில் உள்ள அனுராதபுரம் என்னும் நகரை. ஓர் ஆனையைக் கொண்டு சென்று கைப்பற்றின. கனிமொழி - மடந்தை.

254. துண்என் றிழிந்து துணைவியரும் தானும்போய்த்
தண்என்ற செங்கோற் சயதரனை—அண்ணலைக்

255. கண்டாள் பணிந்தாள் கழிகாமம் உள்வழியக்
கொண்டாள் மடம்நாண் கொடுத்தொழிந்தாள்—
ஒண்தொடியும்

256. பேரோதை மேகலையும் பெண்ணமுதை விட்டகல
வீரோ தயன்வீதி விட்டகன்றான்—காரிகையை

257. ஏந்திப் பலரும் இசைத்தேன் பசைத்தேனை
மாந்திப் பயிலும் மலர்க்காவில்—போந்தளவில்

258. கான்காணி அன்றிக் கனலும் மதிப்புகவும்
மான்காள் வினைநுமக்கு வாய்த்ததே—தேன்காள்

---

254. துண்ணென்று - விரைவாக.

255. கழிகாமம் உள் வழிய - மிக்க காமம் உள்ளத்தே பொங்கி வழிய. காமம் கொண்டாள். மடத்தையும் நாணத்தையும். ஒண் தொடியும் - ஒளி விளங்கும் கைவளைகளும்.

256. ஓதை - ஓசை. வீர உதயன் — வீரத்தோடு பிறந்தவன்; சோழமன்னன். காரிகையை - மடந்தையை.

257. இசையைப் பாடும் வண்டுகள் பசைத்தன்மையையுடைய தேனை உண்டு உலாவுகின்ற மலரையுடைய சோலையில். போந்தளவில்- போந்த அளவில்; தொகுத்தல் விகாரம்.

258. இது முதல் 264 வரையில் மடந்தையின் கூற்று. கான் காணி அன்றி - காடுகளாகிய உரிய இடம் அல்லாமல். கனலும் மதி - நிலாவினால் தீ எழுப்பும் சந்திரன். மடந்தை நிலவினால் துன்புறுதலின் இப்படிக் கூறினாள். பின் வருவனவும் இத்தகையனவே. மதிப்புகவும்- சந்திரனிலே புகுந்து வாழவும்; சந்திரனில் உள்ள மறுவை மான் என்று சொல்லுதல் வழக்கு. வினை - விதி. உரிமையாக வாழும் காடு இருக்கவும் பொல்லாத சந்திரனில் வாழும் தலைவிதி உங்களுக்கு வாய்த்ததே என்று இரங்கினாள். தேன்காள் - வண்டுகளே.

259. கணிவிட் டெனஉமக்குக் காமன் பகழி
அணிவிட் டிடவும் அடாதோ—பிணிமுகங்காள்

260. சென்று தழல்வழங்கும் தென்றல் மலையம்உமக்
கென்றும் அடைய எழுதிற்றே—அன்றில்காள்

261. வேலை அடுத்தலது வெம்பாத கப்பனஞ் [காள்
சோலை அயல்உமக்குத் தோன்றுதோ—பால்அனங்

262. பாவி மலர்க்கொத்தும் முத்தும் படுமடுவின்
வாவி ஒழிந்துமக்கு வாயாதோ—மேவெமது

---

259. கணி விட்டென - வேங்கையை அணுகாமல் விட்டிருப்பது போல; வேங்கை மலரில் வண்டு மொய்ப்பதில்லை. வண்டுகள் காமன் வில்லில் அம்புவைத்து எய்வதற்குரிய நாணாக இருப்பவை. அதை நினைந்து சொல்கிறாள். பகழி அணி - அம்பாகிய வரிசை. விட்டிடவும்-விட்டு நீங்கவும். அடாதோ-தகாதோ. பிணிமுகங்காள்—மயில்களே.

260. தென்றல் காமுற்றவர்களுக்கு இன்னல் தருதலின் அதைத் தழல் வழங்கும் தென்றல் என்றாள். மலையம் - பொதியில் மலை. எழுதிற்றே - தலையில் எழுதியிருக்கிறதே.

261. வேலை அடுத்தலது - கடலை அடுத்து அல்லாமல். கடல் காமுற்றாருக்குத் துன்பம் தருவது. அயல் - வேறு பனஞ்சோலை. பன மரத்தில் அன்றில் வாழும். பால் அனங்காள் - பாலைப் போல வெண்மையான அன்னங்களே; பாலை உண்ணும் அன்னங்களே என்றும் கொள்ளலாம். பாலும் நீரும் கலந்து வைத்தால் நீரை விட்டுப் பாலை அருந்துவதாதலின் இவ்வாறு சொன்னதாகக் கொள்க.

262. பாவி மலர்க்கொத்தும் - பாவியாகிய மன்மதனுக்கு அம்பாக உதவும் தாமரை, நீலோற்பலம் என்னும் மலர்க் கொத்துக்களை யும். மலர்க் கொத்துக்களையே பாவியென்று சொன்னதாகவும் கொள்ள லாம்; அஃறிணையை இவ்வாறு சொல்லுதல், ''அழுக்கா றெனஒரு பாவி'', ''இன்மை யெனவொரு பாவி'' என்ற திருக்குறள் வழக்கால் அறியலாகும். படும் - உண்டாகும். மடுவின் வாவி - மடுவாகிய வாவி; இன் : வேண்டாவழிச் சாரியை. மடு — ஆழமுமாம்.

மலர்களும் முத்தும் காமுற்றார்க்கு வெம்மையைத் தருவன. வாயாதோ - வேறு நீர்நிலை கிடைக்காதோ.

263. நன்றிப் புறவங்காள் நாகு மணிப்புறவம்
அன்றிப் புறவம்உமக் காகாதோ—ஒன்றுமக்குக்

264. கொள்ளை அனங்கன் குடியிருக்கும் தேர்இழுக்கக்
கிள்ளைகாள் பாவம் கிடைத்ததென்று—பள்ளியினுள்

265. போயினுள் தன்துணையி ேைடும் புலந்தூட
லாயினுள் எவ்வாற்றின் ஆற்றுவீர்—நீயிரும்

266. துஞ்சுவிரோ துய்ப்பனவும் துய்ப்பீரோ தூற்றுவார்க்
கெஞ்சுவிரோ இத்தனிமைக் கென்செய்வீர்—
வஞ்சித்துக்

267. கூருமை கூறுமின் கோதையீர் கோதையை
ஏருமை பெண்மைக் கிழிவென்ருள்—வேருெருத்தி

---

263. புறவங்காள் - புருக்களே. நாகு மணிப்புறவம் - கன்றை யுடைய பசுவின் மணி ஓசை கேட்கும் முல்லை நிலம். பசுவின் மணி யோசையினுல் காமுற்ருேர் துன்புறுவர். புறவம் - வேறு காடு.

264. கொள்ளை அனங்கன் — காமுற்ருர் அறிவைக் கொள்ளை கொள்ளும் காமன். மன்மதன் தேராகிய தென்றலை இழுக்கும் குதிரை, கிளி. தேர் இழுத்தலைப் பாவம் என்ருள். என்று - என்று கூறிவிட்டு. பள்ளியுள் - படுக்கையறைக்குள்.

265. தன் துணையிேைடும் - தன்னுடைய தோழிமாரோடும். துணை : தொகுதி ஒருமை. புலந்து - வெறுத்து.

இது முதல் 267 வரையில் மடந்தை தோழிமாரை நோக்கிக் கூறும் கூற்று.

எவ்வாற்றின் ஆற்றுவீர் - எந்த வகையில் என் விரகதாபத்தை ஆறச் செய்வீர்கள்.

266. துஞ்சுவிரோ - உறங்குவீர்களோ; நான் உறங்காமல் இருக்க நீங்கள் உறங்குவீர்களோ என்று ஊடிக் கேட்டாள். துய்ப்பனவும் - உண்ணும் உணவு வகைகளையும். துய்ப்பீரோ - நான் எதையும் உண்ணுமல் இருக்க நீங்கள் உண்ணுவீர்களோ. தூற்றுவார்க்கு எஞ்சுவிரோ- என் நிலையைக் கண்டு பழி கூறுவாரோடு சேராமல் நிற்பீர்களோ; எஞ்சுதல் - சேராமல் தனித்து நிற்றல். இத்தனிமைக்கு - யான் அடைந்த இந்தத் தனிமைத் துன்பத்தைப் போக்குவதற்கு.

266—7. வஞ்சித்துக் கூருமை கூறுமின் - எனக்கு வஞ்சகத்தால் உண்மையை மறைத்துச் சொல்லாமல் உள்ளதைச் சொல்லுங்கள். கோதையை ஏருமை - சோழனுடைய மாலையைப் பெருமல் இருப்பது. பெண்மைக்கு - என்னுடைய பெண் தன்மைக்கு.

அரிவை

268. காமக் கரும்பில் கனிந்த கனிஅமிர்தம்
வாமச் சிகரியில் வைத்ததேன்—நேமி

269. பரவிந் திரைதோட் பருமுத்தம் கோயில்
அரவிந்த வேரி அரிவை—இரவுபகல்

270. சேடியர் தோழியர் சென்னியர் பன்னியர்
கோடியர் பாடற் கொளைஎல்லாம்—சூடிய

271. ஆரன் அனகன் அனுபமன் ஐங்கதிக்
கோரன் மனுகுலக் கோன்என்றும்—மாரித்

272. தனகர சங்கம சங்கர சோழ
தினகரன் என்றும் தெளிப்ப—வினவுதொறும்

---

268. வாமச்சிகரியில் - அழகாகிய மலையில். நேமி - திருமால்.

269. பரவும் முத்தம். இந்திரை - திருமகள். கோயில் அரவிந்த வேரி - திருமகளின் கோயிலாகிய தாமரையில் உள்ள தேன்.

270, சேடியர் - ஏவல் செய்யும் மகளிர். தோழியர் - பாங்கிமார். சேடியர் தோழியர்: எழுவாய். சென்னியர் - பாணர். பன்னியர் - அவர் மனைவியராகிய விறலியர். கோடியர் - கூத்தர். பாடல் கொளை - பாடலின் மிகுதி; கொளை - கொள்ளை. கொளை - தாளத்தைக் கொள்ளுதல் என்று கொண்டு தாளத்தோடு கூடிய பாடல்களையெல்லாம் என்று பொருள் கொள்வதும் ஆம்,

270-71. பாடல்களை ஆரமாகச் சூடியவன். அனகன் — பாவம் இல்லாதவன். அனுபமன் - உவமையில்லாதவன். ஐங்கதிக் கோரன்- மல்லகதி, மயூரகதி, வானரகதி, சசகதி, சரகதி என்னும் ஐந்து கதிகளையுடைய கோரம் என்னும் குதிரையை உடையவன்; கதி-ஓட்டத்தின் வகை. விக்கிதம், வற்கிதம், உபகண்டம், ஜவம், மாஜவம் என்பவற்றையும் பஞ்சகதி என்பர் (பு. வெ. 355, உரை.)

271—2. மாரித் தனகரம் - மழை போலச் செல்வத்தை ஈயும் கரத்தையுடைய. சங்கம சங்கர சோழன் - சங்கமன் மகனாகிய சங்கர சோழன். தெளிப்ப - தெளியும்படி சொல்ல.

273. கம்மியர் பூட்டும் கயில்விண்டு விண்டுதன்
விம்மிய மெய்வீழ வீழ்தலும்—செம்மணிய

274. கொத்தா பரணம் புகழ்ந்த குழாம்கவரப் [தாயம்
புத்தா பரணப் பொறைபொறுப்பாள்—மொய்த்

275. பக்கம் எறிக்கும் பளிக்கறை வேதிகையில்
ஒக்க உறைய உறைவாளைப்—புக்கொரு

276. சேய விறலி திருவாழி வாழிஎனத்
தூய வளைக்கைத் துணைகூப்பி—வாயில்

277. செறிமணிப் பாவாய் திமிரபரம் தீர
எறிமணிப் பாம்புன் இடையோ—விறலி

இரவும் பகலும் (269) சேடியரும் தோழியரும் (270), என்றும் (271), என்றும் தெளிப்ப (272) என்று கூட்டுக.

273. கம்மியர்-பொற்கொல்லர். கயில்-கோக்குவாய். விண்டு - அவிழ்ந்து. விம்மிய மெய் வீழ - பூரித்த உடம்பில் வீழ. சோழன் பெருமையைக் கேட்டதனுல் உவகை மிக்கு உடம்பு பூரித்தது. அதனுல் அணிகலன்கள் பூட்டு அவிழ்ந்தன. வீழ்தலும் - வீழ்ந்தவுடன்.

274, புகழ்ந்த குழாம்—அரிவையைப் புகழ்ந்த சேடியர் தோழியர் கூட்டம். புத்தாபரணப் பொறை-புதிய அணிகலன்களாகிய பாரத்தை. ஆயம் மொய்த்து; ஆயம் — மகளிர் கூட்டம்.

275. எறிக்கும் - ஒளி வீசும். பளிக்கு அறை வேதிகையில்-பளிங்குப் பாறையால் அமைத்த திண்ணையில். ஆயம் (274) ஒக்க உறைய.

276. சேய - செம்மை நிறத்தை உடைய. திரு — திருமகளைப் போன்றவளே; அரிவையை விளித்தது.

இது முதல் 286-ஆம் கண்ணி வரையில் உள்ளவை விறலியும் அரிவையும் மாறிமாறிக் கூறும் கூற்று.

276—7. வாயில் செறி மணிப் பாவாய் - வாயிலே செறிந்த முத்துப்போன்ற பல்லையுடைய பெண்ணே. திமிர பரம் தீர எறி மணி - இருளின் பாரம் நீங்கும்படி ஒளியை வீசும் மாணிக்கத்தை உடைய. இடையோ : இது வறலியின் வினு, விறலி : விளி; அரிவை கூற்று.

278. தொகுமணி வீதிஎம் கோவைத் தொழினும்
மிகுமணிக் கோவை விடாதோ—மகரம்

279. அதிர்ஆர் கலிமடுத்த ஆடலான் குன்றம்
முதிரா நினக்கு முலேயோ—அதுவாகின்

280. வீசிய தென்றல் திரிதரினும் வேவாதாய்ப்
பூசிய சாந்து பொருந்துமோ—பேசின்

281. பொலம்புரி காம்புநின் பொற்புளகத் தோளோ
வலம்புரி கண்ட வனப்போ—நிலம்புரந்து

282. வீரம் பிரியாப் புயம்புரிந்த வேட்கையினும்
ஆரம் பிரியா தடுக்குமோ—வாரி

---

278. எம் கோவை - சோழனை. மணிக்கோவை-மணிகள் கோத்த கோவையாகிய மேகலை. 'பாம்பானல் மாணிக்கத்தை விடாமல் இருக்கவேண்டுமே; என் இடை சோழனைக் கண்டால் மணிமேகலையை நழுவ விட்டுவிடுமே!' என்பது குறிப்பு. மகரம் - மகர மீன்.

279. ஆர்கலி மடுத்த ஆடலான் - கடலை உண்ட திருவிளையாட்டைச் செய்தவன்; அகத்தியன். பெரு முயற்சி செய்து உண்ணுமல் கையில் ஆசமன நீராக ஏந்தி உண்டமையால் விளையாட்டென்ருர். அவன் குன்றம், பொதியமலை.

280. பூசிய சாந்து வேவாதாய்ப் பொருந்துமோ? தென்றல் வீசினல் வெம்மை பெற்று மார்பிலே பூசிய சந்தனம் பொருக்காகி உதிர்ந்துவிடும் என்று குறிப்பித்தாள்.

281. பொலம் புரி காம்பு — பொன்னைப் போன்ற மூங்கில்; நிறத்தாற் பொன் போன்றது. பொற் புளகம் - பொலிவையும் மயிர்க் கூச்சையுமுடைய. வலம்புரி - சங்கின் அழகு. கண்ட வனப்போ - கழுத்தின் அழகோ.

282. புயம்-சோழனுடைய தோள்களை. புரிந்த வேட்கையினும்- விரும்பிய காதல் உள்ள போதும். ஆரம் - முத்து மாலை.

281—2. மூங்கிலும் வலம்புரியும் முத்துப் பிறக்கும் இடங்கள். அவற்றுக்கு முறையே தோளும் கழுத்தும் உவமை. அவ்விரண்டும் முத்தை இழக்காமல் இருப்பன. 'என் தோளும் கழுத்தும் சோழன் பாற் கொண்ட மயலால் முத்துமாலையை இழந்துவிடும்' என்பது குறிப்பு. வாரி - தண்ணீரில்.

283. படர்ந்த கமலம் படுகடல் ஏழும்
கடந்த பெருந்தடங் கண்ணே—கொடுங்களத்

284. தோடா அனிகத் தொருதனிச் சேவகனைக்
கூடா இரவும் குவியுமோ—வீடாச்

285. செழுமாலை என்பது சேண்பகர் கந்தக்
கொழுமாலை நீலக் குழலோ—வழுவா

286. முறைதுற வாதான் முயங்காத போதும்
பிறைதுற வாமல் பெறுமோ—அறைகென்

287. றிருவரும் இங்ஙன் எதிர்மலைந்த காலை
வெருவரு கண்இரட்ட மீண்டும்—திருவே

---

283. கமலம் கண்ணே. கடல் ஏழையும் தன் அகலத்தால் வென்ற. களம் - போர்க்களம்,

284. ஓடா அனிகத்து - புறங்காட்டி ஓடாத சேனையையுடைய. சேவகன் - வீரன்; இங்கே, சோழன். 'கமலம் இரவில் குவியும். என் கண் சோழனைச் சேராத இரவில் குவியாமல் விழித்திருக்கும்' என்பது குறிப்பு. வீடா - நீங்காத.

285. செழு மாலை - இருள் அடர்ந்த இரவு. சேண்பகர் கந்தக் கொழுமாலை நீலக் குழலோ - நெடுந்தூரத்திற் பரவும் மணத்தையுடைய கொழுவிய மாலையை அணிந்த கருமையான கூந்தலோ. வழுவா - பிறழாத.

286. முறை - நீதி நெறி. துறவாதான் - சோழன். முயங்காத போதும் - தழுவாத சமயத்திலும். பிறை — கூந்தலில் அணியும் அணி கலன். 'இரவு பிறையைக் கொண்டிருக்கும். என் கூந்தல் சோழனை முயங்காத துயரத்தால் கலைந்து பிறையைத் துறந்திருக்கும்' என்று குறிப்பால் மறுத்தாள். அறைக என்று.

277—86. இக் கண்ணிகளில் விறலி அரிவையின் உறுப்புக்களைச் சில பொருள்களாக உருவகித்துச் சொல்ல, சோழன்பால் கொண்ட மயலால் அந்த உருவகம் பொருந்தாமற் போகும் என்பதை அரிவை எதிர் மறுத்துக் கேட்கும் கேள்விகளால் புலப்படுத்தினாள்.

287. எதிர் மலைந்த காலை - எதிர் எதிரே சொற்போர் தொடுத்த பொழுதில். கண் இரட்ட - முரசின் பக்கம் மாறி மாறி ஒலிக்க. மீண்டும் - மறுபடியும். திருவே : அரிவையை விறலி விளித்த விளி; முன்னும் 'திருவாழி' (276) என்று வாழ்த்தினாள்.

288. கருதிய வாறினிக் காண்டி எனலும்
பருதி மரபா பரணன்—பெருவளவன்

289. கைதவன் வானவன் கைஅம்பின் மைஅம்பை
எய்தவன் சோணாட் டிறையவன்—வையம்

290. பதகர்அட வாடாப் படிமுடியக் காக்கும்
மதகரட மேருமேல் வந்தான்—உதகை

291. மதுரை பொருதிட்ட வார்முரச ஓதை
வெதிரை அடுதோளி வேட்டாள்—பதறி

292. எழுந்தாள் நடந்தாள் திகந்தம்இரு நான்கும்
தொழுந்தாள் அரசைத் தொழுதாள்—செழுந்தேன்

---

288. காண்டி - காண்பாய். பருதி மரபு ஆபரணன் - சூரிய குலத்துக்கு அணிகலனைப் போன்றவன்.

289. கைதவன் - பாண்டியன்; வானவன் - சேரன்; பாண்டி நாட்டையும் சேர நாட்டையும் அடிப்படுத்தினமையின் இவ்வாறு கூறினர். கை அம்பின் மை அம்பை எய்தவன் - கையில் உள்ள ஆக்னேயாஸ்திரத்தால் கருமையையுடைய கடலை எய்தவன்; இராமனைக் கருதிச் சொன்னது. மை அம்பு: அம்பு, ஆகுபெயர்.

289-90. வையம் வாடாப்படி காக்கும். பாதகர்களாகிய பகைவர் போர் செய்ய அதனால் உலகம் வாடாதபடி அதை முழுவதும் காக்கும். மத கரட மேரு - மதம் ஊறும் சுவடுகளை உடைய மேருமலை போன்ற யானை. உதகை - குடகு நாட்டில் உள்ள ஊர் (250).

291. மதுரையைப் பொருதவன் சோழன். வெதிரை அடு தோளி - மூங்கிலைத் தன் அழகால் அழிக்கும் தோளை உடைய அரிவை; வெதிர் - மூங்கில். வேட்டாள் - விரும்பிக் கேட்டாள்.

292. திகந்தம் - திசைகளின் முடிவு. எட்டுத் திசைகளிலும் உள்ளவர்கள் தொழும் திருவடியை உடைய சோழனைத் தொழுதாள்.

293. கடல்போய்த் திருப்பாற் கடலைக் கலந்த
அடல்போல் பிரானை அடுத்தாள்—கொடைவேந்தும்

294. வண்ணத்து வல்லி படர வரஇருந்த
அண்ணற் கடவுட்கா ஆயினான்—பெண்அணங்கும்

295. சூழிக் கடகளிற்றுத் தோன்றலைத் தன்விழி
ஆழிக் கொருதிருமால் ஆக்கினாள்—தாழார்

296. கருவைத் துடைத்தோனும் கட்டா மரைக்குத்
திருவைத் திருவாய்த் திளைத்தான்—சரிவளைபின்

297. பாணிக் கமலமும் பார்த்தவன் கேயூர
மாணிக்கம் நீலம் மலர்வித்தாள்—நீள்நிலத்தை

292—3. தேன் கடல் அரிவைக்கும் பாற்கடல் சோழனுக்கும் உவமை. இரண்டும் கலந்தால் இனிமை மிகுதியாகும். ''பாலொடு தேன்கலந் தற்றே'' (குறள்.) பிரானை - சோழனை.

294. வண்ணத்து வல்லி-அழகையுடைய காமவல்லியைப் போன்ற அரிவை. படர்வதற்காக வர, அதனை ஏற்றுக்கொள்ள இருந்த. அண்ணல் கடவுள் கா-தலைமை பெற்ற தெய்விகக் கற்பகம். கற்பகத்தில் படரும் கொடி காமவல்லி. அரிவையைக் காமவல்லியாகவும் சோழனைக் கற்பகமாகவும் உருவகம் செய்தார்.

295. சூழி-நெற்றிப் பட்டம். விழியாகிய கடலுக்கு. கண்ணிலே அவன் வடிவத்தை வைத்தலின் இவ்வாறு கூறினார், தாழார் - பகைவர்களுடைய.

296. கருவைத் துடைத்தோன்-கருவும் இராதபடி துடைத்தவன், கண்ணாகிய தாமரைக்கு உரிய திருமகளாகக் கொண்டு அரிவையோடு கலந்தான். சோழன் தன் கண்ணில் அரிவையின் வடிவைப் பதித்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். சரி வளை — சரியும் வளையும் அணிந்தவள்; அன்மொழித்தொகை; சரி — ஒருவகை வளை.

297. கையாகிய தாமரையையும் பார்த்துப் பிறகு அவனுடைய தோள் வளையில் உள்ள மாணிக்கத்தில் தன் கண்ணாகிய நீலோற்பல மலரை மலரச் செய்தாள். தோள் வளையைப் பார்த்தாள் என்று சொல்லியபடி.

298. ஆக்கிய மன்னனும்பார்த் தன்ன முலைநீலம்
வீக்கிய மாணிக்கம் மெய்பயந்தாள்—நோக்கால்

299. உருகி இருவரும் ஒள்அழகின் வெள்ளம்
பருகி நெகிழ்ந்த பதத்தே—முருகுயிர்க்கும்

300. ஆர்மாலை நிச்சம் அடும்ஆலை போய்ஒடுங்கக்
கார்மாலை ஓதிக்குக் கைதந்தான்—கூர்மாலை

301. நீத்தாள் உவகையின் நித்தம் அகம்புறம்
பூத்தாள் கலன்அகலம் பூரித்தாள்—ஏத்தி

302. முருங்கநகம் அட்ட முலைவிறலிக் கம்ம
பெருங்கனக மாமாரி பெய்தாள்—கருங்கண்

---

298. ஆக்கிய - வளர்ச்சி பெறச் செய்த. பார்த்து - பார்க்க; எச்சத்திரிபு. அன்ன மாணிக்கம்: நகிலில் நீலக்கச்சைக் கட்டிய மாணிக்கம் போன்ற அரிவை. பயந்தாள் - பசலை பூத்தாள்.

299. நெகிழ்ந்த பதத்தே - நெகிழ்ந்த சமயத்தில். முருகு உயிர்க்கும் - மணத்தை வீசும்.

300. ஆர்மாலை - ஆத்திமாலையை. நிச்சம் அடும் ஆலை போய் ஒடுங்க - நாள்தோறும் அரிவையைத் துன்புறுத்தும் மன்மதனுடைய கரும்பு வில் செயலொழிந்து போய் ஒடுங்கும்படி; ஆலை - கரும்பு. அடும் மாலை- துன்புறுத்தும் மாலைக்காலம் எனலும் ஆம். கார்மாலை ஓதிக்கு- மேகத்தின் இயல்பையுடைய கூந்தலைக் கொண்ட அரிவைக்கு; அன் மொழித் தொகை. ஆர்மாலை கைதந்தான். கூர் மாலை - மிக்க காம மயக்கத்தை; மால் - மயக்கம்.

301. உவகையின் நீத்தம் - மகிழ்ச்சி வெள்ளம். கலன் அகலம் பூரித்தாள் - அணிகலனை அணிந்த மார்பு வீங்கினாள்; இது மகிழ்ச்சி யால் உண்டாகும் மெய்ப்பாடு.

302. முருங்க நகம் அட்ட முலை-மலையானது முறியும்படி அதனைத் தன் பருமையால் பொருது வென்ற நகிலையுடைய. அம்ம : அசை.

303. இவளும் இருசெங்கண் தானும்உளர் என்னத்
திவளும் உருவிழியிற் செய்தார்—தவனகுல

304. மன்நெஞ்சும் பின்ஏக மன்நெஞ் சகலாத [ஒருத்தி
மின்நெஞ்சும் முன்அகல வேந்தகன்றுன்—பின்

தெரிவை

305. வாரி முளரி வலாரி குடிஅடிச்
சேரி எனக்கொள்ளும் தெள்ளமுதம்—மாரன்

306. தொழுந்தீபம் மேனகை தோற்றம் பகலிற் [யோன்
செழுந்தீபம் செய்யும் தெரிவை—தொழும்தகை

302—3. இவள் கருங்கண்ணும் தான் இரு செங்கண்ணும் என்று உம்மையைப் பிரித்துக் கூட்டுக. இந்த அரிவை கருமையான கண்களை யும் சோழன் இரண்டு செம்மையான கண்களையும் உடையவர்கள் என்னும்படி, விளங்கும் பிறர் உருவை விழியிலே நிலைக்கச் செய்தார். இயல்பாகவே அரிவையின் கண்கள் கரியனவாகவும் சோழன் கண்கள் சிவந்தனவாகவும் உள்ளவை. இப்போது கரிய நிறமுடைய சோழன் வடிவைக் கண்ணிலே வைத்ததனுல் அரிவையின் கண்கள் பின்னும் கருமையுடையன ஆயின. அப்படியே சிவந்த நிறமுடைய அரிவை யின் வடிவைச் சோழன் தன் கண்ணிற் கொண்டமையின் அவன் கண்கள் பின்னும் செம்மையுடையன ஆயின. தானும் - சோழனும். என்னச் செய்தார் - என்று சொல்லும்படி நிலைநிறுத்தினர். திவளும் - விளங்கும். உரு — உருவத்தை. விழியில் - கண்களில். தவன குலம் - சூரிய குலம்.

304. மன் - அரசன். அவன் முன்னுலே போகப் பின் நின்றுவிட் டாள் அரிவை. ஆகவே, அவன் நெஞ்சு அவளை நோக்கிப் பின் போக, அவள் நெஞ்சு அவனை நோக்கி முன் போயிற்று. மன் நெஞ்சு அகலாத மின் - அரிவை.

305, வாரி முளரி-தண்ணீரிலே தோன்றும் தாமரை. வலாரி குடி- இந்திரன் குடியிருக்கும் தேவலோகம். அடிச்சேரி-தன் ஏவற் பெண்டுகள் வாழும் இடம். தாமரையையும் தேவலோகத்தையும் ஏவற்பெண்டுகள் வாழும் இடமாகக் கொண்டாள்; என்றது, திருமகளும் கலைமகளும் தேவருலகப் பெண்களும் இவளுக்கு ஏவல் செய்யும் பெண்களாவார்கள் என்ற கருத்துடையது. வாரி-கடல் என்று கொண்டு திருமகள் இருக்கும் இடமாகக் கொள்வதும் பொருந்தும்.

306. மேனகையின் தோற்றத்தைப் பகலில் ஏற்றிய விளக்கைப் போல மங்கும்படி செய்யும் தெரிவை. தொழும் தகையோன்-சோழன்.

307. கொற்கொடி வைகும் குவட்டா யிரமாற்றுப்
பொற்கொடி மாணிக்கம் பூத்தனையாள்—
பிற்கடைநாள்

308. பாய்ந்த கடலிற் பதினு லுலகமும்
நீந்த அரிய நிதம்பத்தாள்—ஏந்திய

309. வாரைவிட் டோடி வளரக் களிறெட்டும்
பாரைவிட் டோடும் பணைமுலையாள்—பூரணனுக்

310. காலப்பே ருண்டியான் ஆகிய பேர்கால
காலப்போர் ஒத்த கடைக்கண்ணுள்—சால

311. வெடித்துள்ள போதுமது வென்ஒழுகப் பின்னர்
முடித்துள்ள போது முதலா—அடிக்கீழ்க்

---

307. கொல் கொடி வைகும் குவட்டு - கொல்லுதலையுடைய புலிக்கொடி தங்கும் மேருமலையில். சோழமன்னர், மேருமலையில் வேங்கை இலச்சினையைப் பொறித்தனர்; ''மேரு மருங்கிற் பெரும்புலி மான'' (இராச இராச. 59.)

307–308. பிற்கடைநாள் பாய்ந்தகடலின் - பின்னுலே பெருகி வரும் பிரளயகாலக் கடலைப் போல.

308. நிதம்பம் - இரகசிய உறுப்பு.

309. வார் - கச்சு. வளர்தலினுல் திசை யானை எட்டும் ஓடு வதற்குக் காரணமான. பணை-பருமை. பூரணனுக்கு-சிவபெருமானுக்கு.

310. ஆலப் பேருண்டியான் ஆகிய பேர் - நீலகண்டன் என்னும் பேர். காலகாலன் என்னும் பேர். இரண்டும் தனக்கு ஏற்றவையாக உள்ள கடைக்கண்ணையுடையாள். நஞ்சையும் யமனையும் போலக் கொல்லும் தன்மையை உடையது என்றபடி.

311, வெடித்துள்ள போது - தான் அணிந்த மலர்ந்த மலர்களி லுள்ள. மது வென் ஒழுக-தேன் முதுகில் ஒழுகும்படியாக. முடித்துள்ள போது முதலா - கொண்டையாக முடித்திருக்கும் பெதும்பைப் பருவம் முதலாக. அடிக்கீழ் - தெரிவையின் பாதத்தில்.

312. குடபால் குடக்கும் குணபால் குணக்கும்
வடபால் புடவி வடக்கும்—படுமழைக்குத்

313. தென்பால்அத் தெற்கும் தருக திருமுகம்என்
றன்பால் இரக்கும் அளகத்தாள்—நன்பகலோன்

314. அல்லைத் துரந்த புலரி அமளியிடை
ஒல்லைத் துயிலை உணர்ந்தனளாய்—மெல்ல

315. எடுத்திரை விட்ட இளஅன்னம் என்ன
மடுத்திரை என்ன மறுகும்—அடுத்துக்

312—3; கூந்தலின் பெருமை. அவள் கூந்தல் மேகம் போல இருத்தலின் நான்கு திசையிலும் உள்ளவர்கள் அவளை நாற்புறத்திலும் சூழ்ந்துகொண்டு, ''இந்த மேகத்திலிருந்து மழை பொழிவதற்குரிய ஆணையை இடும் திருமுகத்தைத் தருவாயாக'' என்று இரப்பார்களாம்.

312. குடபால் குணக்கும் - அவளுக்கு மேற்குப் பக்கத்தில் மேற்குத் திக்கில் உள்ளவர்களும், இப்படியே மற்றத்திசைகளுக்கும் கொள்க. குணபால் - கிழக்குப்பக்கத்தில். குணக்கு - கீழைத்திசையில் உள்ளவர்கள். புடவி - பூமி; இதனைக் குடக்கு முதலிய நாற்றிசையி னோடும் கூட்டுக; இடைநிலைத் தீவகம். படுமழைக்கு - பெய்யும் மழை யின் பொருட்டு; மழை பெய்வதற்காக.

313, தருக திருமுகம் - ஓலை தா; ஆணையிடுக என்பது கருத்து.

312—3. குடக்கும் குணக்கும் வடக்கும் தெற்கும் படுமழைக்குத் திருமுகம் தருக என்று இரக்கும். பகலோன் - சூரியன்.

314. அல்லைத் துரந்த புலரி - இருளை ஓட்டிய காலைப்பொழுதில். அமளி இடை ஒல்லை துயிலை உணர்ந்தனளாய் - படுக்கையிடத்திலிருந்து விரைவில் உறக்கத்தினின்றும் விழித்தவளாகி.

315. எடுத்து இரை விட்ட - எடுத்து உணவை உண்ணாமல் தவறவிட்ட. மடு திரை என்ன-பொய்கையில் உள்ள அலையைப் போல. மறுகும்-மனம் சுழல்வாள்.

316. கனவை நணுகிய காலைக் கழித்த
மனவை இடைக்கண்டு வாடும்—சனநிபன்

317. சாந்தகலம் கூடியும் சாந்துபடக் கூடாத்தன்
ஏந்தகலம் செந்தீ எழநோக்கும்—வேந்தன்

318. கொழுந்தடந் தோளிற் குவளை மதுவைச்
செழுந்தடந் தோளூடு தேடும்—அழுந்தப்

319. புரிந்தன தண்கலவிப் பூசல்வாய் வண்டு
நெரிந்தன காணாது நேடும்—புரிந்துபுரிந்

320. தாராமை மன்னன் அருந்தியும் வாய்வெளுப்புச்
சாராமை ஆடி தனில்பார்க்கும்—சோர்வாய்

316—20. அவள் துயின்றபொழுது சோழனோடு அளவளாவி இன்புற்றதாகக் கனாக் கண்டாள். அதனை உண்மையாக எண்ணி மகிழ்ந்த அவள், துயிலுணர்ந்த பின் அப்போது உண்டான வேறுபாடு களின்றி, இயல்பான நிலையில் அணிகலன் முதலியவை இருக்கக் கண்டு ஏமாற்றம் அடைகிறாள்.

316. கழித்த - நீக்கிய. மனவை - மணியை; இங்கே சினையாகு பெயராய் மேகலைக்கு ஆயிற்று. மேகலை கழன்றதாகக் கனவு கண்டாள்; நனவில் அது கழலாமல் இருப்பதைக் கண்டு வாடினாள். சனநிபன் - சோழன்; சனபதி, சனநாதன், நரபதி என்பன சோழனுடைய பெயர்கள்.

317. சாந்து அகலம் கூடியும் - கனவில் சந்தனம் அணிந்த மார்பைத் தழுவியும். சாந்துபடக்கூடாத் தன் ஏந்து அகலம் - அந்தச் சந்தனம் படமாட்டாமல் உயர்ந்துள்ள தன் மார்பை. உண்மையில் தழுவாமை யால் அவள் மார்பில் சந்தனம் இல்லை ஆயிற்று.

318. குவளை மது - குவளைமாலையினின்று இழிந்த தேனை. தன் னுடைய தோளினிடையே இருக்கிறதா என்று தேடுவாள்.

319. புரிந்தனவாகிய குளிர்ந்த கலவியாகிய சண்டையில். வண்டு நெரிந்தன - உடைந்தனவாகிய வளைகளை. நேடும் - தேடுவாள். புரிந்து புரிந்து - விரும்பி விரும்பி.

320. ஆராமை-தெவிட்டாமல். அருந்தியும்-இதழூறலை உண்டும். ஆடிதனில் - கண்ணாடியில். கலவியில் வாய் வெளுக்கும்.

321. விழும்எழும் நெக்குருகும் வெய்துயிர்க்கும் எங்கும்
தொழும்அழும் உள்ளம் துளங்கும்—குழுஅறிந்

322. தாவிக் கரைவிரைந் தாட்டயர்தும் யாம்என்று
மேவிக் கொடுநடந்து மேயதற்பின்—யாவரும்

323. தோகைக் கபயன் வடிவைச்............
....

324. ....
வழியுந் திருக்கண் மலரும்—பொழுதனைத்தும்

325. சற்றும் திரியா முகமும் தமிழ்சிவந்து
முற்றும் கனிவாய் முகிணகையும்—பொற்றோள்

326. வடியும் குழைக்காதும் மாமேரு தோற்றுப்
படியும் துணைத்தோட் பணைப்பும்—கடல்கடைந்த

---

321. வெய்துயிர்க்கும் - பெருமூச்சு விடுவாள். குழு அறிந்து - அவள் நிலையை மகளிர் கூட்டம் தெரிந்துகொண்டு.

322. வாவியின் கரைக்குச் சென்று நீராடுவோம் என்று சொல்லி அவளைக் கொண்டு சென்றார்கள். ஆவி-வாவி.

323. இதிலிருந்து சில கண்ணிகள் விட்டுப்போயின. அப்பகுதியில் சோழன் வீதியில் வர, தெரிவை அங்கே சென்று அவனைப் பார்த்தாள் என்ற செய்தி இருக்கும் என்று தோன்றுகின்றது. அவள் பார்த்த சோழனுடைய அங்கங்களை வருணிக்கிறார்.

324. கருணை என்ற சொல், முன் அடியின் இறுதியில் இருத்தல் கூடும். கருணை வழியும் திருக்கண்.

325. முகிழ் நகையும் - தோற்றும் புன்சிரிப்பும். தமிழ் சிவந்து முற்றுதலாவது, எப்போதும் தமிழைச் சொல்லிச் சொல்லி நிறைவு பெறுதல்.

326. வடியும் - தாழும். பணைப்பு - பருத்திருக்கும் அழகு.

327. அந்தா மரையும் அருவிப் புரிநூலும்
செந்தா மரைப்பொற் றிருமார்பும்—இந்துஎனப்

328. பூத்த உடையின் முதிர்நிலவும் பொற்கச்சை
யாத்த உடைவாள் இளவெயிலும்—நாத்துதிப்ப

329. ஆய்அளவும் கொள்ளா தழகொழுகி மாதிரத்துப்
போய்அளவும் கண்அளவிப் போய்வளைந்தாள்—
நாயகா

330. பங்கே ருகத்துப் பணிலத் திருநிதியும்
இங்கே கொடுக்கினும் ஏற்கிலேன்—எம்கோவே

331. சிந்தா மணியும் சுரர்தருவும் தேனுவும்
வந்தாலும் வாரா வரவென்னேன்—அந்தநாள்

---

327. தாமரை - கைகள். அருவி போன்ற முந்நூல். திரு இருப்பதனுல் மார்பு செந்தாமரை போன்றதாயிற்று. திருமாலாக எண்ணிக் கூறியது. இந்து என — சந்திரனைப் போல.

328. பூத்த - பொலிந்த. கச்சை யாத்த-இடையில் உள்ள கச்சையிலே கட்டிய. உடையின் வெள்ளை ஒளி நிலவையும், உடைவாளின் மெல்லிய செவ்வொளி இள வெயிலையும் ஒத்தன.

திருக்கண் மலர் (324) முதலியவற்றை நாவானது துதிக்க (328).

329. ஆய் அளவும் கொள்ளாது - ஆராய்கின்ற எந்த அளவிற்கும் அடங்காமல். மாதிரத்துப் போய் அளவும் கண் - திசைகளில் சென்று உலவும் கண். கண்ணின் நீள அகலத்தைச் சிறப்பித்தபடி. கண் அளவிப் போய் வளைந்தாள்—கண்ணினுல் கலந்துபோய்ச் சூழ்ந்துகொண்டாள். இனி வருவன அவள் சோழனைப் பார்த்துக் கூறும் கூற்று. நாயகா : விளி.

330. பங்கேருகத்து பணிலத்து இரு நிதியும் - தாமரையில் தோன்றும் பதுமநிதி, சங்கில் தோன்றும் சங்கநிதி ஆகிய இரண்டு நிதிகளும், நான் அவற்றைத் தேடிப் போகாமல் நான் இருக்கும் இவ்விடத்தில் கொண்டுவந்து கொடுத்தாலும்.

331. சிந்தாமணி - நினைத்தவற்றையெல்லாம் தரும் மணி. சுரர் தரு - கற்பகம். தேனு - காமதேனு. இவை மூன்றும் இந்திரனிடம் உள்ளவை. ''உம்பர்தருத் தேனுமணி'' (திருப்புகழ்.) வாரா வரவு - நமக்கு வாராத லாபம்; வரவு-லாபம். அந்த நாள் - பழங்காலத்தில்.

332. வில்மலைவும் மீன்மலைவும் வீட்டிப் புலிமலைந்த
பொன்மலைதந் தாலும் பொருட்கொள்ளேன்—
இன்னமும்

333. நின்கண் கனவெனக்கு நேர்கைக்கு நீகவர்ந்த
என்கண் துயிலே இரக்கின்றேன்—வன்கண்மை

334. என்னுடன் செய்தியேல் நீதிக் கிழிவென்று
மன்னுடன் செங்கனி வாய்மலர்ந்தாள்—தென்னர்

335. மதில்மடங்க மட்டித்த கோமானும் மானிற்
பதின்மடங்கு வேட்கை பணித்தான்—மதுகரத்

336. தாரும் கலனும் அனந்த சனபதமும்
ஊரும் தமனிய ஓங்கலும்—ஆரும்

337. தெரிசங் கரன்பாத சேகரன் வீரம்
புரிசங் கரன்ஈந்து போந்தான்—வருதெருவத்

---

332. சேரருடைய வில்லைப் பொறித்ததையும், பாண்டியர்களுடைய மீனைப் பொறித்ததையும் அழித்துச் சோழன் தன் புலியிலச்சினையைப் பொறித்த மேருமலை. மலைவு-அணிதல்; இங்கே பொறித்தல்.

333. நின்கண் கனவு - நின்னிடத்தே இணைந்ததாகக் கண்ட கனவு. நேர்கைக்கு - மீண்டும் உண்டாவதற்கு. நீ கவர்ந்த துயில் - நீ அருள் செய்யாமல் என்னிடமிருந்து கவர்ந்த உறக்கம்; காமுற்றோர் உறங்காதிருத்தல் இயல்பு. வன்கண்மை - கொடுமை; என் வேண்டுகோளைப் புறக்கணிக்கும் கொடுமை.

334. மன்னுடன்-சோழனுடன். தென்னர்-பாண்டியர்களுடைய.

335. மட்டித்த-அழித்த. மானின்-தெரிவையைவிட. வேட்கை பணித்தான் - காதலை அவள்பால் உடையவனானான். மதுகரம் - வண்டுகள் மொய்க்கும்.

336. கலனும் - ஆபரணங்களும். சனபதம் - நாடு. தமனிய ஓங்கலும்-பொன் குவிந்த மலையும்; மலைபோலக் குவிந்த பொன்னும்.

337. சங்கரன் பாத சேகரன்-சிவபெருமானுடைய திருவடிகளைத் தன் தலையில் அணிந்து கொண்டவன்.

336—7, மன்னர்கள் தம் அன்புக்கு உரியவர்களுக்கு மாலை, அணிகலன், நாடு, ஊர், பொன் ஆகியவற்றைப் பரிசாகத் தருவது மரபு.

பேரிளம் பெண்

338. தங்கொருத்தி பேரிளம்பெண் அம்போ ருகத்தொ
ருத்தி
இங்கொருத்தி மேனிக் கெனத்தகுவாள்—சங்கரனைச்

339. சோளேந் திரனைத் தொழாத வழுதிகுல
வாள்ஏந்தி நிற்கைக்கு மாறும்—சோளேசன்

340. ஆகத்தாள் தோளாள் அழகுப் பெயர்சுமந்த
வேகத்தா ளாயும் வெறுத்தென்னப்—பாகத்து

341. மேவும் பிறையும் விழுக்கமலைக் கோலமும்
பூவும் துறந்த புரிகுழலாள்—காவலன்

342. ஏர்அஞ் சனம்புனைவ தெங்கட் கமையும்எனக்
கார்அஞ் சனம்புனையாக் கண்மலராள்—தீரநைந்து

---

338. மேனி அழகுக்கு எடுத்துக்காட்டாக இருப்பவள் தாமரையில் உள்ள திருமகளாகிய ஒருத்தி, இங்கேயுள்ள பேரிளம் பெண்ணாகிய ஒருத்தி என்று சொல்வதற்கு ஏற்றவள்.

339–41. பேரிளம் பெண் தன் கூந்தலில் பிறை, சீதேவி என்னும் தலைக்கோலங்களையும் மலரையும் அணியாமல் துறந்திருக்கிறாள், அதற்குக் கற்பனையாகக் காரணம் கூறுகிறார். வழுதிகுல வாள் - பாண்டிய குலத்தின் மூல ஒளி; என்றது சந்திரனை. அதனைத் தலையில் ஏந்தி நிற்பதற்கு மாறுபாடுள்ளவளாகிப் பிறையைத் துறந்தாள். ஆகத்தாள் - மார்பிலுள்ள திருமகள்; அவள் பெயர் சுமந்தது சீதேவி என்னும் தலைக்கோலம். தோளாள் - சோழனுடைய தோளில் உள்ள நிலமகள். அவள் பெயராகிய பூ என்பதைச் சுமந்தது மலர். சுமந்த வேகத்தாளாயும்-சுமப்பதனால் உண்டான கோபத்தையுடையவளாகியும்.

மாறுய்ப் பிறை துறந்தாள்; வேகத்தாளாய்ச் சீதேவி என்னும் தலைக்கோலத்தையும் மலரையும் துறந்தாள்.

விழுக்கமலைக் கோலம் - மேலான சீதேவி என்னும் தலைக்கோலம். இங்கே சொன்ன மூன்று தலையணிகளையும், ''செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்ப'' (தண்டி. மேற்.) என்று பிறரும் கூறுவர்.

341–2. சோழ மன்னனுடைய கருமேனியின் அழகாகிய மையை அணிவது எங்களுக்குப் போதும் என்று கரிய மையைப் புனையாத கண்மலரை உடையவள். தீர நைந்து - முற்றும் மெலிந்து.

343. முன்னும் கடம்அனந்தம் தோற்று முதுகிட்டும்
பின்னும் கடம்அனந்தம் பிந்தாமே—தன்னில்

344. வனைந்துபா ரித்துவிடு மண்அடையக் கொல்ல
முனிந்துபார்த் தன்ன முலையாள்—அனந்தன்

345. பணம்ஆ யிரத்தின் ஒருபூப் பரிக்கும்
குணமா யதுவெருளி கொள்ளக்—கணமுனிவர்

346. ஓங்கும் நயனமனப் பூவின் ஒருகோடி
தாங்கும் நிதம்பத் தடம்பணத்தாள்—தீங்கிளவி

343—4, நகிலின் வருணனை. பேரிளம் பெண்ணின் நகில் தாழ்ந்து கீழ்நோக்கியிருக்கும். இதற்கு ஒரு காரணத்தைக் கற்பிக்கிறார்.

முன்பும் பல குடங்கள் இவள் நகிலுக்குத் தோற்றுப் புறங்காட்டினும், அதனால் சோர்வடையாமல் பின்னும் அளவற்ற குடங்களைத் தோல்வியுறாமல் தன்னிடத்தினின்றும் உருவாக்கிப் பரப்பிவிடும் பூமி முழுவதையும் அழிப்பதற்காகக் கோபித்துப் பார்த்தாற் போலக் கீழ் நோக்கியிருக்கும் நகிலை உடையவள்.

கடம் - குடம். பிந்தாமே-தோற்றுப் பின்னடையாமல். தன்னில்-தன்னிடத்தினின்றும். வனைந்து - உருவாக்கி. பாரித்து - பரப்பி. அடைய - முழுதும். அனந்தன் - ஆதிசேடன்.

344—6. ஆதிசேடனுடைய படங்கள் ஆயிரத்தால் ஒரு பூவை (பூமியை)த் தாங்கும் இயல்பானது அஞ்சி ஒதுங்கும்படியாக, கூட்டமாகிய முனிவர் உயர்ந்த கண்களாகிய பூவிலும் உள்ளமாகிய பூவிலும் ஒரு கோடியைத் தாங்குகின்ற இரகசிய உறுப்பாகிய படத்தை உடையவள். ஆயிரம் படங்களால் ஒரு பூவைத் தாங்குவதைவிட ஒரு படத்தால் ஒரு கோடி பூக்களைத் தாங்குவது சிறந்தது என்றபடி.

ஒரு பூ பரிக்கும்-ஒரு பூமியைத் தாங்கும். குணமாயது: எழுவாய். வெருளி கொள்ள-அச்சம் கொள்ள. கண முனிவர் - முனிவர்கணத்தார். நயனப்பூ, மனப்பூ. நிதம்பந் தாங்குமென்றது, முனிவரின் கண்களும் உள்ளங்களும் அதை நாடி மொய்த்ததைச் சுட்டியபடி. நிதம்பத்தை அரவின் படமாக உருவகித்தார்.

347. செய்து விறலியர் நாளைத் திருவுலா
எய்தும் அனகன் எனக்கேட்டாள்—வெய்யதீப்

348. போலாயும் அண்ணல் குலத்தோன் புகுவித்த
மாலாய் தழீஇக்கொள்ள வாஎன்றாள்—வேலாய்

349. அடவந்தா யேனும் அரசன் மரபு [விடமாயும்
தொடவந்தாய் எய்துகெனச் சொன்னாள்—

350. நம்காள மேகம் நரலை கடையவந்த
திங்காள் வருதிஎனச் செப்பினாள்—பொங்கோசை

351. கூற்றுக் கெதிரினும் கோத்துரந்த இந்திர
ஏற்றுக் கனமணிஎன் றேமுற்றாள்—ஆற்றரிய

346—7. தீங்கிளவி செய்து - இனிய மொழிகளைச் சொல்லி. அனகன் எய்தும்; அனகன் - சோழன். என - என்று விறலியர் தெரிவிக்க.

347—53. மாலை முதலியன காமுற்றவருக்குத் துன்பத்தை உண்டாக்குபவையானாலும் சோழனுடைய தொடர்புடைமையால் அவற்றை வெறுக்காமல் விரும்புவேன் என்கிறாள்.

348. அண்ணல் குலத்தோன்-சோழர் குல முதல்வனாகிய கதிரவன். புகுவித்த - புகச் செய்த. மாலாய் - அந்தி மாலையே. நீ தீப்போல இருந்தாலும் சோழன் குல முதல்வனால் புகுத்தப்படுவதால் உன்னை விரும்பித் தழுவிக் கொள்ள வா என்றாள். வேலாய் - கடலே.

349. அட-என்னைத் துன்புறுத்த. அரசன் மரபு தொட வந்தாய்-சோழ அரசனுடைய குலத்தினோராகிய சகரர்கள் தோண்ட உண்டானாய். கீழ்கடலைச் சகரர்கள் தோண்டினர்; அதனால் சாகரம் என்னும் பெயர் வந்தது. விடமாயும் - விடம் போல இருந்தாலும்.

350. நம் காளமேகம் - நம்முடைய கரிய மேகம் போன்ற சோழன்; திருமாலாக எண்ணிச் சொன்னது. நரலை-கடல். பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து எழுந்த பொருள்களில் ஒன்று சந்திரன். ஓசை - மணியின் ஓசை.

351. கூற்றுக்கு எதிரினும் - யமனுக்கு ஒப்பாக இருந்தாலும். கோ துரந்த இந்திர ஏற்றுக் கனமணி என்று - சோழன் ஏறி ஓட்டிய இந்திரனாகிய இடபத்தின் கனமான மணி என்று கருதி. சூரிய வமிசத்தில் தோன்றிய ககுத்தன் என்பவன் இந்திரனை இடபமாக்கி ஊர்ந்தான் (குலோத்துங்க. 3, இராசராச. 10); ''இவர்குலத்தோர், தோன்றலைப்பண் டிந்திரன்காண் விடையேறாச் சுமந்தோனும்'' (கம்ப. குலமுறை. 3). ஏமுற்றாள்-இன்பமுற்றாள். ஆற்றரிய - சகிப்பதற்கு அரிய.

352. தீயனைய என்கினும் சென்னி கனுத்தந்த
தூயணையை வாயால் துதிசெய்தாள்—பாய்களிற்றுப்

353. பூங்கோழி வேந்தன் பவனி புலரிதரக்
கூம்கோழி வாழிஎனக் கும்பிட்டாள்—ஆங்கே

354. எழுந்த திரவி இகந்தது கங்குல்
விழுந்தது வெண்ணிலா வெள்ளம்—ஒழிந்தது

355. மீனம் அதிர்ந்தது புட்குலம் மென்கமலக்
கானம் அலர்ந்ததக் காலத்தே—தான்எழுந்து

356. பாங்கர் எறிக்கும் மணிமுன்றிற் பாங்கியர்
ஞாங்கர் இருப்ப நடுஇருந்து—வேங்கைத்

357. துவசனைச் செம்பியனைச் சோழனை வீரக்
கவசனை மாறு கரனை—அவிநவனைக்

358. காட்டும் கனவு நனவுதனில் காட்சியே
தீட்டும் படிநயந்த செய்கையளாய்—நீட்டிய

---

352. தீ அனைய என்கினும்-நெருப்பைப் போன்றவை என்றாலும். சென்னி கனுத் தந்த – சோழனைக் கனவில் இன்புறும்படி தந்த. அணையை - படுக்கையை.

353. கோழி வேந்தன் - உறையூருக்கு அரசன். புலரி - விடியற் காலம். புலரியில் பவனியைத் தரும்படி கூவிய கோழியை.

354. இகந்தது - நீங்கியது. கங்குல் - இரவு.

355. புள் குலம் அதிர்ந்தது. தான் - பேரிளம்பெண்.

356. ஞாங்கர் - பக்கத்தில். வேங்கை - புலி.

357. மானுகரன் - மானத்துக்கு இருப்பிடமாக உள்ளவன். அவினவன் - புதியவன்.

358. கனவுக் காட்சியை நனவிலே காணும் காட்சியாக ஓவியத்தில் எழுதும் வண்ணம்.

359. கையலரில் கோலும் கருவண்ண மும்படமும்
தையலர் வல்லே தரவாங்கி—வையத்தை

360. மூடிய தோர்அடியா மூதண்ட கூடத்தைச்
சூடிய தோர்அடியாம் தொல்கோலம்—நாடும்

361. படம்முடியப் பல்காலும் பார்க்கும்இரு கொங்கைத்
தடட்முடியக் கண்ஆரம் சாத்தும்—படிஏழும்

362. உண்ட திருவாய் உதரம் வகுப்பது
கண்ட கிழிகொல்எனக் கைசோரும்—கொண்டலுக்குக்

363. குன்றெடுத்தோர் ஆழி கொழுஞ்சோதி ஆயிரத்துக்
கன்றெடுத்த கைக்கீ தடாதென்னும்—வென்றி

---

359. கோல் - தூரிகை. சோழன் மேனி கரிய நிறமுடையதாத லின் அவன் வடிவை எழுதக் கரிய வண்ணத்தைத் தந்தனர். கரை வண்ணம் என்னும் பாடத்திற்குக் கரைத்தவண்ணம் என்று பொருள் கொள்க. படம் - ஓவியம் எழுதும் கிழி. வல்லே - விரைவில்.

360–64. எழுதரிதென்று பேரிளம் பெண் எண்ணுகிறாள்.

360. மூடியது ஓர் அடியாக. மூதண்ட கூடத்தை - முதிய அண்ட கூடமாகிய உச்சியை. தொல் கோலம் - பழைய திரிவிக்கிரம வடிவம். நாடும் - எழுத நினைப்பாள்.

361. படம் முடியப் பல்காலும் பார்க்கும் - கையில் கிழி முழு வதையும் பல தரமும் பார்ப்பாள். கண் ஆரம் சாத்தும் - கண்ணி லிருந்து உதிரும் முத்துப் போன்ற நீர்த்துளிகளை அணிவாள். இந்தச் சிறிய கிழியில் அவனுடைய பெரிய வடிவை எழுத இயலாதே என்று எண்ணிக் கண்ணீர் விட்டாள். படி ஏழும் - ஏழு உலகங்களையும்.

362. திருவாயையும் உதரத்தையும் ஓவியத்தில் அமைப்பது. கண்ட கிழிகொல் - இங்கே நான் கண்ட இந்தக் கிழியோ. கொண் டலுக்கு - இந்திரன் விட்ட மேகங்களைத் தடுப்பதற்கு.

363. குன்று - கோவர்த்தனகிரி. ஆழி - சக்கரம். கொழுஞ் சோதி ஆயிரத்துக்கு - வளமான சுடர்கள் பலவற்றையுடைய சூரியனை மறைப்பதற்கு; ஆயிரம் என்றது அளவற்றது என்பதைப் புலப்படுத் தியது; அனந்தவாசி என்பர். பாரதப் போரில் கண்ணன் சக்கரத் தால் கதிரவனை மறைத்தான். ஈது அடாது - இது பொருந்தாது.

364. அடலோன் உருவம் அமையத் திருப்பாற்
கடலோ இதென்னுக் கவலும்—இடைதடுத்து

365. முத்தனைய மூரல் ஒருத்திஅவன் முன்னைவடி
வத்தனையும் நம்மால் அடங்குமோ—இத்தலத்தை

366. எந்தை பிறந்தளிக்கு மாறே எழுதுகெனச்
சிந்தை தெளிந்ததொரு செவ்விக்கண்—இந்து

367. குலமன்னர் கேரளக் கோமன்னர் ஏனைப்
பலமன்னர் முன்னர்ப் பணிய—உலகிறைஞ்சப்

368. பேரி முரசம் அதிரப் பெரிதொற்றை
மூரி வலம்புரி முன்முழங்கத்—தேரும்

369. கரியும் சிவிகை கவிகை கொடிக்காடும்
பரியும் நிலம்நெளியப் பம்ப—நிருபன்

---

364. அடலோன் - சோழனுகிய திருமால். கவலும்-கவலை கொள்வாள். இடை தடுத்து – இடையே அவள் கவலுவதைத் தடுத்து.

365. மூரல் - பல். ஒருத்தி - ஒரு தோழி. முன்னை வடிவு என்றது திருமாலின் அவதார வடிவங்களை. நம்மால் அடங்குமோ - நம்மால் ஓவியத்தில் எழுத அடங்குமோ. இத்தலத்தை - இந்தப் பூமியை.

366. இப்போது பிறந்து காவல் புரியும் வடிவத்தையே. என - என்று சொல்ல. அது கேட்டுப் பேரிளம் பெண் சிந்தை தெளிந்தாள். இந்து - சந்திரன்.

366–7. இந்து குல மன்னர் - பாண்டியர்.

367. கேரளக் கோமன்னர் -சேரர். உலகு - உலகிலுள்ள மக்கள்.

368. பேரி - பெரிய முரசு. மூரி - வலிமையையுடைய. வலம்புரி - சங்கு. பெரிது முழங்க.

369. கவிகை - குடை. பரியும் - குதிரைகளும். நெளிய - வளைய. பம்ப - பரவ.

370. வளவன் அபயன் மதுரநவ நீதக்
களவன் மறுகுபுகக் கண்டாள்—வளேஎன்ன

371. அங்கைக் கிழியும்ஒழித் தாயக் கடலோடும்
செங்கைக் களிற்றெதிர்போய்ச் சேவித்தாள்—எங்கும்

372. புதையப் பொரவந்த பூபாலர்க் கெல்லாம்
இதையத் திடித்தஇடி யேறே—முதுகலிங்கர்

373. கங்கத்தர் என்னும் கனகன்அகன் சேனே
சிங்கத் துரந்தநர சிங்கமே—கங்கம்எழத்

374. தாக்கும் அமரும் மறந்து தலைமுன்றில்
காக்கு மவர்மானக் காவலே—ஆக்கிய

375. தோலா அறத்தை மறவிலங்கு துய்க்காமே
வேலா வலயஞ்சூழ் வேலியே—நூலோர்

---

370. மதுர நவநீதக் களவன் - இனிமையையுடைய வெண்ணெயைக் களவு செய்தவன்; சோழனைக் கண்ணனாகச் சொன்னபடி. வளே என்ன - வளையை இழந்தது போல.

371. கிழி — ஓவியம் எழுதக் கைக்கொண்ட கிழி. ஆயக்கடல் - பெண்களின் கூட்டமாகிய கடல். செங்கைக் களிறு - செந்நிறமான கையையுடைய களிற்றைப் போன்ற சோழன்; இல்பொருளுவமை. இலக்கணங்களால் செம்மையுள்ள கையைப் பெற்ற யானை என்றும் கொள்ளலாம்.

இது முதல் 385 வரை பேரிளம் பெண்ணின் கூற்று.

372. புதைய - மறைய. கலிங்கர் - கலிங்க நாட்டரசர்.

372—3, கனகன் - இரணியன். கலிங்க நாட்டரசர், கங்க நாட்டரசர் ஆகியவர்களே இரணியனுடைய படையாக உருவகம் செய்தார். சிங்க - குறைய. துரந்த - ஓட்டிய. கங்கம் - கழுகு.

374. போர் செய்தலை விட்டு விட்டுத் தலைவாசலைக் காத்து நிற்கும் அரசர்களின் மானத்தைக் காப்பவன் சோழன். ஆக்கிய - வளர்த்த.

375. தோலா-தோல்வியடையாத. அறத்தை-அறமாகிய பயிரை. மற விலங்கு - அதன்மச் செயல்களாகிய மிருகங்கள். துய்க்காமே - உண்ணுதபடி. வேலாவலயம் சூழ் - நிலவுலகத்தைச் சுற்றிப் பாது காக்கும். நூலோர் - புலவர்,

376. உருகிய செந்தமிழ்ச் செஞ்சாலி ஓங்கப்
பெருகிய பொன்னிப் பெருக்கே—திருமயிலும்

377. சூழும் புகழ்க்கிளியும் சொல்லனமும் போர்க்குயிலும்
வாழும் நிலைய மலர்க்காவே—ஏழுலகும்

378. உற்ற ஒருதிகிரி ஓம்பும் வகைசெய்த
கொற்ற வளவர் குலவிளக்கே—மற்றொருத்தி

379. பூண்ட தனுக்கூன் நிமிர்த்தநீ போர்க்காமன்
நீண்ட தனுக்கூன் நிமிர்த்தாயோ—ஆண்டொரு

380. வெங்கட் பெருமானைச் செற்றநின் வில்வாங்கித்
திங்கட் கலையும் செறாய்கொல்லோ—பைங்கானில்

---

376. செந்தமிழ்-தமிழ்க்கவிதை. செஞ்சாலி-செந்நெல். பொன்னிப் பெருக்கு - காவிரி வெள்ள நீர். திருமயிலும் - திருமகளாகிய மயிலும்.

377. சூழும் புகழ்க் கிளியும் - பரவும் புகழ் மகளாகிய கிளியும். சொல் அனமும் - சொல்லுக்குத் தலைவியாகிய கலைமகள் என்னும் அன்னமும். போர்க்குயிலும்-போரில் வெற்றியைத் தரும் வெற்றி மகளாகிய குயிலும். நிலையமாகிய மலரையுடைய சோலையே.

377—8. ஏழு உலகத்தையும் பலருக்கும் பொதுவாகச் செய்யாமல் ஒரு சக்கரத்தால் பாதுகாக்கும்படி செய்த வெற்றியையுடைய சோழகுலத்துக்கு விளக்குப் போன்றவனே; ஏக சக்கராதிபதி என்றபடி. மற்று : அசை. ஒருத்தி - குப்ஜை என்னும் வண்ணமகள்.

379. பூண்ட தனு கூன் - ஏந்திய உடம்பின் கூனை. நிமிர்த்த - நிமிரச் செய்த. கண்ணன் கூனியாக இருந்த வண்ணமகளை நிமிர்த்திக் கூன் போகச் செய்தான். தனுக்கூன் - வில்லின் வளைவை. காமன் வில்லை வளைத்தால் காமுற்றோர்க்குத் துன்பம் விளையும்.

380. வெங்கண் பெரு மானை - வெம்மையான கண்ணையுடைய மாரீசன் என்னும் பெரிய மானை. செற்ற-அழித்த. திங்கட்கலையும் - சந்திரனிலுள்ள கலைமானையும். அந்த மானைச் செற்றால் தனக்குத் துன்பந் தரும் சந்திரனும் அழிவானென்ற எண்ணத்தால் சொன்னாள்.

381. காகஞ் சினந்த பகழிஅது காத்தகுயில்
வேகம் கெடத்துரந்து மீளாதோ—நாகத்தில்

382. ஒன்றிற் கடந்த மராமரம்ஓர் ஏழினும்
அன்றிற் கரும்பெண்ணை ஆற்றலோ—பொன்றினும்

383. முன்னம் மருந்தைக் கொணர மொழிந்தவன்
இன்னம் இவண்கொணர்கைக் கேவுமோ—
முன்உவரிப்

384. பொற்புத் திருஅணையில் கட்டாது பூந்தென்றல்
வெற்புத் தமிழ்க்கிரங்கி விட்டதோ—கற்பகமே

385. சொல்என்றும் உன்துணையே அன்றித் துணைஒன்றும்
இல்என்றும் ஓயா தியம்பினாள்—செல்விக்குச்

---

381. காகம் - காகாசுரன். பகழி - அம்பு; எழுவாய். அது காத்த குயில் - அந்தக் காக்கையினாற் காப்பாற்றப்பட்ட குயிலின், குயில் காகத்தின் கூட்டில் முட்டையிட அதைக் காகமே அடை காத்துக் காக்குமாதலின் இவ்வாறு கூறினாள். துரந்து - ஓட்டி. நாகத்தில் - மலைகளில்.

382. ஒன்றில் - கிட்கிந்தையில். கடந்த - துளைத்து வென்ற. ஏழினும் — ஏழைவிட. அன்றில் கரும் பெண்ணை - அன்றில் வாழும் கரிய பனை. பனைமரத்தை அழித்தால் அன்றில் இடமின்றி வாடும் என்பதை எண்ணிக் கூறியது. ஆற்றலோ - ஆற்றலுடையதோ. பொன்றினும் - இறந்தாலும்.

383. மருந்தை - சஞ்சீவியை. மொழிந்தவன் - சாம்பவான். ஏவுமோ - ஏவுவானோ? உவரி - கடலில்.

384. திரு அணையில் கட்டாது - எல்லா மலைகளையும் சேதுவில் கொண்டுவந்து போட்டுக் கட்டியது போல் கட்டாமல், மெல்லிய தென்றல் வீசும் பொதிய மலை, தமிழுக்காக இரங்கி விடப்பட்டதோ. வெற்பு விட்டதோ. 'அதையும் சேர்த்துக் கட்டியிருந்தால் என்னை வருத்தும் தென்றலுக்கு இடம் இல்லாமற் போயிருக்குமே!' என்பது அவள் உள்ளக்கிடக்கை.

385. சொல் என்றும் இல் என்றும் இயம்பினாள். செல்விக்கு - பேரிளம் பெண்ணுக்கு.

386. சூட்டினன் ஆரத் தொடலை அருட்கடலை
ஆட்டினன் இன்னல் அகற்றினன்—வேட்டுப்

387. பருவத் தெழுவகைமைப் பாவையர்எல் லோரும்
தெருவத் தினைய திளைப்பப்—பரணி

388. கவியாற் செயங்கொண்டான் கட்டுரைப்பக் கொண்டான்
குவியாக் கரத்தரசு கொண்டான்—கவிகை

389. நிலாக்கொண்டான் கூத்தன் நிகழ்த்த ஒருமூன்
றுலாக்கொண்டான் போந்தான் உலா.

---

386. ஆரத் தொடலை — ஆத்தி மாலையை. அருட்கடலை ஆட்டினன் - தன் அருளாகிய கடலினுல் அவளை ஆட்டினன்; மிகுதியாகக் கருணை புரிந்தான். வேட்டு,- விரும்பி

387—8. தெருவத்து - தெருவில். இனைய திளைப்ப - இந்த வகைகளில் ஈடுபட. செயங்கொண்டான் கவியால் பரணியைச் சொல்ல; இது கலிங்கத்துப் பரணி. குவியாக் கரம் - பிறரைக் கும்பிடாத கரம்; ''சேர்ந்தறியாக் கையானை'' (திருவா. திருவம்மானை.)

388—9. கவிகையாகிய நிலாவைக் கொண்டவன். கூத்தன் — ஒட்டக்கூத்தர். நிகழ்த்த - பாட. ஒரு மூன்று உலா - விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழன் உலா, இராச இராச சோழனுலா என்பவை. முன்னோர் செயலை இவன் செயலாகச் சொன்னபடி.

பிரதிபேதங்கள்

கண்ணி 1. சீர்பூத்த.

5. புரந்தரனும் இக்கூற்றுக்கு.

9. சேயதிருப்.

12. நேராது கண்ட திறலோனும்.

13. திண்ககன.

22. கூடலார் சங்கமத்துக்.

25. தெள்ளித்தம்.

29. அவந்திகைமன்.

31. மொழிந்தனைத்தும்.

38. தோன்றிய.

51. நீருட் கவர்ந்தெல்லாம்.

55. சென்றொழுகும் தன்மையிற்.

60. தென்றலா லம்பொற்.

61. திரிபுண்ட்ர வெண்ணிலா.

70. கடவுட்காய்.

77. கனநாகக் கோடொன், மனநாணக் காற்றை.

82. கன்னின்ற வர்க்குலகு.

83. சிறந்து.

103. புயங்கம்.

114. நாகைப் பதி.

122. கண்ணுமென்பார்.

135. பலவருகைக்.

137. பெருநிறத்தா ராடம ராட்டின்.

138. படைத்தூட்டு.

140. ஏயுமுறுநர்க்.

172. வாஞ்சித்துயர்த்து.

202. தூக்கித் துகிலுடுமின்.

220. முன்னர்ப் பொருூத.

225. தடுத்த புரவும் தடையோ—கொடுத்தென்.

226. விரைத்தா ரிரைப்பினும்.

232. தின்னு நடு மின்ன.

237. நலம் நோக்கி.

263. நாகு மணிப்புற்று.

264. கொள்ளையாரங்கள் குடியிருக்கும் காவிருக்க.

270. சென்னியர் பின்னியர். பாடற் குழையெலாம்.

298. ஆக்கிய மன்னனும் பார்த்தான் முலைநீலம்.

299. பருகி நெகிழ்ந்து பதைத்தே.

302. முருங்கனக வட்ட முலை.

303. தானுமுள வென்கை திவளு முருவிழியிற் செய்தான்.

327. இந்துவரப்.

346. நிதம்பத் தடாகத்தாள்.

350. வருதியெனத் தேம்பினுள்.

377. பொற்குயிலும்.

383. மொழிந்தவர்.

387. எல்லாரும்.

சிறப்புப் பெயர் அகராதி

(இந்நூலில் மக்கள், இடம், ஆறு முதலியவை வந்துள்ள இடங்கள்.)

எண் : கண்ணி எண்